ரம்ழான் மாதத்தில் மட்டும் 600 பேர் வரை படுகொலை
பக். 14

விலை ரூபா 20
பக்கங்கள் 28

# உதயன்

34c - 27c
தெளிவான காலநிலை

சுடர் 31 | கதிர் 224 | வள்ளுவர் ஆண்டு 2047 | ஆனி 23, வியாழக்கிழமை 07.07.2016

முச்சந்தி முரளி



காலத்தை இழுத்தடிக்க இப்படி யும் ஒரு கதை பாருங்கோ...

# ஜனாதிபதியை மீறி விசாரணை நகராது

## சர்வதேச நீதிபதிகள் விவகாரம் குறித்த மங்களவின் கருத்தை நிராகரிக்கின்றனர் அரசியல் அவதானிகள்

கொழும்பு, ஜூலை 7
போர்க்குற்ற விசாரணைகளில் வெளிநாட்டு நீதி பதிகளுக்கு இடமில்லை என்று ஜனாதிபதி மைத் திரி பால சிறிசேன கூறுவதை அவரது தனிப்பட்ட கருத்து என ஒதுக்கிவிட முடியாது. வெளிநாட்டு நீதி பதிகளை நியமிக்கும் அதிகாரம் அவருக்கு மட் டுமே இருக்கும் நிலையில் இந்த விடயத்தில் "ஜனாதி பதி மற்றும் பிரதமர்களின் கருத்துக்களில் பய னில்லை, கலந்துரையாடல் மூலமே இறுதி முடிவு எட்டப்படும்" என்று வெளிவிவகார அமைச்சர் மங் கள சமரவீர கூறுவதை ஏற்றுக்கொள்ள முடியாது. ஜனாதிபதியின் கருத்தில் மாற்றம் ஏற்படாமல் போர்க்குற்ற விசாரணைகள் இடம்பெறுவது சாத்தி யமானது அல்ல.
இவ்வாறு தெரிவிக்கிறார்கள் அரசியல் அவதானிகள்.
"இலங்கை அரசமைப்பின் அடிப்படையில் பன் னாட்டு நீதிபதிகளை நியமிப்பதற்கான நியமன அதிகாரம் ஜனாதிபதியிடமே இருக்கின்றது" என் பதைக் கவனத்தில் கொள்ள வேண்டும்" என்கிறார் சட்டத்தரணி நிரான் அங்கிரல். "பன்னாட்டு நீதிபதி கள் போர்க்குற்ற விசாரணையில் தேவையில்லை என்று ஜனாதிபதியும், பிரதமரும் தெரிவித்திருப்ப தானது அவர்களுடைய தனிப்பட்ட கருத்துக்கள். அது இறுதி முடிவல்ல. பக்.23

## வெளிவிவகார செயலாளர் அதிரடி மாற்றம்

கொழும்பு, ஜூலை 7
வெளிவிவகார அமைச்சின் செயலராக எசல வீரக்கோன் புதிதாக நியமிக்கப்பட்டார். ஓகஸ்ட் மாதம் முதலாம் திகதி இந்தப் புதிய பதவியை அவர் ஏற்றுக்கொள்வார்.
இவ்வாறு வெளிவிவகார அமைச்சர் அறிவித்தார்.
மூத்த இராஜதந்திரிகளில் ஒருவரான எசல வீரக்கோன், தற்போது புதுடில்லியில், இலங்கைத் தூதுவராகப் பணியாற்றி வருகிறார்.
இதனிடையே, தற்போது வெளிவிவகாரச்செயலராகப் பணியாற்றும் சித்ராங்கனி வகீஸ்வரா, புதுடில்லியில் இலங்கைத் தூதுவராகப் பொறுப்பேற்பார் என்றும் அமைச்சர் தெரிவித்தார். (வ-5)

## பஸ் கட்டண அதிகரிப்பு; அமைச்சரவையே முடிவெடுக்குமாம்

கொழும்பு, ஜூலை 7
பஸ் கட்டண மாற்றம் தொடர் பில் அமைச்சரவைக் கூட்டத் தின் போதே தீர்மானம் எடுக் கப்படும் என்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரி வித்தார்.
ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கும் தனியார் பஸ் உரிமையாளர் சங்கங் களுக்குமிடையில் ஜனாதி பதியின் இல்லத்தில் நேற்று சந்திப்பு இடம்பெற்றது.
'பஸ் கட்டண மாற்றம் தொடர் பில், நியமிக்கப்பட்டுள்ள நிபு ணர்கள் குழுவிடம், தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்க பிரதிநிதிகளும் தமது கருத்தை முன்வைப்பதற்கான வாய்ப் புப் பெற்றுத்தரப்படும்.
அந்த கருத்துக் களுடன், பக்.24

## இராணுவத்தைத் தண்டிக்க பெரும் சதி இடம்பெறுகிறது

புலம்புகிறார் ஜி.எல். பீரிஸ்



கொழும்பு, ஜூலை 7
இராணுவத்தினரைத் தண் டிக்கப் பெரும் சதி இடம் பெறுகின்றது. இராணுவத் தைத் தண்டிப்பதாயின் 2009ஆம் ஆண்டு போர் நிறைவடைந்த போது நாட்டில் பக்.24

## போர்க்குற்ற விசாரணை நீதிமன்று; மைத்திரி கருத்து இறுதி முடிவல்ல

இப்படிக் கூறுகின்றார் மங்கள



கொழும்பு, ஜூலை 7
போர்க்குற்ற விசாரணையில் பன்னாட்டு நீதிபதிகள் தேவை யில்லை என்று ஜனாதிபதி யும், பிரதமரும் தெரிவித்தி ருப்பதானது, அவர்களுடைய கருத்துக்கள். அது இறுதி முடிவல்ல. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பன்னாட்டு நீதிபதிகள் வேண்டும் என்பதில் விடாப்பிடியாக இருக்கின்றது. இவை இரண் டுக்கும் இடைப்பட்ட பல்வேறு வழிகள் இருக்கின்றன. இவ்வாறு தெரிவித்தார் வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர.
அடுத்த ஆண்டு ஆரம்பத்தில் போர்க்குற்ற விசாரணைக்கான நீதிமன்றங்கள் தொடர்பான அடிப்படை வரைவு கலந்துரையாட லுக்கு தயாராகிவிடும் எனவும் அவர் குறிப்பிட்டார்.
(விரிவு: பக்கம் 02)

# கைது வேட்டையை மீண்டும் வடக்கில் ஆரம்பித்தது ரிஐடி

## முன்னாள் போராளிகளான தம்பதிகள் ஒட்டுசுட்டானில் நேற்றுமுன்தினம் கைது

முல்லைத்தீவு, ஜூலை 7
ஒட்டுசுட்டான்பிரதேசசெயலாளர் பிரிவுக்குட்பட்ட சிவநகரைச் சேர்ந்த முன்னாள் போராளிக ளான கணவன் மற்றும் மனை வியைப் பயங்கரவாத விசார ணைப் பிரிவினர் நேற்றுமுன் தினம் பின்னிரவில் கைது செய் தனர். இதனை ஒட்டுசுட்டான் பொலிஸார் உறுதிப்படுத்தினர்.
தமிழீழ விடுதலைப் புலிகள் இயக் கத்தின் முன்னாள் போராளிக ளான கேதீஸ்வரன் மற்றும் அவ ரது மனைவியான சாவித்திரி ஆகியோரே கைது செய்யப்பட் டனர்.
மூன்று வாகனங்களுடன் வந்த இருபதுக்கும் மேற்பட்டவர்களால் கேதீஸ்வரனின் வீடு சுற்றிவளைக் கப்பட்டது. வீட்டில் இருந்த சாவித்திரி பக்.24

## அத்தியாவசியப் பொருள்களின் விலைகளுக்குக் கட்டுப்பாடு

அமைச்சர் கயந்த தகவல்

கொழும்பு, ஜூலை 7
பத்து அத்தியாவசியப் பொருள்களின் விலைகள் ஓரிரு நாள் களுக்குள் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்படும் என்று அமைச் சர் கயந்த கருணாதிலக தெரிவித்தார்.
அத்தியாவசியப் பொருள்களின் விலைகள் அசாதாரணமான முறை யில் அதிகரித்துள்ளன. அடிப்படையற்ற முறையில் விலை அதி கரிப்பது குறித்து ஆராய்ந்து நடவடிக்கை மேற்கொள்வதற்கு பிரத மரின் தலைமையில் விசேட அமைச்சர்கள் அடங்கிய குழு நியமிக் கப்பட்டுள்ளது என்றும் அவர் கூறினார்.
(விரிவு: பக்கம் 04)

## பசிலின் கிண்டலுக்கு அரசு நேற்றுப் பதில்

கொழும்பு, ஜூலை 7
நல்லாட்சி அரசு வீட்டில் வளர்க் கும் நாய்களுக்குக்கூட வரி அற விடுகின்றது என்று முன்னாள் அமைச்சர் பசில் ராஜபக்ச சுமத் தியுள்ள குற்றச்சாட்டுக்கு அரசு நேற்றுப் பதிலடி கொடுத்தது.
நாய் வரியை முதலில் அறிமுகப் படுத்தியதே பசில்தான் என்று பிரதி அமைச்சர் கருணாரட்ன பரணவிதாரண தெரிவித்தார்.
அமைச்சரவை முடிவுகளை அறி விக்கும் ஊடகவியலாளர் சந் திப்பு நேற்று, அரச தகவல் திணைக்களத்தில் நடைபெற் றது.
"நல்லாட்சி அரசு வீட்டில் வளர்க் கும் நாய்களுக்கும், ஏன் உடம் புக்குக்கூட வரி அற விடுகின்றது என்று பக்.23

## சிங்கள, முஸ்லிம் மக்களை வடக்கில் மீளக்குடியமர்த்துவதில் அரசு தீவிரம்

விசேட செயலணியும் அமைக்கப்படுகிறது

கொழும்பு, ஜூலை 7
போரின்போது வடக்கி லிருந்து இடம்பெயர்ந்த சிங்கள மற்றும் முஸ் லிம் குடும்பங்களை மீள் குடியமர்த்துவதற்கான நடவடிக்கைகளை அரசு ஆரம்பித்தது.
ரிசாத் பதியுதீன் மற்றும் பைசர் முஸ்தபா ஆகி யோரின் அமைச்சுக் களின் இணைத் தலை மையில் மீள்குடியேற் றச் செயலணியை அமைப்பதற்கு அமைச் சரவை அங்கீகாரம் வழங்கியது.
"வடக்கிலிருந்து இடம் பெயர்ந்த சிங்கள மற் றும் முஸ்லிம் குடும்பங் களில் 21ஆயிரத்து 663 குடும்பங்களுக்கு வீடு கள் தேவைப்படுகின்றன. அதற்கான வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்கும் வகையில் இந்தச் செய லணி செயற்படும்" என்று இணை அமைச்சர வைப் பேச்சாளரான அமைச்சர் கயந்த கரு ணாதிலக தெரிவித் தார்.
அமைச்சரவை முடிவு களை அறிவிக்கும் ஊட கச் சந்திப்பில் அவர் மேலும் தெரிவித்தா வது:
1980ஆம் ஆண்டுக்குப் பின்னர் பல தடவைகள் பக்.23

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போர்க்குற்ற விசாரணை நீதிமன்றம்

## ரணில், மைத்திரி கருத்துக்கள் இறுதி முடிவல்ல

### வெளிவிவகார அமைச்சர் தெரிவிப்பு

கொழும்பு, ஜூலை 7

போர்க்குற்ற விசாரணையில் பன்னாட்டு நீதிபதிகள் தேவையில்லை என்று ஜனாதிபதியும், பிரதமரும் தெரிவித்திருப்பதானது அவர்களுடைய கருத்துக்கள். அது இறுதி முடிவல்ல. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சர்வதேச நீதிபதிகள் வேண்டும் என்பதில் விடாப்பிடியாக இருக்கின்றது. இவை இரண்டுக்கும் இடைப்பட்ட பல்வேறு வழிகள் இருக்கின்றன. அடுத்த ஆண்டு ஆரம்பத்தில் போர்க்குற்ற விசாரணைக்கான நீதிமன்றங்கள் தொடர்பான அடிப்படை வரைவு கலந்துரையாடலுக்குத் தயாராகி விடும்.

இவ்வாறு தெரிவித்தார் வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர.

ஐ.நா. மனித உரிமைகள் சபையின் 32 ஆவது கூட்டத்தொடர் குறித்து விளக்கமளிக்கும் ஊடக சந்திப்பு கொழும்பில் நேற்று நடத்தப்பட்டது. அங்கு அமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்ததாவது:

**கொத்துக்குண்டு விவகாரம்**

இறுதிப் போரின்போது கொத்துக் குண்டுகள் பயன்படுத்தியதாக நான் கருதவில்லை. அப்படி பயன்படுத்தப்பட்டிருப்பின் அது பயங்கரமானது. கொத்துக் குண்டுகளின் பயன்பாடு தொடர்பாக மக்ஸ்வெல் பரணகம வெளியிட்ட கருத்து தேவையற்ற 'பண்டிதக் கருத்து'. அந்தக் கருத்தைப் பார்க்கும்போது இராணுவம் கொத்துக் குண்டுகளைப் பயன்படுத்தியதான தோற்றப்பாடே ஏற்படுகின்றது. கொத்துக்குண்டு உட்பட அனைத்துக் குற்றச்சாட்டுக்கள் தொடர்பிலும் முறையான விசாரணை நடத்தப்படவேண்டும்.

**இராணுவக் குறைப்பு**

எமது அரசு பதவிக்கு வந்தவுடனேயே இராணுவமய நீக்க நடவடிக்கையை ஆரம்பித்தது. இராணுவப் பின்னணியைக் கொண்ட ஆளுநர்களுக்கு பதிலாக சிவிலியன் ஆளுநர்கள் நியமிக்கப்பட்டனர். வடக்கு உட்பட நாட்டின் அனைத்துப் பகுதிகளிலிருந்தும் இராணுவத்தை குறைக்கும் செயற்பாடு 2018 ஆம் ஆண்டாகும்போது நிறைவு செய்யப்படும். ராஜபக்ச அரசு வடக்கில் மட்டுமல்ல நாட்டின் அனைத்து மாவட்டங்களிலும் இராணுவத்தைப் பரப்பியுள்ளது. இதில் நாம் மாற்றத்தை ஏற்படுத்துவோம்.

போரில்லாத வழமை நிலைக்குக் கொண்டுவரும் நடவடிக்கைதான் இது. தற்போது ஈடுபட்டுள்ள அனைத்து வர்த்தக வியாபார நடவடிக்கைகளையும் தவிர்த்துக் கொள்ளுமாறு இராணுவத்தினரிடம் கேட்டுள்ளோம்.

**பன்னாட்டு நீதிபதிகள்**

போர்க்குற்ற விசாரணைகளில் பன்னாட்டு நீதிபதிகளை உள்ளடக்குகின்றமை உட்பட பன்னாட்டு வகிபாகம் தொடர்பான இறுதித் தீர்மானம் அனைத்துத் தரப்பினருடனும் கலந்துரையாடிய பின்னரே எடுக்கப்படும்.

**தண்டனை உறுதி**

நல்லிணக்கம் இல்லையென்றால் நாடு அபிவிருத்தியடையாது. நாட்டின் நாமத்துக்கு எதிராக யார் குற்றம் புரிந்திருந்தாலும் தண்டனை பெற்றுக்கொடுக்கப்படும். இராணுவத்தினரோ, அரசியல்வாதிகளோ அல்லது வேறு நபர்களோ நாட்டுக்கு எதிராகக் குற்றம் புரிந்திருந்தால் நாட்டின் பாதுகாப்புக் கருதி கட்டாயம் தண்டனை பெற்றுக் கொடுக்கப்படும்.

வரலாற்று அடிப்படையில் எமது இராணுவம் மனிதாபிமானம் கொண்ட சிறப்பானது. எமது இராணுவத்தினர் மனிதாபிமானமற்ற செயற்பாடுகளில் ஈடுபட்டிருந்தால், அது அதிகாரம் உள்ளவர்களின் தேவைகளுக்காகவே செய்யப்பட்டிருக்கும். குற்றத்தில் ஈடுபடுவோரைவிட குற்றம் செய்யத் தூண்டுபவர்களே பெரிய குற்றவாளிகள். அவர்களையே முதலில் தண்டிக்க வேண்டும். இறுதிப் போரில் 40 ஆயிரம் பேர் இறந்தார்கள் என குற்றச்சாட்டே முன்வைக்கப்பட்டது. இதன் உண்மை நிலையை ஆராய வேண்டும். இதன்பின்னரே இது பற்றி விளக்க முடியும்.

**அரசியல்வாதிகளே காரணம்**

நாட்டை பேரழிவுக்கு உட்படுத்திய 30 ஆண்டுகால போருக்கு கடும்போக்கு அரசியல்வாதிகளே காரணம். .ஒரு சிறிய மொழிப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதை விடுத்து, அந்தப் பிரச்சினையைப் பூதாகரமாக்கியதன் விளைவையே நாட்டு மக்கள் அனுபவிக்கின்றனர். அப்போதைய அரசியல்வாதிகள் இனவாத நோக்கில் செயற்பட்டமையால், ஒரு சிறிய பிரச்சினைக்கு தீர்வுகாண முடியாமல்போனது. இறுதியில் நாட்டு மக்கள், இன, மத ரீதியில் பிளவுபட்டனர். இரண்டு போராட்டக் குழுக்கள் தோற்றம்பெற்றன. உண்மையை அறிந்து கொள்வதற்கு அனைவருக்கும் உரிமையுண்டு. பொறுப்புக்கூறலின் முக்கியத்துவம் உறுதிப்படுத்தப்படவேண்டும். தவறு நிகழ்ந்திருந்தால் அதற்கான இழப்பீடு வழங்கப்படவேண்டும். அனைத்துக்கும் முன்பதாக நாட்டில் மீண்டும் ஒரு போர் ஏற்படாமல் இருக்க அனைவரும் இணைந்து செயற்படவேண்டும்.

போரை வெற்றிகொண்டாலும் சமாதானத்தை ஏற்படுத்துவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படவில்லை. கடந்த இரண்டு தேர்தல்களிலும் வடக்கு மற்றும் தெற்கில்ஒருமித்தகுரல்கள்வெற்றி பெற்றன – என்றார். (வ-5)

---

## சுகாதாரத்துறை வெற்றிடங்கள்; ஓ.எல்.சித்தியுடன் ஆள் சேர்ப்பு

### யாழ்ப்பாணம் வரும் ராஜிதவிடம் வலியுறுத்தவுள்ளனர் மருத்துவர்கள்

யாழ்ப்பாணம், ஜூலை 7

தாதியர்கள், ஆய்வுகூட பரிசோதகர்கள், மருத்துவ மாதுக்கள், மருந்துக்கலவையாளர்கள், மின்னிதய வரைபட தொழினுட்பவியலாளர்கள் ஆகிய வெற்றிடங்களுக்கு ஜீ.சி.ஈ. சாதாரண தரத்துடன் ஆள்களைச் சேர்க்க வேண்டும்.

இவ்வாறு சுகாதார அமைச்சரிடம் நேரில் கோரிக்கை முன்வைக்கவுள்ளனர் யாழ்ப்பாண மருத்துவர்கள்.

சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத்ன இன்று யாழ்ப்பாணம் வருகிறார். அவருடனான சந்திப்பில் இவை உட்படப் பல கோரிக்கைகள் முன்வைக்கப்படவுள்ளன என்றும் மருத்துவர்கள் தெரிவித்தனர்.

யாழ்ப்பாணத்திலுள்ள மருத்துவர்கள் குழு ஒன்று கொழும்பில் அண்மையில் மத்திய சுகாதார அமைச்சரைச் சந்தித்துக் கலந்துரையாடியது. அந்த மருத்துவர் குழுவே மேற்குறித்த கோரிக்கைகளை முன்வைக்கவுள்ளது.

யாழ்ப்பாணம் வரும் அமைச்சரால் முற்பகல் 10 மணிக்கு யாழ்ப்பாணம் கே.கே.எஸ் வீதியில் ஆயுள்வேத மருந்துக் கூட்டுத்தாபனத்தின் கிளை நிறுவனம் ஒன்று திறந்து வைக்கப்படுகிறது. 11 மணிக்கு யாழ். மாவட்டச் செயலகத்தில் அரச உத்தியோகத்தர்களுக்கான ஆயுள்வேத உற்பத்திகள் பற்றிய செயலமர்வு இடம்பெற இருக்கின்றது.

மதியம் 12 மணிக்கு யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் திணைக்களத்தில் வடக்கு மாகாணத்திலுள்ள மருத்துவர்களுடனான கலந்துரையாடல் இடம்பெற இருக்கின்றது.

அதன்பின்னர், யாழ். போதனா வைத்தியசாலையில் அமைச்சரைக் கௌரவிக்கும் நிகழ்வு இடம்பெறும். யாழ். போதனா வைத்தியசாலையில் தொண்டர்களாகப் பணியாற்றிய 127 பேருக்கு கடந்த வருடம் நியமனம் கிடைத்தது. அதற்காக அமைச்சரைக் கௌரவிக்கும் விழாவை சிறிலங்கா ஜனரஜ சுகாதார சேவைச் சங்கம் ஏற்பாடு செய்துள்ளது.

மருத்துவ துறையான மேற்குறித்த வெற்றிடங்களுக்கு இதுவரை ஜீ.சி.ஈ உயர்தரத்தில் விஞ்ஞானப் பிரிவில் கற்றுச் சித்தியடைந்தவர்களே தெரிவு செய்யப்பட்டனர். இந்தத் தராதரமே பின்பற்றப்பட்டால் வெற்றிடங்களை நிவர்த்தி செய்ய வடக்கில் 20 வருடங்கள் தேவைப்படலாம். தற்போதுள்ள தேவையை நிவர்த்திக்க இந்த யோசனை சரியானதே. 2 வருடங்களுக்கு முன்னர் ஜீ.சி.ஈ கலைப்பிரிவில் சித்தியடைந் தோரை தெரிவு செய்ய அனுமதி கிடைத்த போதும் 75 பேரே விண்ணப்பிக்க 50 பேர் தெரிவாகியிருந்தனர் என்றும் மருத்துவர்கள் தெரிவித்தனர். (வ-4)

---

## கோப் குழுவிலிருந்து விலகினார் வேலுகுமார்

கொழும்பு, ஜூலை 7

உயர்மட்ட அரசியல் அழுத்தங்கள் காரணமாகவே கோப் குழு உறுப்பினர் பதவியிலிருந்து நாடாளுமன்ற உறுப்பினரும் ஜனநாயக மக்கள் முன்னணியின் உப தலைவருமான வேலுகுமார் விலகினார்என்றுகொழும்பு அரசியல் வட்டாரங்களிலிருந்து அறியமுடிந்தது.

ஆளுந்தரப்பின் பிரதான பங்காளிக் கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியிலிருந்து தொடர்ச்சியாக விடுக்கப்பட்ட கோரிக்கையின் பிரகாரமே அவர் இந்த முடிவை எடுக்கவேண்டிய நிலைமைக்குத் தள்ளப்பட்டார் என்றும் தெரியவருகின்றது.

ஐக்கியதேசியக்கட்சியின்கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் இராஜாங்க அமைச்சருமான சட் டத்தரணி சுஜீவ சேனசிங்கவை கோப் குழுவுக்குள் உள்வாங்கும் வகையிலேயே திரைமறைவில் ஐக்கிய தேசிய கட்சி இந்த நகர்வை மேற் கொண்டுள்ளதாகக் குற்றஞ்சாட்டப்பட்டது.

அதற்கு ஆரம்பத்தில் வேலுகுமார் பச்சைக்கொடி காட்டாவிட்டாலும், கடும் அழுத்தம் காரணமாக, இந்தவிட்டுக்கொடுப்பை பின்னர் செய்தார் என்றும் நம்பகரமான வட்டாரங்களிலிருந்து அறிய முடிந்தது.

தமிழ் முற்போக்கு கூட்டணியை பிரதிநிதித்துவப்படுத்தி கோப் குழுவில் அங்கம் வகித்த இவர், சில விடயங்களில் ஐக்கிய தேசியக் கட்சிக்கு சார்பான போக்கை கடைப்பிடிக்காமையும் அழுத்தத்துக்கான காரணமாக கூறப்படுகிறது.

நாடாளுமன்ற உறுப்பினர் வேலுகுமார், கோப் குழுவிலிருந்து விலகுவதாகக்கூறி சபாநாயகருக்கு கையளித்த கடிதத்தின் பிரதி எனக்கும் கிடைத்தது. அதற்கான காரணத்தை அவர் குறிப்பிடவில்லை என்று கோப் குழுவின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான சுனில் ஹந்துனெத்தி தெரிவித்தார்.

பொது முயற்சியாண்மைக்கான நாடாளுமன்றத் தெரிவுக்குழுவிலிருந்து (கோப் குழு) வேலுகுமார் பதவி விலகியமைக்கு அரசியல் காரணம் கிடையாது என்று தேசிய சகவாழ்வு கலந்துரையாடல் அமைச்சரும், ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவருமான மனோ கணேசன் தெரிவித்தார்.

இது தொடர்பில் நேற்று விடுத்த அறிக்கையில், கண்டி மாவட்டத்தின் புதுமுக நாடாளுமன்ற உறுப்பினரான வேலுகுமார், ஏற்கனவே நாடாளுமன்ற சபாநாயகரின் சபை தலைமைக் குழு, அரசமைப்புச் சபையின் வழிகாட்டல் குழுவின் கீழ்வரும் பொது நிர்வாக உபகுழு, மனித வள அபிவிருத்தி, கல்வி ஆகிய அமைச்சுகளின் கண்காணிப்புக் குழு ஆகியவற்றில் உறுப்பினராக இருக்கின்றார். அவரால் முழு நேரத்தையும் இந்தக் குழுக்களில் செலவிட்டு, கண்டி மாவட்ட அபிவிருத்தி நடவடிக்கைகளையும் ஒருசேர முன்னெடுப்பதில் காலநேரப் பிரச்சினை தொடர்ந்து இருந்துவந்தது.

கட்சித் தலைமையுடனான கலந்துரையாடலின் பின்னரே அவர் கோப் குழுவிலிருந்து விலகும் கடிதத்தை சபாநாயகரிடம் கையளித்தார். இதில் வேறு எந்த அரசியல் நோக்கமும் கிடையாது. கோப் குழுவின் நடவடிக்கைகள் தொடர்பில், அந்தக் குழுவின் தலைவர் நண்பர் சுனில் ஹந்துன்நெத்தியின் தலைமைத்துவம் மீது தனிப்பட்டமுறையில் எனக்கும், தமிழ் முற்போக்குக் கூட்டணிக்கும் முழுமையான நம்பிக்கை உண்டு.

புதிய மத்திய வங்கி ஆளுநர் எவ்விதமாக கோப் குழுவுடன் ஒத்துழைக்கப் போகின்றார் என்பதை நாம் அக்கறையுடன் அவதானிக்கின்றோம் – என்று குறிப்பிடப்பட்டுள்ளது. (வ-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பால் புரைக்கேறி பாலகன் சாவு

யாழ்ப்பாணம், ஜூலை 7

பிறந்து 35 நாள்களேயான குழந்தை உயிரிழந்தது. பால் புரைக்கேறியதனால் உயிரிழந்தது என்று விசாரணையில் தெரிவிக்கப்பட்டது.

சுழிபுரம்- கல்விளானில் நேற்று இடம்பெற்ற சம்பவத்தில் கிருபாகரன் மேசாக் என்ற ஆண் குழந்தை உயிரிழந்தது.

"அதிகாலை 2 மணியளவில் குழந்தை அழுதது. தாயார் பாலூட்டி விட்டு நித்திரையாக்கினார். அதிகாலை 5 மணியளவில் பார்த்த போது, குழந்தை அசைவின்றிக் கிடந்தது. உடனடியாக யாழ். போதனா வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டது. குழந்தை ஏற்கனவே உயிரிழந்து விட்டதாகஅங்கு தெரிவிக்கப்பட்டது என்று உறவினர்கள் தெரிவித்தனர். விசாரணைகளின் பின்னர் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. (வ-4)

## வெளிநாட்டு வங்கிக் கணக்குகள் விவரத்தை திரட்டவுள்ளது அரசு

உலக நாடுகளில் பேணப்பட்டுவரும் இலங்கையர்களுக்கு சொந்தமான வங்கிக் கணக்குகள் தொடர்பான தகவல்களைத் திரட்டுவதற்கு அரசினால் நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

அதற்காக நிதிப் புலனாய்வு பிரிவுக்கு அதிகாரமளிக்கும் வகையில் சட்ட திருத்தம் கொண்டுவரப்படும் என அரசு நேற்றுமுன் தினம் நாடாளுமன்றத்தில் அறிவித்தது.

2006ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க நிதி கொடுக்கல் வாங்கல் அறிக்கையின் சட்டத்திலேயே திருத்தம் கொண்டு வரப்படவுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டது.

நாடாளுமன்றம் நேற்றுப் பிற்பகல் ஒரு மணிக்கு சபாநாயகர் கருஜயசூரிய தலைமையில் கூடியது. வாய்மூல விடைக்கான கேள்வி நேரத்தின் போது நாடாளுமன்ற உறுப்பினர் வாசுதேவ நாணயக்கார எழுப்பியிருந்த கேள்விகளுக்குப் பதிலளிக்கையிலேயே நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்கவும், தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் பிரதி அமைச்சரான நிரோசன் பெரேராவும் மேற்கண்ட தகவலை வெளியிட்டனர்.

2006ஆம் ஆண்டின் 6ஆம் இலக்க நிதி கொடுக்கல் வாங்கல் அறிக்கையிடல் சட்டம், 2006ஆம் ஆண்டின் 5ஆம் இலக்க பணம் தூய்தாக்கல் தடைச் சட்டம் மற்றும் 2005ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க பயங்கரவாத நிதியளிப்புத் தடுப்பு சமவாய சட்டம் ஆகியவற்றின் அடிப்படையிலேயே நிதிப் புலனாய்வுப் பிரிவுக்கு அதிகாரமளிக்கப்பட்டுள்ளது என்று பிரதி அமைச்சர் நிரோசன் பெரேரா இதன் போது குறிப்பிட்டார். (வ-4)

Galaxy Star
வெற்றி வாரம் 072 திகதி 06.07.2016
10 01 09 13 41
அடுத்த புதன்கிழமை
சுப்பர் பரிசுப் பொதி
ரூ. 70, 70, 480/-
2016/07/10

சனிக்கிழமை அதிர்ஷ்டம்
வெற்றி வாரம்: 2780 திகதி: 2016-06-07
வெற்றி எண்கள் மற்றும் ஆங்கில எழுத்து
01 36 66 70 V
போனஸ் இல. 67
சனிக்கிழமை ஜக்பொட்
ரூ. 1,38,10,150/-
Web: www.dlb.lk
பல நிற டிக்கட்டுக்கள் 2016.07.09 ஆம் திகதி சனிக்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும்.
வெற்றி பெறும் டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

வெற்றிடம்

01. கணக்குப் பதிவாளர் .
முன் அனுபவமுள்ளவர்கள் (இருபாலாரும்)

02. வரவேற்பாளர்.
முன் அனுபவமுள்ளவர்கள் விரும்பத்தக்கது (பெண்) (பயிலுனரும் விண்ணப்பிக்கலாம்)

03. மருந்து வழங்குனர்.
அனுபவமுள்ளவர்கள்- இருபாலாரும்
சம்பளம் :- 15, 000/- க்கு மேல்

04. மருந்து வழங்குனர்.- பயிலுனர்- இருபாலாரும்

இடம்: யாழ் வைத்திய சாலை,
315, பலாலி வீதி, பரமேஸ்வரா சந்தி, திருநெல்வேலி.
காலம்: சனி (09.07.2016)
நேரம்: காலை 10.00 மணி

தொலைபேசி: 021 222 3533/1011, 07777 81005
சுய விவரக்கோவையுடன் நேரில் வரவும்

## திருகோணமலை - மதவாச்சி ரயில் பாதையை அமைக்க டில்லி ஆர்வம்

கொழும்பு, ஜூலை 7

300 மில்லியன் டொலர் செலவில், திருகோணமலையில் இருந்து மதவாச்சிக்குப் புதிய ரயில் பாதையை உருவாக்குவதில் இந்தியா ஆர்வம் காட்டுகின்றது.

இவ்வாறு இந்திய ஆங்கில ஊடகமான பி.ரி.ஐ. தகவல் வெளியிட்டது.

இந்தியாவுக்குப் பயணம் மேற்கொண்ட பன்னாட்டு வர்த்தக மற்றும் மூலோபாய அபிவிருத்தி அமைச்சர் மலிக் சமரவிக்கிரம, இலங்கையின் ரயில் வலையமைப்பை அபிவிருத்தி செய்வது தொடர்பாக இந்திய அதிகாரிகளுடன் பேச்சுக்களை நடத்தினார்.

இந்தியாவின் ரயில் துறை பிரதி அமைச்சர் மனோஜ் சின்ஹாவுடன் நடத்திய பேச்சுக்களின் போது, ரயில் பாதைகளின் சமிக்ஞை மற்றும் தொடர்பாடல் கட்டமைப்பை வலுப்படுத்துவது தொடர்பாக ஆராயப்பட்டது. பேச்சுக்களில் இந்திய வெளிவிவகார அமைச்சு மற்றும் ரயில் துறை மூத்த அதிகாரிகளும் கலந்து கொண்டனர்.

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி கடந்த ஆண்டு இலங்கைக்கு மேற்கொண்ட பயணத்தின் போது, 318 மில்லியன் டொலர் பெறுமதியான ரயில் கடன் திட்டம் ஒன்றை அறிவித்தார். கடன்திட்டத்தை, ஆறு டீசல் அலகுகளையும், 160 பயணிகள் பெட்டிகள், 160 கிலோ மீற்றர் ரயில் பாதை சீரமைப்பு என்பனவற்றுக்குப் பயன்படுத்த இலங்கை திட்ட மிட்டது.

இலங்கையில் பல்வேறு ரயில் திட்டங்களுக்காக இந்தியா 1 பில்லியன் டொலருக்கும் அதிகமான கடனுதவியை வழங்கியுள்ளது.(வ-5)



இலங்கை ஆயுர்வேத மருந்துக் கூட்டுத்தாபனத்தின் புதிய கிளை அலுவலகம்.

யாழ்ப்பாணம் கே.கே.எஸ் வீதியில்
இலக்கம்: 169இல் அமைந்துள்ள இடத்தில்

வட மாகாண ஆளுநர்
கௌரவ றெஜினோல்ட் குரே
வட மாகாணத்தின் முதலமைச்சர்
கௌரவ சி.வீ. விக்னேஸ்வரன்
ஆகியோரது முன்னிலையில்

சுகாதார, போசாக்கு மற்றும் தேசிய சுகாதார அமைச்சர்
கௌரவ வைத்திய கலாநிதி ராஜித சேனாரத்ன
அவர்களின் தலைமையின் கீழும்

2016 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 07 ஆம் திகதி
அன்று சுப வேளையாகிய மு.ப. 10.00 மணிக்கு
திறந்து வைக்கப்படவுள்ளது.

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

## ஆசிரியர் நீதிமன்றில் சரண்

### மாணவியுடன் தவறாக நடக்க முற்பட்ட குற்றச்சாட்டு கல்வி அதிகாரிகளின் விசாரணையில் உறுதியானதையடுத்து

முல்லைத்தீவு, ஜூலை 7

துணுக்காய் கல்வி வலயத்துக்குட்பட்ட பாடசாலை ஒன்றில் மாணவியுடன் துர்நடத்தைக்கு முற்பட்டதாகக் குற்றஞ்சாட்டப்பட்டிருந்த ஆசிரியர், நேற்று சட்டத்தரணி ஊடாக முல்லைத்தீவு நீதிவான் மன்றில் சரணடைந்தார். அவரை விளக்கமறியலில் வைக்க நீதிமன்று உத்தரவிட்டது.

துணுக்காய் கல்வி வலயத்துக்கு உட்பட்ட பாடசாலை ஒன்றில் கடமையாற்றும் ஆசிரியர் மீது, துர்நடத்தைக்கு முற்பட்டார் என்ற குற்றச்சாட்டுச் சுமத்தப்பட்டது. அந்த ஆசிரியர் யாழ்ப்பாணத்தில் இருந்து குறித்த வலயப் பாடசாலைக்குச் சென்று ஆசிரிய விடுதியில் தங்கியிருந்து கடமையாற்றுகிறார்.

ஆசிரியர், மாணவியுடன் 3 மாதகாலமாக தவறாக நடக்க முற்பட்டுள்ளார். ஆசிரியர் மீதுள்ள அச்சத்தினால் இந்த விடயத்தை மாணவி வெளியில் சொல்லாமல் மறைத்துள்ளார். ஒரு கட்டத்தில் ஆசிரியர் மாணவியை கட்டாயப்படுத்தி துர்நடத்தையில் ஈடுபடுவதற்கு முற்பட்டுள்ளார். இதன் போது மாணவியால் குறித்த சம்பவம் தொடர்பாக பாடசாலை அதிபருக்கு எழுத்து மூலம் தெரியப்படுத்தப்பட்டது. தொடர்ந்து சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அதிபர் மூலம் தகவல் வழங்கப்பட்டது.

இது தொடர்பாக விசாரணைகளை மேற்கொண்டு அறிக்கை சமர்ப்பிக்குமாறு மாகாண கல்வி திணைக்களம் அறிவுறுத்தியதற்கு அமைவாக , வலயக் கல்வி அலுவலகத்தால் விசாரணை மேற்கொள்ளப்பட்டு அறிக்கை அனுப்பி வைக்கப்பட்டது. பின்னர் மாகாண அதிகரிகளும் விசாரணை நடத்தினர். இது தொடர்பாக அடுத்த கட்ட நடவடிக்கையாகச் சட்டப்படி நீதிமன்றினூடாக நடவடிக்கை எடுக்கப்படுமென தீர்மானிக்கப்பட்டது என்று துணுக்காய் கல்வி வலய அதிகாரிகள் தெரிவித்தனர்.

இந்த நிலையில் நேற்றுமுன்தினம் சட்டத்தரணி ஊடாக குறித்த ஆசிரியர் முல்லைத்தீவு நீதிவான் மன்றில் சரணடைந்தார். வழக்கை விசாரணை செய்த பதில் நீதிவான், ஆசிரியரை 14 நாள்கள் விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார்.

இதேபோன்ற குற்றச்சாட்டுகளில் யாழ். மாவட்டத்தில் இரண்டு பாடசாலைகளினது ஆசிரியர்கள் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். (வ-4,21,92)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அத்தியாவசியப் பொருள்களின் விலைகளுக்குக் கட்டுப்பாடு

## ஓரிரு தினங்களில் நடவடிக்கை என அமைச்சர் கயந்த தெரிவிப்பு

கொழும்பு, ஜூலை 7

பத்து அத்தியாவசிய உணவுப் பொருள்களின் விலை இன்னும் ஓரிரு நாள்களில் கட்டுப்பாட்டுக்குள்கொண்டுவரப்படவுள்ளது. இவ்வாறு அமைச்சரவை இணைப் பேச்சாளர் அமைச்சர் கயந்த கருணாதிலக்க தெரிவித்தார். அமைச்சரவைத் தீர்மானங்களை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பு நேற்று நடந்தது. அதில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

அரிசி, சமையல் எரிவாயு, சிமெந்து, கடலை, பால்மா, ரின் மீன், சீனி, நெத்தலி உள்ளிட்ட 15 வகையான பொருள்கள் அத்தியாவசியப் பொருள்கள் என்று ஏற்கனவே வர்த்தமானியில் அறிவிக்கப்பட்டது. அவற்றின் விலைகள் அசாதாரணமான முறையில் அதிகரித்துள்ளன. அடிப்படையற்ற முறையில் விலை அதிகரிப்பது குறித்து ஆராய்ந்து நடவடிக்கை மேற்கொள்வதற்கு பிரதமரின் தலைமையில் விசேட அமைச்சர்கள் அடங்கிய குழு நியமிக்கப்பட்டது.

இந்தக் குழு அத்தியாவசியப் பொருள்களின் விலை அதிகரிப்பைக் கட்டுப்படுத்துவதற்கு எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் குறித்துப் பரிந்துரைகளை முன்வைக்கவுள்ளது. தெரிவு செய்யப்பட்ட 10 அத்தியாவசிய உணவுப்பொருள்களின் விலைகளை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

அதிக விலைக்கு அத்தியாவசியப் பொருள்களை விற்பனை செய்யும் வியாபாரிகளை சட்டத்துக்கு முன் கொண்டுவர நாடுமுழுவதும் விசேட தேடுதல்களை மேற்கொள்ளத் தீர்மானிக்கப்பட்டுள்ளது - என்றார். (ற-5)

> அத்தியாவசியப் பொருள்களின் விலைகள் அசாதாரணமான முறையில் அதிகரித்துள்ளன. அடிப்படையற்ற முறையில் விலை அதிகரிப்பது குறித்து ஆராய்ந்து நடவடிக்கை மேற்கொள்வதற்கு பிரதமரின் தலைமையில் விசேட அமைச்சர்கள் அடங்கிய குழு நியமிக்கப்பட்டுள்ளது.

**உடனடி வேலையாள்கள் தேவை**

ரொட்டி, அப்பம், Fried rice போன்றவை தயாரிக்கத் தெரிந்தவர்கள் உடன் தொடர்பு கொள்ளவும்.
கவர்ச்சிகரமான சம்பளம் வழங்கப்படும்.
(வெளி மாவட்டத்தவர்கள் விரும்பத்தக்கது)
(சாப்பாடு, தங்குமிட வசதி இலவசம்)

**072 133 7795**

யாழ் மாநகரில்.....
**சிங்கள மொழி வகுப்புக்கள்**
09,10 JULY-2016 SAT,SUN- 8.30 am
ஆசிரியர்
**R. வினோஷன் (Reading DSAM)**
இடம்: SCIENCE HALL
கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம்.
மேலதிக விவரங்களுக்கு: 071 526 5264



**நாரந்தனை சைவ மகா சபையின் வருடாந்த பொதுக்கூட்டம்**
(தான்தோன்றி ஸ்ரீ மனோன்மணி அம்பாள் ஆலயம்
09.07.2016

அம்பிகை அடியார்களே!

நிகழும் துர்முகி வருடம் ஆனித்திங்கள் 25 ஆம் நாள் (09.07.2016) சனிக்கிழமை பகல் 9.30 மணியளவில் தான்தோன்றி ஸ்ரீ மனோன்மணி அம்பாள் ஆலய அன்னதான மண்டபத்தில் சபைத்தலைவர் திரு.வே. துரைராசா அவர்களின் தலைமையின் கீழ் மேற்படி கூட்டம் நடைபெற அம்பிகையின் அருள் கூடியுள்ளது.

அத்தருணம் சபை அங்கத்தவர்கள், அம்பிகை அடியார்கள் யாவரும் வருகை தந்து பங்குபற்றுமாறு பணிவன்புடன் கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.

சைவமகாசபை,
நாரந்தனை. (J/2687) (12.18)

திரு.சு இராமலிங்கம்
செயலாளர்.
077 605 4082

# பசிலின் நாய்களைப் பராமரித்த ஐந்து கடற்படைச் சிப்பாய்கள்

## விசாரணைகளில் அம்பலமானது

கொழும்பு, ஜூலை 7

முன்னாள் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்சவின் வீட்டு நாய்கள் பராமரிப்புப் பணியில் கடற்படையினர் முழு நேரமாக ஈடுபடுத்தப்பட்டனர். பெரிய மோசடிகள், ஊழல்கள் தொடர்பில் விசாரணை மேற்கொள்ளும் ஜனாதிபதி ஆணைக் குழுவின் விசாரணையில் மேற்படி விடயம் பகிரங்கமாகியது.

பசில் ராஜபக்ச வளர்த்த கோல்டன் ரெட்ரிவேர்ஸ் நாய்களின் கூண்டைப் பராமரிப்பதற்கு ஐந்து கடற்படையினர் முழு நேரப் பணியில் ஈடுபடுத்தப்பட்டனர். இந்த உயர் ரக கலப்பு இன நாய்கள் வளர்க்கப்பட்ட கூண்டு முற்றிலும் குளிரூட்டப்பட்ட வசதியைக் கொண்டிருந்தது. வளர்த்த இரண்டு நாய்களில் ஒன்று சென்னையில் இருந்து இரண்டு இலட்சம் ரூபாவுக்கு வாங்கப்பட்டது.

பசில் ராஜபக்ச பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் என்ற வகையில் 7 பாதுகாப்பு அதிகாரிகள் சட்ட ரீதியாக நியமிக்கப்பட்டிருந்தனர். அதற்கு மேலதிகமாக 148 இராணுவம் மற்றும் கடற்படையினரை உள்ளடக்கிய பாதுகாப்பு அணி அவருக்கு வழங்கப்பட்டது.இவர்களில் பலர் நாய்க் கூண்டைப் பராமரிப்பது போன்ற பசில் ராஜபக்ச குடும்பத்தின் தனிப்பட்ட பணிகளில் ஈடுபடுத்தப்பட்டனர். நாய்க் கூண்டைப் பராமரித்த கடற்படையினருக்கு கடற்படை ஊதியம் வழங்கியது. இந்தப் பணிகளுக்காக இவர்களுக்கு மேலதிக கொடுப்பனவு 5 ஆயி ரம் ரூபாவும் வழங்கப்பட்டது.

தலைமைப் பொலிஸ்துறை ஆய்வாளர் ரஞ்சித் ராஜபக்சவும், உதவி ஆய்வாளர் ஹேரத்தும் மேற்கொண்ட விசாரணைகளில் இருந்து இந்தத் தகவல்கள் தெரியவந்தன என்று மூத்த அரச சட்டவாளர் ஜனக பண்டார, ஆணைக்குழு விசாரணைகளின்போது தெரிவித்தார். (ற-5)

# ஏ.எல். பரீட்சை ஒகஸ்ட் 2இல் ஆரம்பம்

ஜீ.சீ.ஈ. உயர்தரப் பரீட்சை ஒகஸ்ட் 2ஆம் திகதி ஆரம்பமாகி ஒகஸ்ட் 27ஆம் திகதிவரை நடைபெறும் என்று பரீட்சைகள் திணைக்களம் அறிவித்தது.

பரீட்சைக்கு இம்முறை 2 இலட்சத்து 40 ஆயிரத்து 991 பாடசாலைப் பரீட்சார்த்திகள் தோற்றுகின்றனர். அவர்களுக்கான பரீட்சை அனுமதி அட்டைகள் பாடசாலைகளுக்கு அனுப்பிவைக்கப்பட்டன என பரீட்சைகள் ஆணையாளர் தெரிவித்தார்.

74 ஆயிரத்து 614 தனிப்பட்ட பரீட்சார்த்திகளினதும் அனுமதி அட்டைகள் அவர்களது முகவரிகளுக்கு தபாலில் அனுப்பிவைக்கப்பட்டன. குறிப்பிட்ட தினத்தில் விண்ணப்பப்படிவங்களை அனுப்பி அனுமதி அட்டை கிடைக்காத தனிப்பட்ட பரீட்சார்த்திகள் , தாம் விண்ணப்பித்த விண்ணப்பப்படிவத்தின் பிரதி, பரீட்சைக்காகச் செலுத்திய பற்றுச்சீட்டுப் பிரதி, பதிவுத் தபால் செய்த பற்றுச்சீட்டுப் பிரதி என்பவற்றை இணைத்து பரீட்சைத் திணைக்களத்தின் பாடசாலை பரீட்சை ஏற்பாட்டுப் பிரிவிடம் கையளித்து அனுமதி அட்டையைப் பெற்றுக்கொள்ள முடியும் எனவும் ஆணையாளர் குறிப்பிட்டார். (வ-4)

**பதவி வெற்றிடம்**

இலங்கை தேசிய நிர்மாணிகள் சங்க வடமாகாண கிளையினால் பின்வரும் பதவிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**01. நிர்வாக உத்தியோகத்தர்**
தகைமை: 5 வருடகால சேவை அனுபவம்
ஆங்கில அறிவு (சிங்களம், ஒப்பந்தங்கள் பற்றிய அறிவு மேலதிக தகைமையாகக் கொள்ளப்படும்.)
வயதெல்லை: 35 வயதிற்கு மேற்பட்டவர்கள்

**02. முகாமைத்துவ உதவியாளர்**
தகைமை: க.பொ.த உயர்தரம் சித்தி
ஆங்கில அறிவு மற்றும் கணினி

தகுதியானவர்கள் தமது சுயவிவரக்கோவையை 18.07.2016 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடிய வகையில் கீழ்வரும் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.

இலங்கை தேசிய நிர்மாணிகள் சங்கம்
வடமாகாணம்.
இல. 124, இராசாவின் தோட்டம் வீதி,
யாழ்ப்பாணம்.
(J 2679) (12.18)

வாடகைக்கு **071 520 1751**
வெள்ளவத்தை Roxy theater அருகில் மூன்று அறைகளுடன் மாடி Flat ,kitchen இரண்டு Toilats உள்ளது. 6/12 மாதங்கள் வாடகைக்குள் சிறிய குடும்பம் விரும்பத்தக்கது. அல்லது தனி அறை வசதிகள் மாணவர்களுக்கு வழங்கப்படும்

ASTROLOGY SOFT WARES BASED ON
**வாக்கிய பஞ்சாங்கம்**
ICS நிறுவனத்தாரின் வாக்கிய பஞ்சாங்க முறையிலான Softwares விற்பனைக்கு துல்லியமான கணிதம் எல்லா நாடுகளுக்குமானது திருமணப் பொருத்தம், சுபமுகூர்த்தம், குழந்தை பெயர் நியுமராஜி உள்ளடக்கப்பட்டுள்ளது. ஜாதகம், 7,11,21,115 பக்கங்களில் பிரின்ட் செய்யும் வசதி
கமலநாதன்
**077 789 1945**

# வரிச் சலுகையால் ரூ. 4 ஆயிரம் கோடி வருமான இழப்பு

கொழும்பு, ஜூலை 7

மோட்டார் வாகன வரிச்சலுகையால், கடந்த இரண்டு ஆண்டுகளில் 4 ஆயிரம் கோடி ரூபா வரி வருமான இழப்பு ஏற்பட்டது என்று நிதி அமைச்சு தெரிவித்தது.

வாகன வரிச்சலுகை அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்பட்டமையால், 2014ஆம் ஆண்டு 2 ஆயிரத்து 800 கோடி ரூபா வருமான இழப்பு ஏற்பட்டது.2015ஆம் ஆண்டு ஆயிரத்து 200 கோடி ரூபா இழப்பு ஏற்பட்டது. 2015ஆம் ஆண்டு 6 லட்சத்து 68 ஆயிரத்து 907 வாகனங்கள் புதிதாகப் பதிவு செய்யப்பட்டன என்று நிதி அமைச்சு தெரிவித்தது.

(ற-5-22)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொலிஸாரின் திடீர்த் தேடுதலில் மாட்டியது 2,000 போத்தல் கோடா

## குமாரசாமிபுரம், கட்டைக்காடு பகுதிகளில்



கிளிநொச்சி, ஜூலை 7
கிளிநொச்சியில் இரு இடங்களில் மேற்கொள்ளப்பட்ட திடீர் தேடுதலில் 2 ஆயிரத்து 190 போத்தல் கோடா கைப்பற்றப்பட்டது. சந்தேகத்தின் பேரில் ஒருவர் கைது செய்யப்பட்டார் என்று தர்மபுரம் பொலிஸார் தெரிவித்தனர்.

குமாரசாமிபுரம், கட்டைக்காடு ஆகிய இடங்களில் நேற்று சிறப்பு அதிரடிப்படையினரும் தர்மபுரம் பொலிஸாரும் இணைந்து தேடுதல் நடத்தினர். குமாரசாமிபுரத்தில் ஆயிரத்து 140 போத்தல்கள் அடங்கிய 6 பரல் கோடாவும், கட்டைக்காட்டில் ஆயிரத்து 50 போத்தல்கள் அடங்கிய 5 பரல் கோடவும் கைப்பற்றப்பட்டன.

சந்தேகத்தின்பேரில் கைது செய்யப்பட்டவரிடம் விசாரணைகள் நடத்தப்படுகின்றன என்று பொலிஸார் தெரிவித்தனர். (ரு-21,ரி3)

# பிரகீத்தைக் கடத்திச் சென்றவர்கள் ஜனாதிபதி செயலகத்துடன் பேசினர்

## குற்றப்புலனாய்வுப் பிரிவினர் நீதிமன்றில் தெரிவிப்பு

கொழும்பு, ஜூலை 7
கடத்தப்பட்டுக் காணாமல் ஆக்கப்பட்ட கேலிச் சித்திரக் கலைஞர் பிரகீத் எக்னெலிகொடவை தடுத்து வைத்திருந்த கிரிதலை மற்றும் அக்கரைப்பற்று இராணுவ முகாம்களிலிருந்து ஜனாதிபதி செயலகத்திலுள்ள அதிகாரிகள் சிலருக்கு தகவல்கள் பறிமாறப்பட்டமை தெரிய வந்துள்ளது.

2010ஆம் ஆண்டு ஜனவரி 25ஆம் திகதி ஊடகவியலாளர் பிரகீத் எக்னெலிகொட கடத்தப்பட்டு காணாமல் ஆக்கப்பட்ட சம்பவம் தொடர்பான வழக்கு நேற்றுமுன்தினம் ஹோமாகம நீதிவான் மன்றில் விசாரணைக்கு எடுக்கப்பட்டது. அங்கு குற்றப் புலனாய்வுப் பிரிவு பொலிஸார் மேற்படி தகவலை நீதிவானிடம் முன்வைத்தனர்.

பிரகீத் எக்னெலிகொட கடத்தல் சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள பிரதான சந்தேகநபரின் தொலைபேசி உரையாடல்கள் ஆராயப்பட்டன. அந்த நபர் ஊடகவியலாளர் எக்னெலிகொட தொடர்பில் ஜனாதிபதி செயலகத்தில் கடமையாற்றிய அதிகாரிகள் சிலருடன் கலந்துரையாடியுள்ளார்.

ஜனாதிபதி செயலகத்தில் கடமையாற்றிய சம்பந்தப்பட்ட அதிகாரிகள் பயன்படுத்திய தொலைபேசி இணைப்புகளுக்கான சிம் அட்டைகள் ஜனாதிபதியின் முன்னாள் செயலாளரின் பெயரால் விநியோகிக்கப்பட்டவை என்பதும் விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது - என்று குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தினர் தெரிவித்தனர்.

2006ஆம் ஆண்டு ஒகஸ்ட் முதலாம் திகதி முதல் 2010ஆம் ஆண்டு ஏப்ரல் முதலாம் திகதிவரை கிரிதலை இராணுவ முகாமிலிருந்து அக்கரைப்பற்று முகாமுக்கு வந்து சென்றவர்களின் விவரங்கள் அடங்கிய ஆவணங்களை கையளிக்கவேண்டும்- என்று குற்றப் புலனாய்வுப் பிரிவினர் முன்வைத்த வேண்டுகோளை நீதிவான் ஏற்றுக் கொண்டார். அந்த ஆவணங்களைக் கையளிக்குமாறு இராணுவத் தளபதிக்கு உத்தரவிட்டார். (ரு-5)




முதிரை மரக்குற்றிகளைக் கடத்திய படி ரக வாகனம் ஒன்று ஒட்டுசுட்டான் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டது. நேற்றுமுன்தினம் மாங்குளம் - முல்லைத்தீவு வீதியால் பயணிக்கும்போதே இந்த வாகனம் கைப்பற்றப்பட்டது. வாகனம் பொலிஸ் நிலையத்தில் தடுக்கப்பட்டுள்ளது. படி வாகனச் சாரதி கைது செய யபபட்டார். (ரு-21,ரி7)

அகமகிழ்ந்து பாராட்டி வாழ்த்துகின்றோம்



எமது பாடசாலையில்
கணிதபாட ஆசிரியராகப்
பணியாற்றிய
திரு.
சின்னத்துரை கணேசராஜா
அவர்கள்
இலங்கை அதிபர் சேவை தரம் – III
இந்த பதவி உயர்வு பெற்றமையை மனதார
வாழ்த்தி மகிழ்வதோடு அவர் கல்விச் சேவையில்
மேலும் உயர்வுகள் அனைத்தையும்
பெற்று உயர்வடைய மனநிறைவுடன்
வாழ்த்துகின்றோம்.
ஆசிரியர் நலன்புரிகழகம்
கிளி/வேரவில் இந்து கா.இ.க.பாடசாலை
இத்தாவில் பளை.

காரைநகர் கிழவன்காடு கலாமன்றம்
அறநெறிப் பாடசாலை நடத்தும்
மாணிக்கவாசகர் குருபூசை நிகழ்வு - 2016

இடம் : கிழவன்காடு கலாமன்ற மனோன்மணி கலையரங்கு, காரைநகர்.
காலம் : 2016.07.08 வெள்ளிக்கிழமை பி.ப 6.00 மணி

நிகழ்ச்சிகள்
கலாமன்ற ஆசிரியர்களும் மாணவர்களும் வழங்கும் புஸ்பாஞ்சலி, பேச்சு, திருவாசகத்தேனிசை, அரங்க ஆற்றுகை மற்றும் தமிழருவி, காரை த.சிவகுமாரன் வழங்கும் சொற்பொழிவும் சிறப்புப்பட்டிமன்றமும் நடைபெறும்.

சிறப்புப் பட்டிமன்றம்
தலைப்பு:
பெரியபுராணத்தில் விஞ்சி நிற்பது ஆண்டவன் சோதனையா! அடியவர் சாதனையா !
நடுவர்
தமிழருவி காரை.த.சிவகுமாரன்
(அமைப்பாளர், தமிழச்சங்கம், வவுனியா)

குறிப்பு: நிகழ்விற்கான இலவச போக்குவரத்து சேவை கலாமன்ற யாழ் கிளையிலிருந்து பி.ப 5.15 இற்கு ஆரம்பமாகும். (இல. 11. கஸ்தூரியார் ஒழுங்கை, யாழ்ப்பாணம்.)
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.
கிழவன்காடு கலாமன்றம், காரைநகர்.

பாராட்டிக் கௌரவிக்கும் விழா

சிறிலங்கா ஜனரஜ சுகாதார சேவைச் சங்கத்தின் தலையீட்டினால் மாண்புமிகு சுகாதார மற்றும் சுதேச வைத்திய அமைச்சரான
கௌரவ ராஜிதசேனாரத்ன
அவர்களினால் யாழ் போதனா வைத்தியசாலையில் தொண்டர்களாக கடமையாற்றிய 127 பேரை பதிலீட்டு சுகாதார ஊழியர் ஆக ஆட்சேர்ப்பு செய்து கொண்டமைக்காக அவருக்கும் சிறிலங்கா ஜனரஜ சுகாதார சேவைச் தாய்ச் சங்க தலைவர் டபிள்யூ.ஏ.டி விமலரட்ண குழுவினருக்கும் பாராட்டு வழங்கிக் கௌரவிக்கும் விழா

தலைமை : திரு.கு.ரமேஷ்
(தலைவர், சிறிலங்கா ஜனரஜ சுகாதார சேவைச் சங்கம் யாழ்.கிளை)
இடம் : தாதியர் பயிற்சிப் பாடசாலை மண்டபம்
(போதனா வைத்தியசாலை - யாழ்ப்பாணம்)
காலம் : 07.07.2016 வியாழக்கிழமை (பிற்பகல் 1.45 மணிக்கு)

நிகழ்ச்சிகள்

வரவேற்புரை
திரு.இ.வசந்தராஜன்
(ஸ்ரீலங்கா ஜனரஜ சுகாதார சேவைச் சங்க யாழ் மாவட்ட அமைப்பாளர்.)

ஆசியுரை
ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசார்ய சுவாமிகள்
(நல்லை ஆதீன குரு முதல்வர் இரண்டாவது குருமஹா சந்நிதானம்)
கலைமாணி வண.
மீகஹ ஜந்துரே சிறிவிமல தேர (ஸ்ரீ நாகவிகாரை சர்வதேச பௌத்த நிலையம்)
அருட்தந்தை வணக்கத்துக்குரிய
ச.பி.றஞ்சன்குமார் (அ.ம.தி)

பிரதம விருந்தினர்கள்
மாண்புமிகு கௌரவ சுகாதார அமைச்சர் வைத்தியர் ராஜித சேனாரத்ன
விஷேடவைத்திய நிபுணர் திருமதி சுஜாதா சேனாரத்ன

கௌரவ விருந்தினர்கள்
திரு. றெஜினோல்ட் கூரே (ஆளுநர், வடமாகாணம்)
திருமதி. விஜயகலா மகேஸ்வரன் (சிறுவர் விவகார இராஜாங்க அமைச்சர்)
திரு.சி.வி.விக்னேஸ்வரன் (முதலமைச்சர் - வடமாகாணம்)
திரு.E.சரவணபவன் (பாராளுமன்ற உறுப்பினர்)
திரு.ப.சத்தியலிங்கம் (சுகாதார அமைச்சர், வடமாகாணம்)
திரு.N.வேதநாயகன் (அரச அதிபர், யாழ் மாவட்டம்)
வைத்தியர் பாலித மகிபாலா (சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம்)
WAD.விமலரட்ண (தலைவர் ஸ்ரீலங்கா ஜனரஜ சுகாதார சேவைச் சங்கம் - கொழும்பு)

சிறப்பு விருந்தினர்கள்
Dr.T.சத்தியமூர்த்தி (பணிப்பாளர் போதனாவைத்தியசாலை - யாழ்ப்பாணம்)
டாக்டர் திருமதி யூட் (மாகாண சுகாதார சேவைப் பணிப்பாளர்)
டாக்டர் திரு.E.தேவநேசன் (பிராந்திய சுகாதார சேவைப் பணிப்பாளர்)
Dr.S.சிறிபவானந்தராசா (பிரதிப்பணிப்பாளர், போதனாவைத்தியசாலை, யாழ்ப்பாணம்)
திரு.W.A.D.வீரசிங்க (பொலிஸ் அத்தியட்சகர் யாழ்மாவட்டம்)
பிரிகேடியர்.T.J.கொடிதுவக்கு (512, இராணுவ கட்டளைத் தளபதி)
திரு.H.R.முடிதருப பண்டார (பொறுப்பதிகாரி, குற்றவியல் பிரிவு)
திரு.V.சண்முகராசா (பிரதிப் பணிப்பாளர் போதனாவைத்தியசாலை, யாழ்ப்பாணம்)

உரை
(புதிய நியமனம் கிடைக்கப் பெற்றவர்)

ஆலோசகர்
திரு.V.கந்தசாமி (ஸ்ரீலங்கா ஜனரஜ சுகாதார சேவைச்சங்கம் - யாழ்கிளை)

நன்றியுரை
திரு.இ.ஜெயரூபன் (செயலாளர், ஸ்ரீலங்கா ஜனரஜ சுகாதார சேவைச்சங்கம் - யாழ்கிளை)

மொழிபெயர்ப்பாளர்
திரு.S.றொபின் சத்தியராஜ் (அகில இலங்கை மொழிபெயர்ப்பாளர்)

நிகழ்ச்சித் தொகுப்பாளர்
திரு.S.P.நாதன்

விழா ஒழுங்கமைப்பு தலைவர்
திரு.K.வாமதேவன்

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்
ஸ்ரீலங்கா ஜனரஜ சௌக்கிய சேவை சங்கம் -யாழ்கிளை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கண்ணீர் அஞ்சலி

வண்ணை- சாந்தையர்மடம் ஸ்ரீ கற்பக விநாயகர் கோயில் சைவசமய அபிவிருத்திக்கழகத்தின் உப தலைவராகவும், பொருளாளராகவும் மற்றும் நிர்வாகசபை உறுப்பினராகவும் இருந்து சமயப் பணியாற்றிய

**கலாபூஷணம் லெ. கெங்காதரன் ஆச்சாரி**

அவர்கள் இயற்கை எய்தியதைக் கேள்வியுற்று ஆழ்ந்த கவலையடைகின்றோம். அன்னாரது ஆத்மா சாந்தியடைய ஸ்ரீ கற்பக விநாயகரை வேண்டி நிற்பதோடு, அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக் கொள்கின்றோம்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

வண்ணை சாந்தையர்மடம் ஸ்ரீ கற்பக விநாயகர் கோயில்
சைவசமய அபிவிருத்திக்கழகத்தினர் (J 2679)
366, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். (12.18)

## ஏழாம் ஆண்டு நினைவஞ்சலி

திருமதி தியாகராசா
வள்ளிநாயகிதேவி
திதி: திருதியை



தோற்றம்
05.07.1954

மறைவு
24.06.2009

நினைவுகளை மட்டும் நமக்கு சொந்தமாக்கி விட்டு நீங்கள் எம்மைப் பிரிந்து ஆண்டுகள் ஏழு ஆனாலும் ஆறவில்லை உம் பிரிவு

அம்மா என்று வாயார அழைத்த உம் பிள்ளைகள் ஏங்கித் தவிக்க ஆறுதல் கூறத் துணையில்லாமல் உம் துணைவன் கலங்கி நிற்க, நீர் எம்மை விட்டுப் பிரிந்ததேனோ? ஆனாலும் உங்கள் நினைவுகள் என்றும் நம் வாழ்வோடு கலந்திருக்கும் உங்கள் ஆத்ம சாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கிறோம்.

தம்மளை,
அளவெட்டி மேற்கு. (J 2679) (12.18)

ஆறாத்துயரில்
குடும்பத்தினர்.

## 7ஆம் ஆண்டு நினைவஞ்சலி



**சின்னத்தம்பி நடேசமூர்த்தி**

மலர்வு
22.07.1954

திதி: 07.07.2016
உதிர்வு
25.06.2009

குடும்பத்தின் ஜீவனாகி
குலவிளக்காய் நீரிருந்தீர்
கொடுங்காலம் வந்ததுவோ
கொண்டும்மைச் சென்றதுவோ?
ஆண்டுகள் ஏழு சென்றாலும்
ஆறாது உம்பிரிவு
மீண்டுந்தான் காண்பதற்கு
மீளாதோ உம் வாழ்வு
கண்ணீரால் தான் நனைந்து
கரைக்கின்றோம் எம் வாழ்வை
மண்மீது உமை எண்ணும்
மனதோடு வாழ்கின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

ஆஸ்பத்திரி வீதி,
அச்சுவேலி. (J/2382) (11.)

மனைவி
பிள்ளைகள்

# தேர்தல் தாமதிக்கப்படுவதற்கு எதிராக இந்த வாரம் வழக்கு

## பவ்ரல் அமைப்பு தெரிவிப்பு

கொழும்பு, ஜூலை 7
உள்ளூராட்சி மன்றத் தேர்தல் தாமதிக்கப்படுவதற்கு எதிராக உயர் நீதிமன்றத்தில் இந்த வாரம் வழக்குத் தாக்கல் செய்யப்படவுள்ளது என்று சுயாதீன மற்றும் நீதியான தேர்தலுக்கான அமைப்பான பவ்ரல் தெரிவித்துள்ளது.

மாகாணசபைகள் உள்ளூராட்சி அமைச்சு, தேர்தல்கள் ஆணைக்குழு, தேசிய எல்லை நிர்ணய குழு ஆகிய தரப்புக்களை பிரதிவாதிகளாகக் குறிப்பிட்டு வழக்குத் தாக்கல் செய்யப்படவுள்ளது. பவ்ரல் அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ரோஹன ஹெட்டியாரச்சி இதனைத் தெரிவித்தார். உள்ளூராட்சி மன்றத் தேர்தல் தொடர்ந்து தாமதிக்கப்படுகின்றது. இதற்கு எதிராகவே நாம் வழக்குத் தாக்கல் செய்யவுள்ளோம். வழக்குத் தாக்கலுக்கு தேவையான ஆவணங்கள் ஏற்கனவே எமது சட்டத் தரணியிடம் கையளிக்கப்பட்டுவிட்டன- என்று அவர் கூறினார். (ற-5)

## கண்ணீர் அஞ்சலி



எமது நிலையத்தின் முன்னாள் உபதலைவரும்
நிர்வாக சபை உறுப்பினருமான

**சுப்பிரமணியம் மகேந்திரராசா**


(ஓய்வு நிலை ஆசிரியர்) அவர்கள்

02.07.2016 ஆம் திகதி இறைவனடி சேர்ந்தார். அன்னார் நாவற்குழிக் கிராமத்தின் வளர்ச்சியில் ஆக்கமும் ஊக்கமும் கொடுத்து அபிவிருத்திக்கு முன்மாதிரியாய் இருந்துள்ளார். இவர் நாவற்குழிக் கிராம அபிவிருத்திச் சங்கம், நாவற்குழி அறிவொளி மன்றம் என்பவற்றின் உறுப்பினராய் இருந்து சமூக சேவையில் தன்னை அர்ப்பணித்து செயற்பட்டுள்ளார். இவரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது நிலையம் சார்ந்த அனுதாபத்தினையும் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி ! ஓம் சாந்தி ! ஓம் சாந்தி !

நாவற்குழி சனசமூகநிலையம்.

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



**தம்பு பாலசிங்கம்**

(ஓய்வுபெற்ற ஆசிரிய ஆலோசகர் தென்மராட்சி)

தோற்றம்
08.02.1943

மறைவு
08.06.2016

கடந்த 08.06.2016 இறைபதமடைந்த தம்பு பாலசிங்கம் அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**VN PHARMACEUTICAL**

(J 2679) (12.18)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

மலர்வு
07 . 01 . 1943



உதிர்வு
07 . 06 . 2016

**செல்வி சிவானந்தி கதிரேசு B.Com**

(ஓய்வுபெற்ற பிரதி அதிபர்-நயினாதீவு மகாவித்தியாலயம்)

அன்பால் அரவணைத்து அறிவால் உயிரூட்டி
பண்பால் பாரினில் உயர்ந்திட பக்க
துணையாய் இருந்த என் அன்புத் தெய்வமே!
ஆருயிர் அக்காவே! பாசம் மறைந்து இறைநேசம் கொண்டதேனோ?
உங்கள் ஆத்மா சாந்தியடைய
நயினை நாகபூஷணியை வேண்டுகின்றோம்

கடந்த 07.06.2016 இறைவனடி எய்திய எங்கள் இதய தெய்வத்தின் இறுதிக்கிரியைகளில் கலந்துகொண்டு உதவி புரிந்தவர்களுக்கும் வெளிநாட்டில் இருந்தும் உள்நாட்டில் இருந்தும் தொலைபேசி மூலமாகவும் துயரைப் பகிர்ந்து கொண்டவர்களுக்கும் நேரில் வந்து அஞ்சலி செலுத்திய பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்கள், கண்ணீர் அஞ்சலி உரைகளில் பங்கு கொண்டவர்களுக்கும், மலர்வளையம் சாற்றியவர்களுக்கும், உற்றார், உறவினர், நண்பர்களுக்கும் எங்களது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

பிரிவால் வாடும்...

பவளம், 6ஆம் வட்டாரம், நயினாதீவு (1/66) (11.19)

குடும்ப உறவுகள்.

## நிர்வாக சபை தெரிவு

சாவகச்சேரிடச்சுவீதி ஸ்ரீபழனிஆண்டவர் ஆலயப்பரிபாலன சபைக் கூட்டம் அண்மையில் நடைபெற்றது.
அதில் தலைவராக ப.நடராசாவும், செயலாளராக சி.பிரசன்னாவும், பொருளாளராக க.வைகுந்தனும், 11 நிர்வாக சபை உறுப்பினர்களும் தெரிவு செய்யப் பட்டனர்.
தென்மராட்சிப் பிரதேச இந்து கலாசார அலுவலர் திருமதி வி.மகிந்தினி தலைமையில்நடைபெற்ற கூட்டத்தில் கிராம அலுவலர் சுகாஸ் சந்திரபோஸும் கலந்து கொண்டார். (ற-9)

## ஆயுள்வேத கண்காட்சியில் காட்சிப்படுத்தலாம்

ஆயுள்வேத எக்ஸ்போ 2016 கண்காட்சி எதிர்வரும் 9ஆம், 10ஆம் திகதிகளில்கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த மண்டபத்தில் நடைபெறவுள்ளன. இலங்கை வர்த்தக சம்மேளனம் கண்காட்சியை நடத்துகின்றது.
கண்காட்சியில் தங்களது நிறுவன உற்பத்திகளை காட்சிப் படுத்த விரும்பும் ஆயுள்வேத உற்பத்தியாளர்கள் தங்களது விவரங்களை சமர்ப்பிக்குமாறு வடக்கு மாகாண சுதேச மருத்துவத் திணைக்களமாகாண ஆணையாளர் மருத்துவர் திருமதி சியாமா துரைரத்தினம் அறிவித்துள்ளார்.
மேலதிக விவரங்களை 0114741788, 0114741984 இலக்கத் தொலைபேசி எண்களுடன் தொடர்புகொண்டு அறிந்து கொள்ளலாம்என அறிவிக்கப் பட்டுள்ளது. (ற-11)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கும்பாபிசேகம்

யாழ்ப்பாணம், ஜூலை 7
ஈழத்து இராமேஸ்வரம் என போற்றப்படும் யாழ். புங்குடுதீவு பாணாவிடை சிவன் பார்வதவர்தினி அம்மாள் சமேத ஸ்ரீமத் இராமலிங்க சுவாமி திருக்கோவில் பாலஸ்தான கும்பாபிசேகம் இன்று காலை 7.30 மணிக்கு நடைபெறும்.
காலை 6 முதல் விநாயகர் வழிபாடு, தத்துவ பூசை, மஹா பூர்ணாகுதி, தீபாராதனை, வேத ஸ்தோத்திரத் திருமுறை பாராயணமும், காலை 7.30 மணிமுதல் 8.46 மணிவரை திருக்கோவில் பாலஸ்தான கும்பாபிசேகம் மற்றும், விசேட பூசைகள், ஆசியுரைகள் என்பன இடம்பெற உள்ளன.
(ற-21)

## புதையல் தோண்டிய 7 பேர் கைது

வவுனியா, ஜூலை 7
வவுனியாவில்புதையல்தோண்டினர் என்ற குற்றச்சாட்டில் பெண் உட்பட 7 பேர் கைது செய்யப்பட்டனர்.
போகஸ்வேவ, தந்திரிமலை ஆகிய பகுதிகளில் நேற்று முன்தினம் இவர்கள் புதையல் தோண்டினர் என்று பொலிஸாருக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில் அவர்கள் கைது செய்யப்பட்டனர்.
புதையல் தோண்டப் பயன்படுத்திய உபகரணங்கள், மோட்டார் சைக்கிள் என்பன பொலிஸாரால் கைப்பற்றப்பட்டன.
கைது செய்யப்பட்டவர்கள் வவுனியா நீதிமன்றில் முற்படுத்தப்பட்டனர். அவர்களை 14 நாள்கள் விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்று உத்தரவிட்டது.
கைது செய்யப்பட்ட பெண் ஒரு ஆசிரியை என்றும், அவரது கணவர் இராணுவத்தில் உள்ளார் என்றும் பொலிஸார் தெரிவித்தனர். (ற-4,402)

## விபத்துக்களில் பெண்கள் காயம்

தென்மராட்சி, ஜூலை 7
வெவ்வேறு மோட்டார் சைக்கிள் விபத்துக்களில் இரு பெண்கள் காயமடைந்தனர். அவர்களில் ஒருவர் யாழ். போதனா வைத்தியசாலையிலும் மற்றையவர் சாவகச்சேரி வைத்தியசாலையிலும் சேர்க்கப்பட்டனர்.
நேற்றுமுன்தினம் இரவு கொடிகாமம் பாலாவியில் ஒரு விபத்து இடம்பெற்றது. வேகமாகப் பயணித்த மோட்டார் சைக்கிள் பள்ளத்தில் இறங்கியதில் பின்னிருக்கையில் இருந்த பெண் தூக்கி வீசப்பட்டார். அவர் சாவகச்சேரி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார்.
கச்சாயில் மற்றைய விபத்து நடந்தது. மோட்டார் சைக்கிள் செலுத்தி வந்த பெண் எதிரே வந்த மோட்டார் சைக்கிளுடன் விபத்துக்குள்ளானார். அவர் சாவகச்சேரி வைத்தியசாலையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டார். (ற-9)



வீதியில் பயணித்த டிப்பர் வாகனம் கட்டுப்பாட்டை இழந்து வீட்டுக்குள் புகுந்தது. இந்தச் சம்பவம் நேற்று பளையில் நடந்தது. யாழ்ப்பாணத்தில் இருந்து டிப்பர் கிளிநொச்சி நோக்கிப் பயணித்தது. விபத்தில் எவருக்கும் காயம் ஏற்படவில்லை. வீட்டின் முன்புறம் அமைக்கப்பட்டிருந்த சுவர் சேதமடைந்தது.(ற-101,ரி3)

# பொதுக் கிணற்றை ஆக்கிரமித்து விவசாயம் செய்கிறது ராணுவம்

### முறிகண்டி மக்கள் குற்றச்சாட்டு

முல்லைத்தீவு, ஜூலை 7
பொதுக் கிணற்றை ஆக்கிரமித்துள்ள சீருடையினர் அதிலுள்ள நீரைத் தமது விவசாய நடவடிக்கைகளுக்குப் பாவிக்கின்றனர். பல குழாய்கள் பொருத்தி கனரக மோட்டர் மூலம் தண்ணீரை உறிஞ்சுகின்றனர்.
இவ்வாறு முறிகண்டி மக்கள் குற்றஞ்சாட்டுகின்றனர்.
"முல்லைத்தீவு மாவட்டத்துக்குள் அடங்குகின்றது முறிகண்டி. அந்தப் பிரதேசத்தில் சீருடையினர் பல முகாம்களை அமைத்துள்ளனர். காட்டுப் பகுதிகளுக்குள்ளேயே முகாம்கள் அமைக்கப்பட்டுள்ளன. அந்தப் பகுதிகளுக்குள் வெளியாள் எவரும் செல்லமுடியாது. பெருமளவு காணிகளைக் கையகப்படுத்தியுள்ளனர். அங்கு விவசாயம் செய்கின்றனர்.
விவசாயத்துக்குத் தேவையான நீரை பொதுக் கிணற்றில் இருந்து பாய்ச்சுகின்றனர். பொதுக் கிணற்றைச் சுற்றி வேலி அமைத்து ஆக்கிரமித்துள்ளனர். இந்தக் கிணற்று நீர் வற்றாது. வறட்சிக் காலத்திலும் கைகொடுக்கும். இதன் மூலமே நாங்கள் முன்னர் விவசாயம் செய்தோம். இப்போது அதைச் சீருடையினர் ஆக்கிரமித்துள்ளனர். எமது காணிகளையும் கையகப்படுத்தியுள்ளனர். கிணற்றையும் விடுகிறார்கள் இல்லை. நாங்கள் வாழ்க்கையை நகர்த்தப் பெரும் சிரமப்படுகின்றோம்." - என்று அந்தப் பகுதியில் முன்னர் விவசாயம் செய்த ஒருவர் விரக்தியுடன் கூறினார்.
(ற-5,101)



## வலி. தெற்கில் 11 வீதிகள் புனரமைப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 7
வலி.தெற்குப் பிரதேசத்தில் 11 வீதிகள் முன்னுரிமை அடிப்படையில் திருத்தப்படுகின்றன. அவற்றுக்கு 33 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டது.
சுன்னாகம் செல்வச்சந்நிதி அம்மையார் வீதி, சுன்னாகம் சோமராந்தோட்ட வீதி, ஏழாலை மதவடி வாசிகசாலை வீதி, ஏழாலை தம்புலத்தை 3ஆம் குறுக்கு வீதி, இணுவில் பூவோடைமயான வீதி, குப்பிளான் அறிவொளி சனசமூக நிலைய வீதி, தாவடிப் பாடசாலை வீதி, உடுவில் மான்ஸ் வீதி, புன்னாலைக்கட்டுவன் மில் லேன், உடுவில் கறுத்தான் வடலி மல்வம் வீதி, இராமநாதன் முதலாம் குறுக்கு வீதி என்பவையே திருத்தப்படுகின்றன.
(ற-115)

## மாணிக்கவாசகர் குருபூசை தினம்

யாழ்ப்பாணம், ஜூலை 7
காரைநகர் கிழவன்காடு கலாமன்ற அறநெறிப் பாடசாலையால் நடத்தப்படும் மாணிக்கவாசகர் குரு பூசை நிகழ்வு நாளை நடைபெறும். மாலை 7 மணிக்கு கிழவன்காடு கலாமன்ற மனோன்மணி கலையரங்கில் இதற்கான ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.
கலை நிகழ்வுகள், சிறப்புப் பட்டிமன்றம் எனபன இடம்பெற உள்ளன. நிகழ்வுக்கான இலவச பஸ் சேவை மாலை 5.15 மணிக்கு யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் உள்ள கலாமன்ற அலுவலகத்தில் இருந்து ஆரம்பமாகும் என ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர். (ற-21)

## குளத்துக்குள் நீந்திச் சென்றவர் அல்லிக் கொடிக்குள் சிக்கிச் சாவு

பளை, ஜூலை 7
பளை நகரப் பகுதியில் உள்ள குளத்தில் நீந்தியவர் அல்லிக் கொடிகளுக்குள் சிக்கி உயிரிழந்துள்ளார். அவரது உடல் நேற்று மீட்கப்பட்டது.
பெரியபளையைச் சேர்ந்த கணபதிப்பிள்ளை திருச்செல்வம் (வயது - 48) என்பவரே உயிரிழந்தார்.
நேற்றுமுன்தினம் மாலை வீட்டுக்கு அருகில் உள்ள குளத்துக்கு அவர் தனது சகோதரனுடன் சென்றார். குளத்தின் ஆழமான பகுதிக்கு நீந்திச் சென்றவர் காணாமல்போனார். இந்தத் தகவல் பளை பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டது. அவர்களால் தேடுதல் நடத்தப்பட்டும் காணாமல்போனவர் கண்டுபிடிக்கப்படவில்லை. கடற்படையினருக்குத் தகவல் கொடுக்கப்பட்டது.
கடற்படையினர் வந்து தேடினர். இரவானதால் தேடுதல் இடைநிறுத்தப்பட்டது. நேற்றுக் காலை மீண்டும் கடற்படையினரின் சுழியோடிகள் குளத்தில் தேடுதல் நடத்தினர். அல்லிக் கொடிகளுக்குள் சிக்குண்ட நிலையில் குறித்த நபரின் உடல் கண்டெடுக்கப்பட்டது. (ற-9)

## கசிப்பு விற்றவருக்கு மறியல்

தென்மராட்சி ஜூலை 7
கசிப்பு விற்பனைக்கு வைத்திருந்தார் என்ற குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டவரை விளக்கமறியலில் வைக்குமாறு சாவகச்சேரி நீதிமன்று உத்தரவிட்டது.
சாவகச்சேரி மதுவரி நிலையத்திற்குக்கிடைத்த தகவலையடுத்து யாழ்.மதுவரி நிலைய பொறுப்பதிகாரி எஸ்.செந்தூர்ச்செல்வன் தலைமையில் சென்ற அதிகாரிகள் சிவில் உடையில் சென்ற அலுவலருக்கு கசிப்பு விற்பனை செய்தபோது குறித்த நபரைக் கைதுசெய்தனர்.
இவர் பலதடவைகள் நீதிமன்றால் கசிப்பு உற்பத்தி மற்றும் விற்பனை தொடர்பாகத் தண்டிக்கப்பட்டவர் என்று தெரிவிக்கப்பட்டது. (ற-9)

## பாலன்குளத்தின் புனரமைப்பு வெகு விரைவில் முடிவடையும்

### வடக்கு உறுப்பினர் ரவிகரன் தெரிவிப்பு

முல்லைத்தீவு, ஜூலை 7
துணுக்காய், ஆரோக்கியபுரம் மக்களின் வாழ்வாதாரமாக உள்ள பாலன்குளத்தைச்சீரமைத்து விரைவில் மக்களின் பாவனைக்கு வழங்க முடியும்.
இவ்வாறு வடக்கு மாகாண சபை உறுப்பினர் து.ரவிகரன் தெரிவித்தார்.
அவர் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் தெரிவித்ததாவது:
துணுக்காயின் எல்லைக் கிராமம் ஆரோக்கியபுரம். அங்கு 120 குடும்பங்கள் உள்ளன. அந்த மக்களின் வாழ்வாதாரத்துக்கு உதவுவது பாலன்குளம். இந்தக் குளமும், அங்குள்ள மக்களின் வாழ்வாதாரக் காணிகளும் இன்னமும் விடுவிக்கப்படவில்லை. தமது வாழ்வாதாரத்தைக் கொண்டு நகர்த்த குளத்தை விடுவித்துத் தரவேண்டும் என்று கடந்த ஆண்டு அங்குள்ள மக்கள் கோரிக்கை விடுத்தனர். இது குறித்து வடக்கு மாகாண விவசாய அமைச்சிடமும், மாவட்ட ஒருங்கிணைப்புக் கூட்டங்களிலும் தொடர்ச்சியாகக் குரல் கொடுத்து வரு கின்றேன்.
தற்போது முன்னேற்றகரமான நடவடிக்கைகள் அதிகாரிகளால் முன்னெடுக்கப்படுகின்றன. குளத்தின் முக்கியமான சீரமைப்புப் பணிகளுக்காக இந்த ஆண்டின் ஒதுக்கீடாக ஆறு மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.
குளத்தை சீரமைப்புச் செய்ய சுமார் 18 மில்லியுன் ரூபா தேவை என்று நீர்ப்பாசன பொறியியலாளர்களால் மதிப்பிடப்பட்டுள்ளது. இந்தக் குளம் அக்கராயன் கமநல சேவைகள் திணைக்களத்தின் பராமரிப்பில் உள்ளது. 150 ஏக்கருக்கும் அதிகமான காணிகளுக்கு நீரை வழங்கக்கூடியது இந்தக் குளம். இதன் மூலம் பெரும் போகம், சிறுபோகம் என தொடர்ச்சியாக செய்கையில் ஈடுபடமுடியும்.
கிராமத்தின் முக்கிய தேவையாக உள்ள இந்தக் குளத்தை புனரமைத்துக் கூடிய விரைவில் மக்களின் தேவைக்கு வழங்க முடியும் - என்றார்.
(ற-21)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## முதிரைப் பலகைகளுடன் ஓடியவர் ரயில் கடவை மூடியதால் சிக்கினார்

வவுனியா, ஜூலை 7
பொலிஸாருக்கு டிமிக்கி கொடுத்து விட்டு முதிரைப் பலகைகளுடன் தப்பியோட முயன்றவர் ரயில் கடவை மூடப்பட்டதால் வகையாக மாட்டினார். இந்தச் சம்பவம் வவுனியா, கல்மடுவில் நடந்தது.
வீதியில் பயணித்த கப் ரக வாகனம் ஒன்றைப் பொலிஸார் மறித்தனர். சாரதி வாகனத்தை நிறுத்தவில்லை. பொலிஸார் வாகனத்தை விரட்டினர். அந்த நேரம் வவுனியா ரயில் கடவை ரயில் வருவதற்காக மூடப்பட்டது. தப்பியோடியவர் வேறு வழியில்லாது வாகனத்தை நிறுத்தினார். பொலிஸார் அவரைக் கைது செய்தனர்.
வாகனத்துக்குள் 146 முதிரைப் பலகைகள் கைப்பற்றப்பட்டன. அவற்றின் பெறுமதி சுமார் 4 லட்சம் ரூபா வரையில் இருக்கும். இவ்வாறு பொலிஸார் தெரிவித்தனர்.
கைது செய்யப்பட்டவர் மடு, பண்டிவிரிச்சானைச் சேர்ந்தவர். முதிரைப் பலகைகளை யாழ்ப்பாணம் கொண்டு செல்ல விருந்தார் என்று விசாரணையில் தெரிய வந்துள்ளது என்று பொலிஸார் கூறினர். (ற-4)

# சட்ட விரோத மீன்பிடியைத் தடுக்க ஒத்துழைப்பதில்லைப் பொலிஸார்

### முல்லைத்தீவு கடற்றொழில் அமைப்புக்கள் குற்றச்சாட்டு

முல்லைத்தீவு, ஜூலை 7
கடற்றொழில் நீரியல் வளத் திணைக்கள அதிகாரிகளால் சட்டவிரோத மீன்பிடிச் செயற்பாடுகள் தொடர்பில் எடுக்கப்படும் நடவடிக்கைகளுக்குப் பொலிஸார் ஒத்துழைப்பதில்லை.
இவ்வாறு முல்லைத்தீவு மாவட்டத்தைச் சேர்ந்த கடற்றொழில் அமைப்புக்கள் குற்றஞ்சாட்டின.
இது குறித்து தெரிவித்ததாவது:
கொக்குத்தொடுவாயில் தென் பகுதி மீனவர்கள் தடை செய்யப்பட்ட வலைகளைப் பயன்படுத்தி மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபடுகின்றனர். கடற்றொழில் நீரியல் வளத் திணைக்கள அதிகாரிகளுக்கு அதைத் தெரியப்படுத்தினோம்.
நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை முல்லைத்தீவுப் பொலிஸாருடன் கடற்றொழில் திணைக்கள அதிகாரிகள் அங்கு சென்றனர். அவர்களின் சோதனையில் தடை செய்யப்பட்ட வலைகள் இனங்காணப்பட்டன.
தடை செய்யப்பட்ட வலைகள் இனங்காணப்பட்டால் அவற்றைக் கைப்பற்றி நீதிமன்றில் பாரப்படுத்த வேண்டும். இனங்காணப்பட்ட வலைகளை அதிகாரிகள் கைப்பற்ற முயன்றனர். அங்கிருந்த தென்னிலங்கை மீனவர்கள் அதிகாரிகளின் கடமைக்கு இடையூறு விளைவித்தனர்.
பொலிஸார் இடையூறு விளைவித்தவர்களை அகற்றுவதற்குப் பதிலாக அதிகாரிகளை அங்கிருந்து வெளியேற்றினர். அதிகாரிகள் தங்கள் கடமைகளை நிறுத்தி வெளியேற வேண்டி ஏற்பட்டது. பொலிஸார் ஒத்துழைப்பு வழங்கவில்லை. பொலிஸார் இவ்வாறு செயற்படக்கூடாது- என்று தெரிவிக்கப்பட்டது.
(ற-5,21,101)


## சந்தேகநபர் தாக்கப்பட்ட விவகாரம் அறிக்கை சமர்ப்பிக்க நீதிமன்று உத்தரவு

யாழ்ப்பாணம், ஜூலை 7
கோப்பாய் பொலிஸாரால் சந்தேகநபர் ஒருவர் கடுமையாகத் தாக்கப்பட்டார் என்று கூறப்படும் சம்பவம் தொடர்பில் விசாரித்து நீதிமன்றுக்கு விளக்கமளிக்க வேண்டும் என்று யாழ். சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சருக்கு யாழ். நீதிவான் மன்று உத்தரவிட்டது.
கோப்பாய் பொலிஸார் நேற்றுமுன்தினம் திருட்டு வழக்கொன்றை நீதிமன்றில் சமர்ப்பித்தனர்.
உரும்பிராயில் உள்ள கோயில் திருமண மண்டபத்தில் கடந்த 2ஆம் திகதி திருட்டு நடந்துள்ளது. வெளிநாட்டில் இருந்து வந்து திருமணத்தில் கலந்துகொண்ட பெண்ணொருவரின் கைப்பையில் இருந்து 70 ஆயிரம் ரூபா பணம், 300 அமெரிக்க டொலர், கைபேசி ஆகியவை திருடப்பட்டன. இது தொடர்பில் கோப்பாய் பொலிஸிடம் முறையிடப்பட்டது.
விசாரணை நடத்திய பொலிஸார் சி.சி.ரி.வி. கமரா பதிவுகளின் அடிப்படையில் 17 வயதுச் சிறுவன் ஒருவனைக் கைது செய்தனர். நீதிமன்றத்தில் முற்படுத்தினர். சிறுவனிடம் இருந்து 60 ஆயிரம் ரூபா பணமும், 150 அமெரிக்க டொலரும் கைப்பற்றப்பட்டன என்று பொலிஸார் தெரிவித்தனர்.
"சிறுவன் பொலிஸாரால் மிக மோசமாகத் தாக்கப்பட்டுள்ளான். கீழ்த்தரமாக நடத்தப்பட்டுள்ளான்" என்று சிறுவனின் சார்பில் முன்னிலையான சட்டத்தரணி நீதிமன்றின் கவனத்துக்குக் கொண்டு வந்தார்.
யாழ்.மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகரையும், சட்ட வைத்திய அதிகாரியையும் நீதிமன்றில் உடனடியாகத் தோன்றுமாறு நீதிவான் சி.சதீஸ்கரன் கட்டளை பிறப்பித்தார். அவர்களால் சிறுவன் பரிசோதிக்கப்பட்டான்.
சிறுவன் தன் தொடையிலும், முதுகிலும் காணப்பட்ட காயங்களைக் காண்பித்தான். பொலிஸார் தன்னைத் தாக்கியதால் தலை உடைந்தது என்றும், வயிற்றில் உதைத்ததால் வாயால் இரத்தம் வந்து தனது உடையில் பட்டது என்றும் கூறினான். தன் ஆடைகளைக் களைந்து பிறப்புறுப்பில் தாக்கினர் என்றும் கூறினான். பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவரின் உடைகளை மாற்றித் தன்னை நீதிமன்றில் முற்படுத்தினர் என்றும் தெரிவித்தான்.
சந்தேகநபர்களை விசாரணை செய்யப் பொலிஸாருக்கு உரிமை இருக்கின்றது. அவர்களைத் தாக்குவதற்கு சட்டம் இடம் கொடுக்கவில்லை என்று நீதிவான் தெரிவித்தார்.
இவ்வாறான சம்பவங்கள் அடிப்படை மனித உரிமைகளை மீறும் செயலாகும். சம்பவம் தொடர்பான முழுமையாக அறிக்கைகளை நீதிமன்றுக்குச் சமர்ப்பிக்கவேண்டும் என்று யாழ். சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகருக்கும், சட்ட வைத்திய அதிகாரிக்கும் உத்தரவிட்டார்.
சிறுவனை விளக்கமறியலில் வைத்து சிகிச்சை வழங்குமாறு சிறைச்சாலை உத்தியோகத்தர்களுக்கு உத்தரவிடப்பட்டது. வழக்கு எதிர்வரும் 14ஆம் திகதிக்கு ஒத்தி வைக்கப்பட்டது. (ற-4-103)

## மரண அறிவித்தல்

### நாராயணலிங்கம் சந்திரமோகன்

தோற்றம்
26 . 06 . 1956



மறைவு
05 . 07 . 2016

சங்கானை தேவாலய வீதியைப் பிறப்பிடமாகவும் கொழும்பு, வெள்ளவத்தையை வதிவிடமாகவும் கொண்ட நாராயணலிங்கம் சந்திரமோகன் (Managing Director SPANCKAA General merchants and Engineering Consultant) 05.07.2016 செவ்வாய்க்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற கலாநந்தியின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான நாராயணலிங்கம் (Rtd.PWD Overseer) அரியரத்தினம் தம்பதிகளின் அன்பு மகனும் ஓட்டுமடத்தைச் சேர்ந்த காலஞ்சென்ற V.C பரமநாதன் (Rtd. High Court Registrer) மற்றும் செல்வநாயகி தம்பதிகளின் அன்பு மருமகனும் ஐஸ்வர்யா (M.Sc, LLB(Reading)), ஐஸ்வரன் (B.Eng) ஆகியோரின் பாசமிகு தந்தையும் ஜெமி (M.Sc)யின் அன்பு மாமனாரும் அடோனியாவின் பாசமிகு அம்மப்பாவும் ரஞ்சினி, ரூபன் (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நாளை (08.07.2016) வெள்ளிக்கிழமை மு.ப 8மணி முதல் பொரளை ஜெயரட்ண மலர்ச்சாலையில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு இறுதிக்கிரியைகள் பி.ப 4மணிக்கு நடைபெற்று பின்னர் பூதவுடல் பொரளை கனத்தை மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

26, 2/2, மயூரா கோட்,
பீற்றர்சன் வீதி,
கொழும்பு - 06

தகவல்:
ஐஸ்வர்யா (மகள்)

077 229 9055

### வர்த்தகர் மிரட்டப்பட்ட சம்பவம்; 2 பொலிஸார் இடைநிறுத்தம்

யாழ்ப்பாணம், ஜூலை 7
யாழ். நகரிலுள்ள கடைக்குச் சென்று உரிமையாளரைத் தாக்கினார்கள் என்று குற்றஞ்சாட்டப்பட்ட யாழ். பொலிஸார் இருவரும் கடமையில் இருந்து, தற்காலிகமாக இடைநிறுத்தம் செய்யப்பட்டனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.
யாழ். பஸ் நிலையத்தின் பின்புறமாக உள்ள தேநீர்க்கடை ஒன்றுக்குச் சில நாள்களுக்கு முன்னர் சிவில் உடையில் சென்றிருந்த பொலிஸார் இருவர், 3 சிகரெட்டுகளைத் தருமாறு கோரி 100 ரூபாவைக் கொடுத்தனர். 3 தருவதாக இருந்தால் மேலும் 20 ரூபா பணத்தைத் தருமாறு கேட்டபோது கடை உரிமையாளரான இளைஞரை அவர்கள் இருவரும் தாக்கினர் எனப் பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது.
சம்பவம் குறித்துப் பொலிஸ்மா அதிபருக்கு யாழ். பொலிஸார் அறிக்கை சமர்ப்பித்தனர்.
அறிக்கையின் பிரகாரம் இருவரையும் கடந்த திங்கட்கிழமை முதல் தற்காலிகமாகப் பணியில் இருந்து இடைநிறுத்துமாறு பொலிஸ் மா அதிபர் யாழ். மாவட்டப் பிரதிப்பொலிஸ்மா அதிபருக்கு உத்தரவிட்டார் என்று பொலிஸார் தெரிவித்தனர். (ற-4,106)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடசாலை செல்லாத சிறார்களின் பெற்றோர் மீதும் இனி நடவடிக்கை

## கிளிநொச்சி மாவட்ட செயலாளர் தெரிவிப்பு

கிளிநொச்சி, ஜூலை 7

பாடசாலை செல்லாத சிறார்கள் எதிர்காலத்தில் இனங்காணப்பட்டால் அவர்களின் பெற்றோருக்கு எதிராகவும் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

இவ்வாறு தெரிவித்தார் கிளிநொச்சி மாவட்டச் செயலாளர் சுந்தரம் அருமைநாயகம்.

> அண்மையில் கிளிநொச்சி நீதிமன்றம், மாவட்டச் செயலகம் இணைந்து கிளிநொச்சி பொலிஸாரின் உதவியுடன், சாந்தபுரம் கிராமத்தில் பாடசாலைக்குச் செல்லாத சிறார்களை பாடசாலையில் இணைக்கும் செயற்பாட்டில் ஈடுபட்டன.

அண்மையில் கிளிநொச்சி நீதிமன்றம், மாவட்டச் செயலகம் இணைந்து கிளிநொச்சி பொலிஸாரின் உதவியுடன் சாந்தபுரம் கிராமத்தில் பாடசாலைக்குச் செல்லாத சிறார்களைப் பாடசாலையில் இணைக்கும் செயற்பாட்டில் ஈடுபட்டன.

"கூட்டிணைந்து மேற்கொண்ட நடவடிக்கையில் பாடசாலை செல்லாத 18 சிறார்கள் இணங்காணப்பட்டனர். அவர்களைத் தண்டிப்பது நோக்கமல்ல. அவர்களைப் பாடசாலைக்கு அனுப்பி வைப்பதே திணைக்களங்களின் நோக்கம்.

சில சிறார்கள் பாடசாலைக்குச் செல்லாதிருந்தமைக்கு ஏற்றுக்கொள்ளக்கூடிய காரணங்கள் இருந்தன. அவற்றைப் பிரதேச செயலகத்தின் ஊடாக நிவர்த்தி செய்யப் பணிக்கப்பட்டுள்ளது.

எதிர்காலத்திலும் இவ்வாறான நடவடிக்கைகள் தொடரும். பாடசாலை செல்லாத சிறார்கள் இனங்காணப்பட்டால் பெற்றோருக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்" - என்று மாவட்ட செயலாளர் தெரிவித்தார். (ற-21,101)

## மின்தடை அறிவித்தல்

யாழ்ப்பாணம், ஜூலை 7

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின்விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக இன்று வியாழக்கிழமை காலை 8 மணி முதல் மாலை 5.30 மணிவரை கீழ்க் குறிப்பிட்ட இடங்களில் மின் தடைப்படும்.

யாழ்ப்பாணத்தில் சங்கத்தானை, டச்சுறோட் ஆகிய இடங்களிலும், வவுனியாவில் பிரமனாலங்குளம், பெரியதம்பனை, புளியடிமுறிப்பு, கோவில்குளம் சிவன் கோவிலடி பிரதேசம் ஆகிய இடங்களிலும், மன்னாரில் பெரிய பண்டிவிரிச்சான், சின்ன பண்டிவிரிச்சான், மடு தேவாலயப் பிரதேசம், மடு நீர்ப்பாசன சபை ஆகிய பிரதேசங்களிலும் மின் தடைப்பட்டிருக்கும் என இலங்கை மின்சார சபை மின் வழங்கல் கட்டுப்பாட்டு நிலைய மின் பொறியியலாளர் அறிவித்தார். (ற-ரி)

## தாகூரின் பிறந்த தின நிகழ்வு

யாழ்ப்பாணம், ஜூலை 7

குருதேவ் இரவீந்திரநாத் தாகூர் யாழ்ப்பாணத்துக்கு வந்ததை நினைவு கூரும் முகமாகவும், அவரது 155 ஆவது பிறந்த தின நினைவு நாளைக் கொண்டாடும் முகமாகவும் சிறப்பு நினைவுப் பேருரை உள்ளடங்கிய கலா நிகழ்வு நாளைமறுதினம் சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு மருத்துவபீட வளாகத்தில் அமைந்துள்ள ஹூவர் அரங்கில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வை, யாழ்ப்பாணத்திலுள்ள இந்தியத் துணைத் தூதரகமும், யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீடமும் இணைந்து ஏற்பாடு செய்துள்ளன. (ற-5)



யாழ். முற்றவெளியில் நேற்றுக் காலையில் ஒன்று கூடிய தவ்ஹீத் ஜமாத் முஸ்லிம் மக்கள் தமது ரமழான் நோன்புப் பெருநாளின் விசேட தொழுகையை மேற்கொண்டனர். தமது உறவுகளுக்கும் வாழ்த்துக்களைத் தெரிவித்தனர். நாட்டில் அமைதி நிலவ வேண்டியும், மக்கள் சுபீட்சமடைய வேண்டியும் பிரார்த்தித்தனர். தொழுகையை மௌலவி பைசர் மதனி மேற்கொண்டார். ரமழான் நோன்புப் பெருநாளை முன்னிட்டு நாட்டிலுள்ள அனைத்துப் பள்ளிவாசல்களிலும் நேற்றுக் காலை சிறப்புப் பெருநாள் தொழுகை மற்றும் பிரார்த்தனைகள் இடம்பெற்றன. (ற)

## மாணிக்கவாசகர் குருபூசை நிகழ்வு

தென்மராட்சி, ஜூலை 7

கைதடி முத்துக்குமாரசுவாமி மகா வித்தியாலயத்தில் நாளை மாணிக்கவாசகர் குருபூசை நடைபெறும்.

மு.ப. 10 மணிக்கு வித்தியாலய மாணவர் நாடாளுமன்ற இந்து கலாசார அமைச்சர் செல்வி தரங்கிணி சிவலிங்கம் தலைமையில் நிகழ்வு நடைபெறும். முதன்மை விருந்தினராக தென்மராட்சி கல்வி வலய முன்னாள் பிரதிக் கல்விப் பணிப்பாளர் பீ.முத்துலிங்கமும் சிறப்பு விருந்தினராக வலய சங்கீத பாட சேவைக்கால ஆசிரிய ஆலோசகர் திருமதி பு.ஈழநேசனும், மதிப்பு விருந்தினராக வித்தியாலயப் பழைய மாணவனும், வடக்கு மாகாண கல்வி அமைச்சின் அலுவலருமான சி.நிஷாகரனும், சிறப்பு விருந்தினராக நிகழ்வின் அனுசரணையாளரான இ.செகராஜ சேகரமும் கலந்துகொள்வர்.

சிறப்புச் சொற்பொழிவை பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரி ஆசிரியர் கி.பாவுதரன் வழங்குவார். (ற-9)

## முருங்கைக்காய் விலையில் திடீர்ச் சரிவு

யாழ்ப்பாணம், ஜூலை 7

குடாநாட்டில் முருங்கைக்காய் விலை திடீரெனச் சரிந்துள்ளது. கடந்த வாரம் ஒரு கிலோ ஆயிரம் ரூபாவாக விற்கப்பட்ட முருங்கைக்காய் தற்போது கிலோ 400 ரூபாவுக்கு விற்கப்படுகின்றது.

வன்னியில் இருந்து கூடுதலான முருங்கைக்காய்கள் குடாநாட்டுக்கு எடுத்து வரப்படுகின்றன. கடந்த மே மாதம் பெய்த கடும் மழையால் முருங்கை மரங்கள் பாதிக்கப்பட்டன. அவற்றின் காய்க்கும் தன்மை குறைந்தது. (ற-17)

## தென்னை பயிர்ச்செய்கை திட்ட ஆரம்ப நிகழ்வு

வடக்கு மாகாண தென்னை பயிர்ச் செய்கைத் திட்டத்தின் ஆரம்ப நிகழ்வு நாளைமறுதினம் சனிக்கிழமை சாவகச்சேரியில் இடம்பெற உள்ளது.

தென்னைப் பயிர்ச் செய்கை சபையின் யாழ். பிராந்திய முகாமையாளர் வைகுந்தன் இதனைத் தெரிவித்தார்.

காலை 9 மணிக்குச் சாவகச்சேரி கலாசார மண்டபத்தில் இந்த நிகழ்வு நடைபெறும். பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சர் நவீன் திசாநாயக் காவின் தலைமையில் நிகழ்வு நடைபெறும். வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன், வடக்கு மாகாண ஆளுநர் ரெஜினோல்ட் கூரே, சிறுவர் விவகார இராஜாங்க அமைச்சர் விஜயகலா மகேஸ்வரன் ஆகியோரும் அதில் கலந்துகொள்ளவுள்ளனர்.

மு.ப. 11 மணிக்குப் பளை மாதிரி தென்னந்தோட்டத்தில் வடமாகாணத்தின் வள மத்திய நிலையத்துக்கான அடிக்கல் நடும் நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

பி.ப.3 மணிக்கு வவுனியா குடியிருப்பு வீதி, பூந்தோட்டம் எனும் முகவரியில் அமைந்துள்ள புதிய பிராந்திய அலுவலகத் திறப்பு விழா நிகழ்வும் நடைபெறும்- என்று யாழ். பிராந்திய முகாமையாளர் தெரிவித்தார். (ற-21)

## வாகனம் மாற்றி மணல் கொண்டுசெல்லவும் பிரதேச செயலகத்தின் அனுமதி கட்டாயம்

தென்மராட்சி, ஜூலை 7

பிரதான வீதிகளில் டிப்பர் வாகனங்களில் கொண்டு வரப்பட்டு பறிக்கப்படும் கண்டாவளை மணலை ஒழுங்கைகளுக்குள் வேறு வாகனங்களில் ஏற்றிச் செல்வதற்கு, பிரதேச செயலகத்தின் அனுமதி பெறப்படுவது அவசியம். அனுமதி இன்றி வாகனங்களில் ஏற்றிச் செல்லும் வாகனச் சாரதிக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இவ்வாறு பொலிஸாருக்கு நேற்று உத்தரவிட்டது சாவகச்சேரி நீதிவான் மன்றம்.

தென்மராட்சிப் பிரதேசத்தில் வீடமைப்புத் திட்டம் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. இதற்காக கண்டாவளையில் இருந்து அனுமதி பெறப்பட்டு பாலியாற்று மணல் கொண்டு வரப்படுகின்றது.

டிப்பர் வாகனங்களில் கொண்டு வரப்படும் மணலை, சிறிய ஒழுங்கைகளுக்குள் கொண்டு செல்ல முடியாதுள்ளது. பிரதான வீதிகளில் டிப்பர் வாகனங்கள் மணலைப் பறித்து விட்டுச் செல்கின்றன.

வீட்டுத் திட்டப் பயனாளிகள் சிறிய வாகனங்களில் ஏற்றி மணலைத் தமது காணிகளுக்குள் கொண்டு செல்கின்றனர். அவ்வாறு ஏற்றிச்சென்ற வாகனச் சாரதி ஒருவருக்கு எதிராகப் பொலிஸார் வழக்குத் தாக்கல் செய்தனர்.

கண்டாவளை மணலை சிறிய வாகனங்களில் ஏற்றிச் செல்வதற்குப் பிரதேச செயலகத்தில் அனுமதி பெறவேண்டுமென்பது பொதுமக்களுக்குத் தெரியாது. வாகனங்களை வாடகைக்கு ஏற்பாடு செய்து, பிரதான வீதியிலிருந்து ஏற்றிச் செல்கின்றனர் - என்று சாரதி சார்பில் முன்னிலையான சட்டத்தரணி நீதிமன்றின் கவனத்துக்குக் கொண்டு வந்தார். இதன்போதே நீதிவான் மேற்கண்ட உத்தரவைப் பிறப்பித்தார். (ற-9)

## விசேட நீதிமன்ற நடவடிக்கை திருப்திகரமானதாக இல்லை

### சாந்தி சிறீஸ்கந்தராசா எம்.பி. தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 7

தமிழ் அரசியல் கைதிகளின் வழக்குகளை விசாரணை செய்வதற்காக ஏற்படுத்தப்பட்ட விசேட நீதிமன்றத்தின் நடவடிக்கை திருப்தியளிக்கவில்லை.

இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி சாந்தி சிறீஸ்கந்தராசா தெரிவித்தார்.

நேற்றுமுன்தினம் அவர் மகசின் சிறையில் உள்ள தமிழ் அரசியல் கைதிகளைச் சந்தித்தார். அதன்பின்னர் கருத்துத் தெரிவித்தபோது, இவ்வாறு தெரிவித்தார்.

அரசியல் கைதிகள் தம்மை விடுவிக்கவேண்டும் என்று போராட்டம் நடத்தினர். பின்னர் விசேட நீதிமன்ற நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டன. அவற்றின் செயற்பாடு திருப்தியளிக்கக் கூடியதாக இல்லை. ஒருவருக்கு ஒன்றுக்கு மேற்பட்ட குற்றங்கள் சுமத்தப்பட்டு, பல வழக்குகள் உள்ளன. விசேட நீதிமன்றம் ஒரு வழக்கை மாத்திரமே எடுத்துக்கொள்கின்றது. ஏனைய வழக்குகளுக்காக வெவ்வேறு நீதிமன்றங்களுக்கு அவர்கள் செல்லவேண்டியுள்ளது.

குற்றங்களை ஒப்புக்கொள்ளுமாறு அதிகாரிகள் வற்புறுத்துகின்றனர் என்று அரசியல் கைதிகள் கூறுகின்றனர். வழக்கு விசாரணைக்கான செலவுகளால் அவர்களது குடும்பங்கள் திண்டாடுகின்றன. தம்மை பிணையிலோ அல்லாவிட்டால் புனர்வாழ்வளித்தோ விடுவிக்க வேண்டும் என்று அரசியல் கைதிகள் கோருகின்றனர் - என்று நாடாளுமன்ற உறுப்பினர் தெரிவித்தார். (ற- 5,101)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மருத்துவபீட மாணவர்கள் நேற்றுமுன்தினம் காலை கொழும்பு உயர் நீதிமன்ற வளாகத்துக்கு முன்பாகக் கவனவீர்ப்புப்போராட்டம் நடத்தினர். மாலபே தனியார் கல்லூரி மாணவர்களை மருத்துவர்களாக உள்வாங்கக் கூடாது, அரச மருத்துவத் துறையைப் பாதுகாக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் போன்ற பல்வேறு கோரிக்கைகளை அவர்கள் வலியுறுத்தினர். (ந-5)

# பழிவாங்கலை நிறுத்தினால் சு.கவை ஒன்றிணைக்கலாம்

## பந்துல குணவர்த்தன ஆலோசனை

கொழும்பு, ஜூலை 7

பழிவாங்கல்களை நிறுத்தினால் சிறிலங்கா சுதந்திரக் கட்சியை ஒன்றிணைப்பது சிக்கலானதல்ல.

இவ்வாறு முன்னாள் அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்தார்.

கொழும்பில் கடந்த திங்கட்கிழமை இடம்பெற்ற பத்திரிகையாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

பழி வாங்குதல்கள் மற்றும் குரோதத்தை நிறுத்திக் கொண்டால் சுதந்திரக் கட்சியை ஒன்றிணைப்பது சிரமமான காரியமாகாது. ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் பொதுச் செயலாளர் மகிந்த அமரவீர மக்கள் இருக்கும் பக்கம் வந்து பார்த்தால் அதனைப் புரிந்து கொள்ளமுடியும்.

ஜனாதிபதித் தேர்தலின்போது 58 லட்சம் பேர், பொதுத் தேர்தலின்போது 48 லட்சம் பேர் ஐக்கிய தேசியக் கட்சிக்கு எதிராக வாக்களித்தனர்.

அன்று போர் முடிவுறுத்தப்பட்டபோது மக்கள் மகிழ்ச்சியில் வீதியில் இறங்கினார்கள். கடைகளை மூடி வர்த்தகர்கள் வீதியில் இறங்கினார்கள். மகிந்த ராஜபக்ச அன்று போரை முடிவுக்குக் கொண்டு வந்ததுடன் நிறுத்திக்கொள்ளாது அபிவிருத்தியையும் ஏற்படுத்தியிருந்தார்.

சிறிலங்கா சுதந்திரக் கட்சி எப்பொழுதும் முற்போக்கு மக்கள் சமூகத்துடனேயே இணைந்திருக்கவேண்டும். இன்று நாம் முற்போக்கான சமூகத்துடனேயே இருக்கின்றோம்.

சுதந்திரக்கட்சியின் தலைவர்கள் பழி வாங்கும் எண்ணங்களைக் கைவிட்டுக் குரோத உணர்வுகளைப்புறந்தள்ளி முற்போக்குச் சமூகத்துடன் இணைந்து கொண்டால் கட்சியை ஒன்றிணைப்பது சிரமமானதல்ல - என்றார். (ந-ஐ-5)

# இராணுவத்தை நீதிமன்றில் முன்னிலைப்படுத்த முடியாது


## போர்க்குற்ற விசாரணைக்கு ஆலோசனை வழங்க வந்த டெஸ்மன் டி சில்வா கூறுகின்றார்

கொழும்பு, ஜூலை 7

போரில் பங்கெடுத்த இராணுவத்தினரை சிறப்பு நீதிமன்றில் முற்படுத்த முடியாது.

இவ்வாறு தெரிவித்தார் பிரிட்டன் சட்டத்தரணி டெஸ்மன் டி சில்வா. இவர் போர்க்குற்ற விசாரணைக்கு ஆலோசனை வழங்க இலங்கையால் நியமிக்கப்பட்டவராவார்.

கொழும்பு ஊடகத்துக்கே அவர் இவ்வாறு கூறினார்.



"இராணுவத்தினர் குற்றச்செயல்களில் ஈடுபடவில்லை. அவர்கள் மீது நீதிமன்ற விசாரணை நடத்த முடியாது. 30 ஆண்டுகள் புலிகளால் உருவாக்கப்பட்ட பீதியை இராணுவத்தினர் இல்லாது அழித்தனர். சிவிலியன்கள் மீது தாக்குதல்களை நடத்திய புலிகள் மீது ஐ.நா. அமைப்பு எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை" - என்று அவர் கூறினார். (ந-5)

# விமானப் படையின் பிடியில் இருந்து விடுபட்டது மட்டு. விமான நிலையம்

கொழும்பு, ஜூலை 7

விமானப் படையின் கட்டுப்பாட்டில் இருந்த மட்டக்களப்பு விமான நிலையம் சிவில் விமானப் போக்குவரத்து அதிகார சபையால் பொறுப்பேற்கப்பட்டது.

இது குறித்த வர்த்தமானி அறிவித்தல் மே மாதம் 31ஆம் திகதி வெளியிடப்பட்டது. சிவில் போக்குவரத்தை அதிகரிக்கவே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டது.

மட்டக்களப்பு விமான நிலையத்தின் ஓடுபாதை அண்மையில் விமானப் படையின் உதவியுடன் வீதி அபிவிருத்தி அதிகார சபையால் ஆயிரத்து 400 மில்லியன் ரூபா செலவில் திருத்தப்பட்டது. எதிர்வரும் ஜனவரி மாதம் முதல் சிவில் விமான சேவைகளை இங்கு ஆரம்பிக்க முடியும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. "இலங்கையில் 16 விமான நிலையங்கள் உள்ளன. அவற்றில் 4 மாத்திரமே எமது கட்டுப்பாட்டில் உள்ளன. ஏனையவை விமானப் படையின் கட்டுப்பாட்டிலேயே இயங்குகின்றன"- என்று சிவில் விமானப் போக்கு வரத்து அதிகார சபையின் பணிப்பாளர் நிமல சிறி கூறினார்.

"மட்டக்களப்பு விமான நிலையத்தின் செயற்பாடுகள் அனைத்தும் சிவில் விமானப் போக்குவரத்து அதிகார சபையிடம் கையளிக்கப்பட்டுள்ளன. விமான நிலையத்தின் சுற்றாடல் பாதுகாப்பு விமானப் படையின் வசமே தற்போதும் உள்ளது".- என்று விமானப் படைப் பேச்சாளர் சந்திம அல்விஸ் தெரிவித்தார். (ந-5)



# இலங்கைக்கு ரஷ்யாவின் நவீன போர் தளபாடங்கள்

கொழும்பு, ஜூலை 7

இலங்கை இராணுவத்துக்கு சில நவீன போர்த் தளபாடங்களை ரஷ்யா வழங்கவுள்ளது. இலங்கைக்கான ரஷ்யத் தூதுவர் அலெக்சாண்டர் கரசவா இவ்வாறு தெரிவித்தார்.

கொழும்பில் உள்ள ரஷ்யத் தூதரகத்தில் நடந்த நிகழ்வொன்றில் அவர் இதனைக் கூறினார்.

ரஷ்யாவுக்கும் இலங்கைக்கும் இடையிலான பாதுகாப்பு ஒத்துழைப்பு அதிகரித்துள்ளது. இலங்கைப் படைகளுக்குச் சில நவீன இராணுத் தளபாடங்களைப் பாதுகாப்பு ஒத்துழைப்பின் அடிப்படையில் ரஷ்யா வழங்கவுள்ளது.

கடந்த நான்கு ஆண்டுகளில் ரஷ்யா இலங்கையுடன் பல இருதரப்பு ஒப்பந்தங்களை மேற் கொண்டது. அதில் போர்த் தளபாடங்கள் வழங்கும் உடன்பாடுகளும் உள்ளன - என்று அவர் கூறினார். (ந-5)

# ஐ.நாவில் குற்றச்சாட்டுக்களுக்கு மங்கள உரிய பதில் கூறவில்லை

## நாட்டு நலனுக்கு இது எதிரானது என குளோபல் சிறிலங்கன் போரம் குற்றச்சாட்டு

கொழும்பு, ஜூலை 7

இலங்கையின் நீதிக் கட்டமைப்பு நம்பகத்தன்மை அற்றது என்ற பன்னாடுகளின் குற்றச்சாட்டை வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர ஏற்றுக்கொண்டார். இது நாட்டு நலனுக்கு எதிரானது.

இவ்வாறு குற்றஞ்சாட்டியுள்ளது குளோபல் சிறிலங்கன் போரம் என்ற அமைப்பு.

அந்த அமைப்பு தெரிவித்ததாவது:

ஐ.நா.மனிதஉரிமைகள்சபையின் 32ஆவது கூட்டத் தொடர் முடிந்தது. அதில் இலங்கை மீது குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டன. வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர அவற்றை மறுக்கவில்லை. அரசமைப்புக்கு எதிராகவும், நாட்டுக்கு எதிராகவும் அமைச்சர் நடந்துள்ளார்.

குற்றச்சாட்டுக்களை மங்கள உரிய முறையில் எதிர்கொள்ளவில்லை. நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கையைப் பயன்படுத்தி இலங்கை மீதான குற்றச்சாட்டுக்களை முறியடித்திருக்க முடியும் - என்று தெரிவித்தது. (ந-5)

# எல்லை நிர்ணயப் பிரச்சினைகள் இன்னமும் தீர்க்கப்படவில்லை

## மீளாய்வுக் குழுத் தலைவர் தெரிவிப்பு

வடக்கு மாகாணம், மாத்தளை, நுவரெலியா மாவட்டங்களின் எல்லை நிர்ணயப் பிரச்சினை இன்னமும் தீர்க்கப்படவில்லை.

இவ்வாறு எல்லை நிர்ணய மீளாய்வுக் குழுவின் தலைவர் அசோக பீரிஸ் தெரிவித்தார்.

"தேர்தல் தொகுதிகளின் எல்லை நிர்ணயத்தில் பிரச்சினைகள் எழுந்திருந்தன. அவற்றுக்குத் தீர்வு எட்டுவதற்காக எல்லை நிர்ணய மீளாய்வுக் குழு உள்ளூராட்சி மற்றும் மாகாணசபைகள் அமைச்சர் பைசர் முஸ்தபாவால் உருவாக்கப்பட்டது. இந்தக் குழு தனது இறுதி அறிக்கையை ஓகஸ்ட் மாதம் வழங்க வேண்டும். 7 மாவட்டங்களின் எல்லை நிர்ணய சிக்கல்களுக்கு தீர்வு காணப்படவில்லை. இறுதி அறிக்கையைத் தயாரிப்பதில் தாமதம் ஏற்படலாம்"- என்று அசோக பீரிஸ் கூறினார்.

எல்லை நிர்ணயப் பணிகள் முடியாதுள்ளமையே உள்ளூராட்சித் தேர்தல் பிற்போடப்படுவதற்குக் காரணம் என்று அமைச்சர் பைசர் முஸ்தபா முன்னொரு சந்தர்ப்பத்தில் கூறினார். எதிர்வரும் சித்திரை மாதம் வருடப்பிறப்புக்கு முன்னதாக தேர்தல் நடத்தப்படும் என்று எதிர்பார்க்கின்றோம் என்றும் அவர் கூறியிருந்தார். (ந-5)

## தண்டத்தை இனிமேல் 30 நாள்களுள் செலுத்தலாம்

கொழும்பு, ஜூலை 7

வீதிப் போக்குவரத்துக் குற்றங்களுக்கு அறவிடப்படும் தண்டப் பணத்தைச் செலுத்தும் கால அவகாசம் 30 நாள்களாக அதிகரிக்கப்பட்டது.

இவ்வாறு போக்குவரத்துப் பிரிவுக்குப் பொறுப்பான பிரதிப்பொலிஸ் மா அதிபர் அமரசிறி கூறினார்.

போக்குவரத்து விதிகளை மீறியமைக்காக விதிக்கப்படும் தண்டத் தொகை செலுத்தும் கால அவகாசம் இதுவரை 14 நாள்களாகவே இருந்தது. (ந-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிபுணத்துவ சேவைகளை மாத்திரமே ராஜ் ராஜரத்தினத்துக்கு வழங்கினேன்

## மத்திய வங்கி ஆளுநர் விளக்கம்

கொழும்பு, ஜூலை 7
பங்கு வர்த்தக மோசடியில் அமெரிக்காவில் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ள ராஜ் ராஜரத்தினத்துக்கு நிபுணத்துவ சேவைகளையே வழங்கினேன்.
இவ்வாறு இலங்கை மத்திய வங்கியின் ஆளுநராகப் பொறுப்பேற்றுள்ள இந்திரஜித் குமாரசுவாமி தெரிவித்தார்.
பதவியேற்ற பின்னர் ஊடகவியலாளர்களைச் சந்தித்தபோது அவர் இவ்வாறு தெரிவித்தார்.
ஒரு பொருளியலாளராக அவருக்குச் சில குறிப்பிட்ட நிபுணத்துவ சேவைகளை மாத்திரம் வழங்கினேன். ஆய்வு அறிக்கைகளை வழங்குவது மட்டுமே எனது பணியாக இருந்தது. பல்கலைக் கழகத்தில் கல்வி கற்ற காலத்தில் ராஜரத்தினம் எனது நண்பர். நான் லண்டனில் இருந்தபோது அவருக்கு நுண் பொருளியல் ஆய்வை மேற்கொண்டேன். அவருக்கு எனது பின்புலம் தெரியும். எனது உதவியைக் கோரினார்.
10,11 மாதங்கள் அவருக்காகப் பணியாற்றினேன். அதற்குப் பின்னர் அவர் குற்றஞ் சாட்டப்பட்டார். ஒரு நண்பனாகவே அவரை எனக்குத் தெரியும். அவர் இலங்கைக்கு உதவிகளை வழங்கினார். சாதகமான பல சிந்தனைகளைக் கொண்டிருந்தார். பெருமளவில் தொண்டுப் பணிகளை ஆற்றினார். எனக்குத் தெரிந்த ராஜ் ராஜரத்தினம் அவர்தான் - என்று மத்திய வங்கி ஆளுநர் கூறினார்.
இலங்கைத் தமிழரான ராஜ் ராஜரத்தினம் புலிகளுடன் தொடர்புடையவர் என்றும், அவருடன் தொடர்பு வைத்திருந்தவரை மத்திய வங்கியின் ஆளுநராக நியமிப்பது தவறு என்றும் கூட்டு எதிரணியைச் சேர்ந்த விமல் வீரவன்ச, உதய கம்மன்பில ஆகியோர் தெரிவித்திருந்தனர். (ந-5)

# லசந்த கொலை விசாரணைகளை திசை திருப்பிய அதிகாரிகள்!

கொழும்பு, ஜூலை 7
சண்டே லீடர் பத்திரிகையின் பிரதம ஆசிரியர் லசந்த விக்ரமதுங்கவின் கொலை தொடர்பாக விசாரணைகளைத் திசை திருப்பினர் என்று பொலிஸ் உயர் அதிகாரிகள் மீது குற்றஞ் சாட்டப்படுகின்றது.
பொலிஸ் திணைக்கள உயர் அதிகாரிகள் சிலர் விசாரணைகளைத் திட்டமிட்டுத் திசை திருப்பினர் என்றும், உண்மையை மூடி மறைக்கும் நோக்கோடு செயற்பட்டனர் என்றும் கூறப்படுகின்றது. இவர்கள் தொடர்பில் விசாரணைகள் ஆரம்பிக்கப்படவுள்ளன.
லசந்த கொலையுடன் இராணுவப் புலனாய்வுப் பிரிவுக்குத் தொடர்பு உள்ளது என்று சந்தேகிக்கப்படுகின்றது. இராணுவப் புலனாய்வாளர்கள் 17 பேர் கைது செய்யப்பட்டிருந்தனர். அவர்கள் பொலிஸ்பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர். அவர்களில் சிலருக்குச் கொலையுடன் நேரடித் தொடர்பு உண்டு என்று கூறப்படுகின்றது. (ந-5)

# புத்தகப் பைக்குள் மதுப் போத்தல் கண்டியில் சம்பவம்

கொழும்பு, ஜூலை 7
கண்டி மாவட்டப் பாடசாலையில் தரம் 8 இல் கல்வி கற்கும் மாணவன் ஒருவனின் புத்தகப் பையில் இருந்து மதுபானப் போத்தல் மீட்கப்பட்டுள்ளது.
மாணவனின் புத்தகப் பையில் இருந்த இரண்டு போத்தல்கள் கீழே விழுந்துள்ளன. உடனேயே பையை மூடுவதற்கு மாணவன் முயற்சித்துள்ளான்.
அவதானித்த சிறுவனின் ஆசிரியரான பிக்கு, உனது பையில் இரண்டு போத்தல்களா? ஏன் நீ இரண்டு போத்தல் நீரை பாடசாலைக்கு எடுத்து வந்தாய்? என்று கேள்வி எழுப்பினார். போத்தல்களை நன்கு அவதானித்த பிக்கு, ஒரு போத்தலில் நீர் இருந்ததையும் மற்றைய போத்தலில் மதுபானம் இருந்ததையும் அவதானித்துள்ளார். மாணவனிடம் விசாரணைகள் மேற்கொண்டார். தனது அப்பா நண்பர்களுடன் பகிர்ந்துகொண்ட மதுபானத்தின் அரைவாசியை வீட்டிலிருந்து பாடசாலைக்குக் கொண்டுவந்தேன் என்று மாணவன் குறிப்பிட்டுள்ளான்.
(ந-5)


# மாவட்டச்செயலகம், கிளிநொச்சி
# குடிசார் வேலைகளுக்கான கேள்வி அறிவித்தல்

கிளிநொச்சி மாவட்டச்செயலாளரினால் பின்வரும் விவரங்களைக் கொண்ட குடிசார் வேலைகளுக்கு கேள்விகள் கோரப்படுகின்றன.

| | ஒப்பந்த பெயர் நிர்மாணம் | ஒப்பந்த தொகை | வேண்டப்படும் ஆகக்குறைந்த ICTAD தரம்/பதிவு | கேள்விப் பிணைப்பணம், செல்லுபடியாகும் காலம் |
|---|---|---|---|---|
| 1 | திருவையாறு வைத்தியசாலை வீதி | 9மில்லியன் (வற், ஏனைய நீங்கலாக) | C7 or above Highway | ரூபா-90,000.00 வங்கி பிணை 31/10/2016வரை |
| 2 | மீனாட்சி அம்மன் கோவில் வீதி | 2.07மில்லியன் (வற், ஏனைய நீங்கலாக) | C8 or above Highway | ரூபா-21,000.00 வங்கி பிணை 31/10/2016வரை |
| 3 | உருத்திரபுரம் வைத்தியசாலை வீதி | 10மில்லியன் (வற், ஏனைய நீங்கலாக) | C7 or above Highway | ரூபா-100,000.00 வங்கி பிணை 31/10/2016வரை |
| 4 | இந்துக்கல்லூரி மனையியல் விருத்தி அறை | 2.7மில்லியன் (வற், ஏனைய நீங்கலாக) | C8 or above Building | ரூபா-27,000.00 வங்கி பிணை 31/10/2016வரை |
| 5 | ஜெயந்திநகர் GHC நிர்மாணம் | 1.92மில்லியன் (வற், ஏனைய நீங்கலாக) | C8 or above Building | ரூபா-20,000.00 வங்கி பிணை 31/10/2016வரை |
| 6 | திருத்தம் தர்மபுரம் 3ம்யுனிற் புளியம்பொக்கணை வீதி, கண்டாவளை | 10மில்லியன் (வற், ஏனைய நீங்கலாக) | C7 or above Highway | ரூபா-100,000.00 வங்கி பிணை 31/10/2016வரை |
| 7 | புதிய கட்டட நிர்மாணம் முருகானந்தா கல்லூரி | 5மில்லியன் (வற், ஏனைய நீங்கலாக) | C7 or above Building | ரூபா-50,000.00 வங்கி பிணை 31/10/2016வரை |
| 8 | விளையாட்டு மைதான வீதி தம்பாகமம், பளை | 3மில்லியன் (வற், ஏனைய நீங்கலாக) | C8 or above Highway | ரூபா-30,000.00 வங்கி பிணை 31/10/2016வரை |
| 9 | சோரன்பற்று மத்திய வீதி | 9.15மில்லியன் (வற், ஏனைய நீங்கலாக) | C7 or above Highway | ரூபா92,000.00 வங்கி பிணை 31/10/2016வரை |
| 10 | உள்ளக வீதி நிர்மாணம் தம்பாகமம் | 5மில்லியன் (வற், ஏனைய நீங்கலாக) | C7 or above Highway | ரூபா-50,000.00 வங்கி பிணை 31/10/2016வரை |
| 11 | தம்பாகமம் GHC நிர்மாணம் | 1.93மில்லியன் (வற், ஏனைய நீங்கலாக) | C8 or above Building | ரூபா-20,000.00 வங்கி பிணை 31/10/2016வரை |
| 12 | கிளாலி GHC நிர்மாணம் | 1.93மில்லியன் (வற், ஏனைய நீங்கலாக) | C8 or above Building | ரூபா-20,000.00 வங்கி பிணை 31/10/2016வரை |
| 13 | பயிற்சி நிலையத்திற்கான உள்ளக வீதி தெளிகரை, பூநகரி | 8மில்லியன் (வற், ஏனைய நீங்கலாக) | C7 or above Highway | ரூபா-80,000.00 வங்கி பிணை 31/10/2016வரை |
| 14 | நாச்சிக்குடா பிரதான வீதி | 9மில்லியன் (வற், ஏனைய நீங்கலாக) | C7 or above Highway | ரூபா-90,000.00 வங்கி பிணை 31/10/2016வரை |
| 15 | வகுப்பறை நிர்மாணம் வினாசியோடை GTMS, பூநகரி | 5மில்லியன் (வற், ஏனைய நீங்கலாக) | C7 or above Building | ரூபா-50,000.00 வங்கி பிணை 31/10/2016வரை |

1. பின்வரும் தகுதிகளைக் கொண்டுள்ளதாக விளங்கும் உறுதியான நோக்கமுடைய சகல ஒப்பந்தகாரர்களும் கேள்வி கோருவதற்கு தகுதியுடையவராவார்.
   I. நிர்மாணப்பயிற்சி அபிவிருத்தி நிறுவனத்தால் இக்ராட்(ICTAD/CIDA) விருத்தி செய்யப்பட்ட தேசிய நிர்மாண ஒப்பந்ததாரரை பதிவு செய்யும் திட்டத்தின் கீழ் மேற்படி அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட தரமொன்றில் ஒப்பந்ததாரர் பதிவு செய்யப்பட்டிருக்க வேண்டும்.
   II. இக்ராட் வழிகாட்டல் முறைகளின் பிரகாரம் கணக்கிடப்பட்டவாறு வேலையை பொறுப்பேற்பவர் போதியளவு ஒப்பந்தங்களை மேற்கொண்ட ஆற்றலை கொண்டிருக்க வேண்டும்.
   III. ஒப்பந்ததாரர் மோசடியான அல்லது வஞ்சனையான நடவடிக்கைகளுக்கு அல்லது திருப்திகரமற்ற வேலைச் செயற்திறனுக்கு உட்பட்டு தகுதியற்றவர் என்ற பிரகடனத்தின் கீழ் இருக்க கூடாது.
2. ஆர்வமுள்ள தகுதிவாய்ந்த கேள்விதாரர்கள் கேள்விகள் தொடர்பான மேலதிக தகவல்களை கிளிநொச்சி மாவட்டச்செயலக நிர்வாகக்கிளையில் பெற்றுக்கொள்ளலாம்.(தொ.பே.இல:-0212285357, பக்ஸ் இல:-0212283966)
3. கேள்வி ஆவணங்களை 11.07.2016 ஆம்திகதியிலிருந்து 01.08.2016ஆம்திகதிவரை முற்பகல் 9.30மணி முதல் பிற்பகல் 3.00மணிவரை வேலை நாள்களில் கிளிநொச்சி மாவட்ட செயலக நிர்வாகக்கிளையில் மீளளிக்கப்படாத ரூபா 2000.00கட்டணத்தைச் செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம்.
4. இரு அரக்கு முத்திரை இடப்பட்ட உறைகளில் (மூலப்பிரதி, பிரதி) தனித்தனியாக சமர்ப்பிக்கப்பட்டுள்ள விலையிடப்பட்ட கேள்வியையும், கேள்வி கோருவோரின் முன் தகுதிக்கு அவசியமான ஆவணத்தையும் கேள்விகள் கொண்டிருக்க வேண்டும் என்பதுடன் அது தொடர்பாக பந்தி5இல் குறிப்பிடப்பட்டுள்ள இடம் திகதி மற்றும் நேரம் ஆகியவற்றுக்கு ஒப்படைத்தல் வேண்டும்.
5. அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகள் யாவும் **தலைவர், திணைக்கள பெறுகைக் குழு, மாவட்டச்செயலகம் கிளிநொச்சி** எனும் விலாசத்திற்கு **01.08.2016** ஆம் திகதி முற்பகல் 10.00மணிக்குமுன் கிடைக்கப்பெறல் வேண்டும் உடனடியாக கேள்விகள் திறக்கப்படும். கேள்விகள் திறக்கப்படும் நேரத்தில் கேள்விதாரர்கள் அல்லது அவர்களது அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதிகள் சமுகமளிக்க முடியும்.
6. கேள்விகள் தயாரிப்பு அல்லது ஒப்படைப்புக்கு கேள்விதாரர்களுக்கு ஏற்படும் ஏதாவது செலவுகளுக்கு அல்லது செலவீனங்களுக்கு தொழில் தருநர் பொறுப்பாகமாட்டார்.
7. தாமதமாக கிடைக்கும் விலையிடப்பட்ட கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது என்பதுடன் நிதி அமைச்சினால் வெளியிடப்பட்ட நிதிச்சுற்றறிக்கை 04/2016 இற்கு அமைவாக வடக்கு மாகாணத்தை சார்ந்தவர்களுக்கே முன்னுரிமையளிக்கப்படும்.

சுந்தரம் அருமைநாயகம்
திணைக்கள பெறுகைக் குழுவின் தலைவரும்,
அரசாங்க அதிபர்/மாவட்டச்செயலாளர்
கிளிநொச்சி மாவட்டம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450
செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## நல்லிணக்கம் துளிர்க்க மக்கள் நலனே முதன்மைத் தேவை

கொத்துக் குண்டு விவகாரத்துக்குப் பன்னாட்டு விசாரணை மிகவும் அவசியம் என்று நாடாளுமன்றில் ஓங்கி ஒலித்துள்ளார், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சிவசக்தி ஆனந்தன்.

உண்மையில், நாட்டில் நல்லிணக்கத்தைக் கொண்டு வரவேண்டும் என்று நல்லாட்சி அரசு மனதார நினைக்குமானால், இது குறித்துப் பக்கச் சார்பற்ற விசாரணைகளை நடத்தி, நாட்டின் சகல மக்களுக்கும் உண்மையை வெளிப்படுத்த வேண்டும் என்று, அவர் வலியுறுத்தினார்.

இறுதிக் கட்டப் போரின்போது, கொத்துக் குண்டுகள் பாவிக்கப்பட்டுள்ளன என்று உறுதிப்படுத்தும் வகையில், ஜனாதிபதி ஆணைக்குழுவின் தலைவர் பரணகம கருத்து வெளியிட்டிருந்தார் என்றும் சிவசக்தி ஆனந்தன், சபையில் எடுத்துரைத்திருக்கிறார்.

இது குறித்துப் பக்கச்சார்பற்ற அனைத்துலக மட்ட விசாரணை நடத்தப்பட வேண்டும் என்று ஐ.நா.மனித உரிமைகள் ஆணையாளர் சைட் அல் ஹுசைனும் வலியுறுத்தி இருந்தார்.

"கோத்தா முகாம்கள்" என்ற சித்திரவதை முகாம்கள் நாட்டில் இருப்பதாக நாம் முன்னர் சுட்டிக்காட்டிய போதிலும் அரசினால் அவை மறுக்கப்பட்டன

இது போன்ற விடயங்களில் விவகாரங்களில் அரசு, உள்ளார்ந்து விசாரணை நடத்தினால் மட்டுமே, நாட்டில் நல்லிணக்கத்தை உண்டாக்க முடியும் என்றும் சபைக்கு எடுத்துரைக்கப்பட்டது.

நல்லாட்சி, நல்லிணக்கம் என்ற மினுக்கமான சொற்பதங்களை, ஆட்சியாளர்களும், அரசு சார்பானவர்களும் நாளாந்தம், அடிக்கடி உரத்த தொனியில் கூறிவருகின்றார்கள்!

உண்மை உரைக்கப்பட்டால் மட்டுமே, நல்லாட்சியும் அதனூடாக நல்லிணக்கமும் மேலெழும். இன, மத அரசியல் மேம்பாட்டுக்கு வகை செய்வதும் அவையே.

அவை யாவற்றுக்கும் உண்மையே அடிநாதமாக விளங்கவேண்டும். அந்த வகை சார்ந்தால் மட்டுமே, முதலில் நாட்டில் இனங்கள் இடையே தவிர்க்க இயலாத நல்லிணக்கம் ஊடறுத்துப் பாய்ந்து நாட்டுக்குப் பல நலன்களைக் கொணரும்.

அந்த "உண்மை" ஆட்சியாளர்களால் மனதார்ந்து உய்த்து உணரப்படாவிடில், எல்லாமே அடியில் இருந்து தலை வரை "அம்போ" ஆகிவிடும்


சுருக்கமாகச் சொல்வதாயின், மக்கள் நலன்களை எறிந்துவிட்டு அரசியல் செய்யாமல், தகிடுதத்தம் பண்ணினால் நாட்டின் முன்னேற்றம் துண்டு துண்டாகச் சிதறும்

உண்மையான நல்லிணக்கத்தை நாடுபவர்கள், நல்லாட்சி நடத்த முனைபவர்கள்.

மக்கள் நலன் நாடிச் செயற்படாவிடில் யாவுமே வெளிவேசமாகி, கந்தறுந்து போகும். இதற்கு மேல் வேறென் சொல்ல...?

# என்று மறையும் இந்த இலங்கையின் நாசம்..

வந்தியத்தேவர்



ஆசை யாரைத் தான் விட்டது என்பார்கள். முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச மூன்றாவது முறையும் ஜனாதிபதியாகி, அதன் மூலம் ஆயுள் முழுவதும் நாட்டின் ஆட்சியாளராகி விடும் கனவில் மிதந்தார். இதனால் சோதிடத்தை நம்பியும், சட்டங்களில் தனக்கு வசதியாகத் திருத்தங்களை ஏற்படுத்தியும் கூட மக்களால் நிராகரிக்கப்பட்டு விட்டார். ஜனாதிபதியாக இருக்க வேண்டிய மீதிக் காலத்தையும் பறிகொடுத்துவிட்டு, இனி எப்படியும் பிரதமராகி விடவேண்டும் என்று கனவுகண்டு கொண்டிருக்கிறார். மகிந்த பிரதமர் கனவு காண, சகோதரர் கோத்தபாய ராஜபக்ச அடுத்த ஜனாதிபதிக் கனவில் மிதக்கத் தொடங்கியுள்ளார். தன்னை ஜனாதிபதியாக்க மக்கள் விரும்புகிறார்களாம். ஜனாதிபதியாகத் தான் நாட்டில் பதவிவகிக்கவேண்டும் என்பது பலரின் நோக்கமாம். அடுத்த தேர்தலில் போட்டியிடும் வகையில் இப்போதிருந்தே செயற்படுமாறு இங்குள்ள மக்களும் வெளிநாடுகளில் உள்ள மக்களும் தம்மை வலியுறுத்துகின்றனர் என்று அவர் கூறியுள்ளார். ஜனாதிபதியாகவும் பிரதமராகவும் பதவி யேற்று மீண்டும் நாட்டில் குடும்ப ஆட்சியைக் கொண்டு வந்துவிட வேண்டும் என்ற ஆதங்கத்தில் கோத்தபாயவும் மகிந்தவும் உள்ளார்களா? அல்லது தாது சேனன், காசியப்பன் போன்று இவருக்குமிடையில் ஏதும் முரண்பாடா?



தமிழ் மக்களை மட்டுமே அழிப்பதற்காகச் செயற்பட்டவரல்லர் முன்னாள் பாதுகாப்பு அமைச்சின்செயலாளராக இருந்த கோத்தபாய. சிங்கள மக்களுக்கும்கூட அவர் நன்மை செய்யும் வகையில் செயற்பட்டார் என்பதை எவரும் முழுமையாக ஒப்புக் கொள்வதில்லை. வெள்ளை வான் கடத்தலின் பிதாமகராக இருந்த அவரால், காணாமற் போகச் செய்யப்பட்டோர் தமிழர்கள் மட்டுமல்ல சிங்கள மக்களும் தான். நாடு நெருப்பாற்றில் [illegible] ஊழல் [illegible] குற்றங்களுக்கும்கூட முக்கிய காரணியாக அவரும் இருந்துள்ளார். தமது இனமக்களைக்கூட விட்டு வைக்க விரும்பாத ஒருவர் நாட்டின் ஜனாதிபதியாக வர வேண்டும் என எந்த ஒரு சிங்களப் பிரசையும் விரும்புவார்களா? முள்ளிவாய்க்கால் இறுதிப் போரில் சரணடைந்த பலர் கொலை செய்யப்படவும் காணாமற் போகவும் முக்கியமாக இருந்தவரும் இவரே என்ற சந்தேகங்களும் இல்லாமல் இல்லை. இலங்கையில் ஏற்கனவே இடம்பெற்ற வன்முறைகளிலும் பார்க்க திட்டமிட்ட முறையில் நிகழ்த்தப்பட்ட மிகப்பெரிய அரச கொடூரம் என்பது கடந்த ஆட்சியின் போதுதான் நடைபெற்றது.

ஒரு குடும்பத்தினரின் கூட்டரசில் தாம் பட்ட இடர்பாடுகளை அவர்கள் மறந்துவிட்டனர் எனக் கருதிக் கொண்டு கோத்தபாய ஜனாதிபதிக் கனவில் மிதக்கத் தொடங்கி விட்டார் போல் தெரிகிறது. சட்ட விரோதமான முறையில் கொத்துக்குண்டுகள் போர் வெற்றிக்காகப் பயன்படுத்தப்பட்டிருந்தன என ஏற்கனவே கூறப்பட்டு வந்தது. ஆனால் தான் அவற்றை வாங்கவில்லை என அவர் குறிப்பிடுகிறார். பாதுகாப்புச் செயலாளரான அவரது அனுசரணை இல்லாமல் எப்படி அவை பயன்படுத்தப்பட்டன? அது குறித்த படங்களைத் தவறானது எனக் கூறி அவர் தப்பிக்க முயல்வது குறித்து சர்வதேசத்தின் கண்காணிப்பு அவசியம்.

இராணுவத்தைக் கொண்டு ஆட்சியைக் கைப்பற்ற மகிந்த ராஜபக்ச கனவு காண்கிறார் எனவும், அதற்காக விகாரைகள் தோறும் சென்று பிக்குமார்களைத் தூண்டிவிடும் வகையில் செயற்படுகிறார் எனவும், தமது பிறந்த தினமான நவம்பர் 18 இல் புதிய அரசியல் கூட்டணியொன்று உதயமாகலாம் எனவும் கூடத் தகவல்கள் உள்ளன.

மகிந்த மீது பல குற்றச்சாட்டுக்கள் கூறப்பட்டாலும் அவருக்கு எதிரானஊழல், மோசடிக் குற்றச்சாட்டுக்கள் இன்னமும் அரசினால் முன்வைக்கப்பட்டதாக இல்லை. அரசின் மென்மைப் போக்கே குற்றவாளிகளான அரசியல்வாதிகள் இன்னமும் சுதந்திரமாக நாட்டில் நடமாடக்கூடிய வசதிகளை ஏற்படுத்தியுள்ளது. இதனை இதனால் இவன் முடிக்கும் என்று ஆய்த்து அதனை அவன் கண் விடுவதே மேல் என்ற கோட்பாடுகள் இன்னமும் மக்களால் உணரப்பட்டதாக இல்லை. இந்தப் போக்கே பெருமளவில் ஊழல் மோசடிகள் நிறைந்தவர்கள் மீண்டும் மீண்டும் அரசியல் களத்தை நாடி வரவும் குடும்ப ஆட்சிக்கான விருப்பை ஊக்குவிக்கவும் உதவுகிறது.

பல வருடங்களாக பிரதமர், ஜனாதிபதி அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் என அரசியல் பதவிகளை வகித்து ருசி கண்டவர்கள் மக்களுக்காக வருத்தப்பட்டுச் சிலுவை சுமப்பவர்களாகத் தம்மை வெளிக்காட்டிக் கொண்டு, நாட்டை எரிய விட்டு பிடில் வாசிக்கும் நீரோக்களாக வலம் வந்து கொண்டிருக்கிறார்கள். சகோதரர்களின் கனவும் இதற்கு ஒப்பானதே.என்று கலையும் இந்தச் சகோதரர்களது வெளிவேடம்? என்று மறையும் எங்கள் இலங்கையின் நாசம்?

## வாசகர் திருமுகம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மத்திய வங்கியின் ஆளுநர் நியமனத்திலும் இனவாத சாயம்


சேரலாதன்

மத்திய வங்கியின் புதிய ஆளுநர் நியமனத்துக்கும் தெற்கில் உள்ள இனவாதிகளிடமிருந்து எதிர்ப்புக்கள் கிளம்பியுள்ளன. பதவி விலகிய முன்னாள் ஆளுநர் அர்ஜுன மகேந்திரன் ஒரு தமிழர் என்பதால் இனவாதிகளின் எதிர்ப்புக்கு ஆளாகியிருந்தார். இந்த நிலையில் புதியவரும் ஒரு தமிழர் என்பதால் எதிர்ப்புக்கள் கிளம்பியுள்ளன.

இதுதொடர்பாகக்கருத்துவெளியிட்டுள்ள நாடாளுமன்ற உறுப்பினரும் தூய்மையான ஹெல உறுமயவின் தலைவருமாகிய உதய கம்மன்பில புதிய மத்திய வங்கியின் ஆளுநரான இந்திரஜித் குமாரசுவாமி அந்தப் பதவிக்குப் பொருத்தமானவர் அல்லர். அவருக்குத் தற்போது 66 வயதாகின்றது. அவர் தொடர்ந்து பதவி வகிப்பாராயின் அவரது குழப்பங்களின்றித் தீர்மானம் எடுக்கின்ற சக்தி குறைவடைந்து விடும் என்கிறார். இவ்வாறு பல காரணங்களை அடுக்கிக் கொண்டே போகிறார் உதய கம்மன்பில.

கம்மன்பில மகிந்த அணியைச் சேர்ந்தவர் மட்டுமல்லாது மோசடிக் குற்றச்சாட்டு ஒன்றின் பேரில் கைது செய்யப்பட்டு விளக்கமறியலிலும் வைக்கப்பட்டவர். நாட்டில் குழப்பங்கள் ஏற்படும் போதெல்லாம் உயர் பதவியில் இருந்த தமிழர்களை அங்கு கடமையாற்றிய பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்த கடைசிநிலை ஊழியர்கள்கூட மதிக்காது கேவலமாக நிந்தனை செய்துள்ளனர். அந்த அளவுக்கு இனவாதம் இந்த நாட்டில் தலைவிரித்து ஆடிக்கொண்டிருக்கின்றது.

பெரும்பான்மை, சிறுபான்மை என்பது ஜனநாயக நாடொன்றுக்கு ஒருபோதுமே அழகு தரமாட்டாது. அந்நியர் இந்த நாட்டை ஆண்டபோது இவை எங்கேயோ போய் ஒளிந்து கொண்டன? அந்நியரை ஏற்றுக்கொண்ட எம்மவர்க்குத் தமது சகோதர இனத்தை அரவணைத்துச் செல்வதில் என்ன தயக்கம்?



தற்போது மத்திய வங்கியின் 14ஆவது ஆளுநராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள இந்திரஜித் குமாரசுவாமிக்கு ஆரம்பத்திலேயே மனக்கிலேசத்தை ஏற்படுத்துவது மத்திய வங்கியின் செயற்பாடுகளுக்குப் பாதிப்பை ஏற்படுத்திவிடும் என்பதை அனைவரும் முதலில் உணர்ந்து கொள்ள வேண்டும். நாட்டின் பொருளாதாரத்தை வகுப்பதில் மத்திய வங்கிக்கு அதிக பொறுப்புக்கள் உள்ளன. இவை சரியாக நிறைவேற்றப்பட வேண்டுமானால் அதன் ஆளுநர் சுதந்திரமாகவும், மகிழ்ச்சியாகவும் தமது கடமைகளை ஆற்ற வேண்டும்.

> நாட்டின் பொருளாதாரத்தை வகுப்பதில் மத்திய வங்கிக்கு அதிக பொறுப்புக்கள் உள்ளன. இவை சரியாக நிறைவேற்றப்பட வேண்டுமானால் அதன் ஆளுநர் சுதந்திரமாகவும், மகிழ்ச்சியாகவும் தமது கடமைகளை ஆற்ற வேண்டும்.

முன்னாள் ஆளுநர் அர்ஜுன மகேந்திரன்கூட நீதிமன்றால் குற்றவாளியெனக் குறிப்பிடப் படவில்லை. அவர்தொடர்பான விசாரணை அறிக்கை சபாநாயகரிடம் சமர்ப்பிக்கப் பட்ட நிலையிலேயே இன்னமும் உள்ளது. இதேவேளை-முன்னாள் ஆளுநரைப் பதவியில் இருந்து அகற்றுவதில் ஜனாதிபதிக்கும் பிரதமருக்குமிடையில் பனிப் போர் ஒன்று இடம்பெற்றதாகக் கூறுவோரும் உண்டு. ஆனால், இதில் எந்த அளவுக்கு உண்மையுள்ளது என்பது தெரியவரவில்லை. ஆனால் ஜனாதிபதி சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவர் என்ற வகையில் அந்தக் கட்சியினரின் கோரிக்கைகளுக்குச் செவிமடுக்க வேண்டிய அவல நிலைக்குத் தள்ளப்பட்டமை தெளிவாகத் தெரிகின்றன. ஏனென்றால் அர்ஜுன மகேந்திரன்விடயத்தில் சிறிலங்கா சுதந்திரக் கட்சியும் ஐக்கிய தேசியக் கட்சியும் முரண்பட்டு நின்றமை இரகசியமானதொன்றல்ல.

மேலும், புதிதாக அச்சிடப்படும் ரூபா நோட்டுக்களில் புதிய மத்திய வங்கி ஆளுநரின் கையொப்பம் இடம் பிடிக்கப்போகின்றது. இதுகூட இனவாதிகளுக்கு ஏற்புடையதாக இருக்க மாட்டாது. ஏனென்றால் ஆளுநர் ஒரு தமிழராக இருக்கின்றார்.

தற்போது நாட்டின் பொருளாதாரம் கவலையை எற்படுத்தும் வகையில் சீரழிந்து காணப்படுகின்றது. பணவீக்கம் அதிகரித்துள்ளதால் பொருள்களின் விலைகள் ஏற்றம் கண்டுள்ளன. இலங்கை நாணயமும் அதன் பெறுமதியை இழந்ததால் இறக்குமதி செய்யப்படுகின்ற பொருள்களுக்கு அதிக பணத்தைச் செலவிட வேண்டியுள்ளது. ஏற்றுமதித் தொழில்களிலும் பெரும்வீழ்ச்சி காணப்படுகின்றது. தேயிலையின் உற்பத்தி வெகுவாகக் குறைந்து வருவதால் அந்நியச் செலாவணியும் பாதிப்புக்குள்ளாகியுள்ளது.

இவை எல்லாவற்றுக்கும் மேலாக முன்னைய அரசினால் பல்வேறு நாடுகளில் இருந்தும் பெறப் பட்ட கடன்கள் பெரும் சுமையாக நாட்டை அழுத்தி நிற்கின்றன. உள்நாட்டுச் செலவினங்களுக்குக்கூட கடன்களைப் பெற வேண்டிய அவல நிலையில் அரசு உள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்தச் சவால்களையெல்லாம் சமாளித்து நாட்டின் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்ப வேண்டிய முக்கிய பொறுப்பு மத்திய வங்கியின் ஆளுநருக்கு உண்டு. இதில் இன வேறுபாடுகளைத் தூக்கிப் பிடிப்பதால் நாடுதான் சீரழிவை எதிர்கொள்ளும் என்பதை இனவாதிகள் ஒரு கணம் சிந்தித்துப் பார்க்கவேண்டும்.

## பொருளாதார மத்திய நிலையத்துக்கு மாங்குளமே பொருத்தமான இடம்

வடக்குக்கான பொருளாதார மத்திய நிலையம் அமைப்பதில் வடக்கு மாகாணசபைக்கும் மத்திய அரசுக்கும் இடையில் அமைவிடத்தை தெரிவு செய்வதில் தொடர்ந்து இழுபறிநிலை நிலவுகின்றது. இதனிடையில் ஒட்டுசுட்டான் கமக்கார அமைப்புக்களினால் இந்த மத்திய நிலையத்தை மாங்குளத்தில் அமைக்குமாறு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. இதனை நானும் வரவேற்கிறேன்.

பொருளாதார மத்திய நிலையமொன்று வடபகுதியில் அமைய வேண்டியது அவசியம். வடக்கின் சகல உற்பத்தியாளர்களுக்குச் சாதகமாகவும் அவர்களுடைய பொருளாதாரத்தை முன்னேற்றுவதற்குக் காரணமாகவும் அது அமையவேண்டும். மாங்குளம் என்ற இடம் வடக்கின் சகல மாவட்டங்களுக்கும் மத்தியில் அமைந்த ஒரு இடமாகும். ஆகவே அந்த மாவட்டங்களிலிருந்து வருகை தருவது உற்பத்தியாளர்களுக்குச் சாதகமாகவும் அவர்களது செலவு, நேரம் என்பவற்றை மீதப்படுத்தி அவர்கள் உற்பத்தியில் மேன்மேலும் ஈடுபடுவதற்குத் துணைபுரியும் என்பதில் மாற்றுக் கருத்தில்லை.

முன்னாள் மத்தியவங்கி ஆளுநர் கூட தெரிவித்திருந்தார் சிறு கைத்தொழில் உற்பத்தியாளர்களை மேம்படுத்துவதிலேயே இலங்கையின் நிலையான அபிவிருத்தி Sustainable Development தங்கியுள்ளது என்று. மாங்குளத்தில் இந்தப் பொருளாதார மத்திய நிலையத்தை அமைப்பதன் ஊடாக வடக்கின் சிறுகைத்தொழில் உற்பத்தியாளர்கள் வளர்ச்சியடைவார்கள் என்பது திண்ணம். மேலும், பொருளாதார மத்திய நிலையம் எனும் தொனிப்பொருள் உற்பத்தியாளர்களின் பொருளாதார வளர்ச்சிக்கு மையமாகச் செயற்பட வேண்டுமேதவிர, மொத்த வியாபாரிகளின் பொருளாதாரத்தை மையப்படுத்திச் செயற்படுவது நியாயமல்ல. ஆகவே மாங்குளத்தில் பொருளாதார மத்திய நிலையம் அமைவது சிறுகைத்தொழில் உற்பத்தியாளர்களுக்கும், அத்துடன் சகல நுகர்வோர்களுக்கும், இறுதியில் முழுநாட்டினதும் நிலையான பொருளாதார அபிவிருத்திக்கும் நிச்சயமாகச் சிறந்ததாகும்.

விஸ்வ[illegible]

## அழிக்கப்பட்ட ஆலயங்களின் புனர்நிர்மாணம்

காங்கேசன்துறை முதலிவளவு முத்துமாரி அம்மன் கோயில், வலிகாமம் வடக்குப் பிரதேசத்தில் (ஜே/234 கிராம சேவகர் பிரிவுக்குட்பட்ட) பல காலமாக மக்களால் போற்றி வழிபடப்பட்ட ஆலயம். 1990ஆம் ஆண்டு ஜூன் மாதம் 15ஆம் திகதி இராணுவ நடவடிக்கை காரணமாக இந்த ஊரை விட்டு மக்கள் வெளியேறினர்.

இதன் காரணமாக இந்தக் கோயில் பூசை வழிபாடற்ற நிலைக்கு உள்ளாகியது. இந்த ஆலயத்தில் பிள்ளையார், அம்மன், முருகன், வைரவர் ஆகிய பரிவார மூர்த்திகள் வழிபடப்பட்டதாகக் கூறப்படுகிறது. ஒரு பரபரப்புக் கொண்ட கோயிலாக இது விளங்கி வந்தது. பங்குனி மாதம் வளர்பிறையில் உத்தர நட்சத்திரத்தில் திருவிழாவைக் கொண்டாடும் ஆலயமாகக் காணப்பட்டது.

இந்த ஆலயம் கடந்த 27ஆம் திகதி முதல் இராணுவ ஆக்கிரமிப்பிலிருந்து விடுவிக்கப்பட்டுள்ளது. இப்பொழுது இந்த ஆலயம் முற்றாக அழிக்கப்பட்டு ஆலயம் இருந்த இடம் தெரியாத வகையில் காட்சியளிக்கின்றது. இவ்வாறு மேலும் சில ஆலயங்கள் அழிவடைந்த நிலையில் எமது ஊரில் காணப்படுகின்றன. இதனை இந்து சமயப் பேரவை கருத்தில் கொண்டு அழிக்கப்பட்ட ஆலயங்களைப் புனர்நிர்மாணம் செய்து தரும்படி தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன்.

க.சந்திரலிங்கம்
காங்கேசன்துறை.

வாசகர் திருமுகம் பகுதிக்கு எழுதுபவர்கள் தமது பெயர், முகவரி, தொடர்பு எண் என்பவற்றை நிச்சயம் குறிப்பிட்டு அனுப்ப வேண்டும். சொந்தப் பெயரை வெளியிட விரும்பாதவர்கள் அது பற்றிக் குறிப்பிட்டு, புனை பெயரையும் எழுதி அனுப்பலாம். ஆனால் உண்மையான விவரங்கள் குறிப்பிடப்படாத வாசகர் திருமுகங்கள் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படமாட்டா. எழுதியவர்களின் விவரங்கள் குறித்த இரகசியங்கள் தேவைப்படும் பட்சத்தில் காக்கப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரம்ழான் மாதத்தில் மட்டும் 600 பேர் வரை படுகொலை

## ஆயுதக் குழுக்களின் தாக்குதல்களால்



பக்தாத், ஜூலை 7

புனித ரம்ழான் மாத்தில் இதுவரையில்லாத அளவுக்கு அதிக எண்ணிக்கையில், ஆயுதக் குழுக்களினால் உலகம் முழுவதும் இந்த உயிர் வேட்டை இடம்பெற்றுள்ளது என நிபுணர்கள் தெரிவித்தனர்.

ஜூன் 7ஆம் திகதி ரம்ழான் நோன்பு ஆரம்பிக்கப்பட்டதில் இருந்து, நேற்று முன்தினம் வரை 600 பேர் படுகொலை செய்யப்பட்டனர். இஸ்லாமிய மதவிழாவின்போது இஸ்லாமியர்களே கொல்லப்படுவது எந்த வகையில் நீதியானது என சமூக ஆர்வலர்கள் கேள்வி எழுப்பினர்.

இந்தப் படுகொலைகளில், அமெரிக்காவில் இடம்பெற்ற ஓர்லாண்டோ சூட்டுச் சம்பவத்தில் 49 பேர் உயிரிழந்தனர், 53 பேர் காயமடைந்தனர். 2001ஆம் ஆண்டு அல்-குவைதா அமைப்பு அமெரிக் காவைத் தாக்கிய பின்னர், இடம்பெற்ற மோசமான படுகொலைச் சம்பவமாக இது கருதப்படுகின்றது.

இதனைத் தொடர்ந்து பாகிஸ்தானில் லக்சர் ஈ தொய்பா இயக்கத்தின் தாக்குதலில் 8 பேர் கொல்லப்பட்டனர். இந்தத் தாக்குதலும் சற்றும் எதிர்பாராத வகையில் இடம்பெற்றது.

இதேவேளை-துருக்கி விமான நிலையத்தில் இடம்பெற்ற தாக்குதலில் 45 பேர் கொல்லப்பட்டனர்; 239 பேர் காயமடைந்தனர். பின்னர் கடந்த வாரத்தில் பங்ளாதேஷில் இடம்பெற்ற தாக்குதலில் 9 இத்தாலியர்கள், 7 ஜப்பானியர்கள், ஓர் இந்தியர் மற்றும் 2 பொலிஸார் உட்பட 22 பேர் கொல்லப்பட்டனர்.

பக்தாத்தில் வணிக வளாகத்தில் இடம்பெற்ற குண்டுவெடிப்பில், 215 பேர் உயிரிழந்ததுடன், நூற்றுக்கணக்கானோர் காயமடைந்தனர். ரம்ழான் மாதத்தில் இடம்பெற்ற தாக்குதல்களில், அதிக எண்ணிக்கையானோர் கொல்லப்பட்ட தாக்குதல் இதுவாகும்.

கடந்த திங்கட்கிழமை சவூதி அரேபியாவில் புனித மதீனா மசூதியில் தற்கொலைத் தாக்குதல் அரங்கேறியது. இந்தத் தாக்குதலில் 4 பேர் கொல்லப்பட்டனர். அதே தினத்தில் சவூதியில் 3 தற்கொலைக் குண்டுத் தாக்குதல்கள் இடம்பெற்றன.

> “பக்தாத்தில் வணிக வளாகத்தில் இடம்பெற்ற குண்டுவெடிப்பில், 215 பேர் உயிரிழந்ததுடன், நூற்றுக் கணக்கானோர் காயமடைந்தனர். ரம்ழான் மாதத்தில் இடம்பெற்ற தாக்குதல்களில், அதிக எண்ணிக்கையானோர் கொல்லப்பட்ட தாக்குதல் இதுவாகும்.”

இவற்றைப்போன்று ஆபிரிக்காவில் உள்ள போகோஹறாம், அல்-பாப் குழுவினர் நடத்திய பல்வேறு உதிரித் தாக்குதல்களில் 37 பேர் கொல்லப்பட்டனர். சோமாலியாவில் மொகடிசுவில் அமைந்துள்ள ஹோட்டல் தாக்கப்பட்டமை ஆபிரிக்காவைப் பரபரப்பில் ஆழ்த்தியது. இவற்றைத் தவிர சிரியா மற்றும் ஈராக் பகுதிகளில் இடம்பெற்ற தாக்குதல்களில் 200 பேர் கொல்லப்பட்டனர் எனக் கணக்கிடப்பட்டுள்ளது.

இந்தத் தாக்குதல்கள் அனைத்தும் புனித ரம்ழான் மாதத்தில் இடம்பெற்றவையாகும். ஒவ்வொரு கிழமையும் பல உதிரித் தாக்குதல்கள் இடம்பெற்றன.

இவ்வாறான தாக்குதல்கள் போராளி அமைப்புக்களை நிலை நிறுத்தவும், மக்கள் மத்தியில் அச்சத்தைத் தோற்றவிக்கவும் பயன்படுத்தப்படுகின்றன எனச் சர்வதேச ஊடகங்கள் கூறியுள்ளன. (து-ரி4)

# பங்களாதேஷ் குண்டுத் தாக்குதலுடன் அரசியல்வாதியின் மகனுக்கு தொடர்பு

டாக்கா, ஜூலை 7

பங்களாதேஷ் பயங்கரவாதத் தாக்குதலுடன் அந்த நாட்டு அரசியல்வாதி ஒருவரின் மகன் தொடர்புபட்டிருந்தமை தற்போது உறுதியாகி உள்ளது. அந்தவகையில் இந்தத் தாக்குதலில் மூளையாகச் செயற்பட்ட 6 பேரை தேடும் பணியில் பொலிஸார் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றனர்.

பங்களாதேஷின் தலைநகரான டாக்காவில் உள்ள பிரபல ஹோட்டலொன்றில் கடந்த முதலாம் திகதி பயங்கரவாதிகள் தாக்குதல் நடத்தினர், தாக்குதலின்போது ஹோட்டலில் தங்கியிருந்த வெளிநாட்டவர்களைப் பணயக் கைதிகளாகப் பிடித்தனர்.

தாக்குதலில் 20 பொதுமக்கள் உயிரிழந்த அதேவேளை, படையினரின் தாக்குதலில் ஆறு பயங்கரவாதிகள் அதிரடிப்படையினரால் சுட்டுக் கொல்லப்பட்டனர். அவ்வாறு சுட்டுக் கொல்லப்பட்ட ஜமாத்துல் முஜாகிதீன் பங்களாதேஷ் அமைப்பைச் சேர்ந்தவர்களின் பெயர் விவரம் வெளியிடப்பட்டதற்கு அமைவாகவே அதில் ஒருவர் அரசியல்வாதியின் மகன் என்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இவர் ஆளும் அவாமி லீக் கட்சியின் தலைவர்களில் ஒருவரான இம்தியாஸ் கான் பாபுல் என்பவரது மகன் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இது குறித்து அமைச்சர் கருத்து தெரிவிக்கையில், அவர் இப்படிப்பட்ட அமைப்புடன் தொடர்பு வைத்துக்கொண்டிருந்தார் என்பதற்கு வீட்டில் எந்தவொரு ஆதாரமும் இல்லை. எனவே எங்களுக்கு எந்த அறிகுறியும் தெரியவில்லை எனக் குறிப்பிட்டார்.



குறித்த தாக்குதலுக்கு ஐ.எஸ். தீவிரவாதிகள் பொறுப்பேற்றனர். ஆனால், இதை பங்களாதேஷ் அரசு நிராகரித்ததுடன், பங்களாதேஷில் ஐ.எஸ். இயக்கத்தினரோ அல்லது அல்குவைதா அமைப்பினரோ இல்லை என்பதை நான் மீண்டும் தெளிவுபடுத்த விரும்புகிறேன் என உள்துறை அமைச்சர் அசதுசாமான் கான் தெரிவித்தார். (கு)



## அதிசயிக்…

கேப்ரவுண், ஜூலை 7

தென்னாப்பிரிக்காவில்
விலங்குகள் சரணாலய
ஓராண்டுக்கு முன்பாக
செய்தவர் டால்ப் வாக்கர். 10
சிறுத்தைக் குட்டி கப்ரியலை
அன்புடன் கவனித்து வ
உணவூட்டுவார், விளையா
கட்டிப் பிடித்துக்கொள்வார்
கரின் அன்புக்குச் சற்றும் கு
லாமல் கப்ரியலும் அவரிடம்
காட்டியது. இருவரும் வி
வதைப் பார்ப்பவர்கள், சிறு
குட்டியா, பூனைக்குட்டியா
ஆச்சரியப்படுவார்கள்.

வன விலங்குகளிடம் மிகவும்
மாகத்தான் இருக்கவே
நம்பிக்கையும் அன்பையு
வதுமாகப் பெற்றிருந்தது க
இதுவரை ஒரே ஒருமுறைதா
யலின் நகங்கள் தவறுதலா
தலையில் கீறின. நான்கு ந
மருத்துவம் செய்தேன்.

## பதவி விலகுவது என்ற பேச்சுக்கே இடமில்லை

### ஆஸி. பிரதமர் உறுதி



கான்பரா, ஜூலை 7


பதவி விலகும் பேச்சுக்கே இடமில்லை என்று ஆஸ்திரேலியப் பிரதமர் மால்கம் டர்ன்புல் தெரிவித்தார்.

ஆஸ்திரேலிய நாடாளுமன்றத் தேர்தல் கடந்த 2 ஆம் திகதி நடைபெற்றது. இந்தத் தேர்தலில் ஆளும் சுதந்திர தேசியக் கூட்டணியின் வேட்பாளரும் பிரதமருமான மால்கம் டர்ன்புல்லுக்கும் தொழிலாளர் கட்சியின் வேட்பாளர் பில்ஷார்டனுக்கும் இடையே கடும் போட்டி நிலவுகிறது.

வாக்கு எண்ணிக்கை தொர்டர்ந்து நடைபெற்று வருகிறது. இதில் ஆளும் கூட்டணிக்குப் பின்னடைவு ஏற்பட்டுள்ளது. தேர்தல் தோல்விக்குப் பொறுப்பேற்று பிரதமர் மால்கம் டர்ன்புல் பதவி விலக வேண்டும் என்று தொழிலாளர் கட்சி வலியுறுத்தி வருகின்றது.

இது குறித்து பிரதமர் மால்கம் டர்ன்புல், கான்பரா நகரில் செய்தியாளர்களிடம் கூறியபோது, நான் பதவி விலகும் பேச்சுக்கே இடமில்லை. நாங்கள் பெரும்பான்மை பலத்தைப் பெறுவோம் என்று தெரிவித்தார். (கு)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பிக்க வைக்கும் நட்பு

7
க்காவில் வன
ரணாலயத்தில்
ன்பாக வேலை
ாக்கர். 10 மாதச்
ப்ரியலை மிகவும்
ரித்து வந்தார்.
விளையாடுவார்,
காள்வார். வாக்
ற்றும் குறைவில்
அவரிடம் அன்பு
ரும் விளையாடு
கள், சிறுத்தைக்
க்குட்டியா என்று
கள்.
ம் மிகவும் கவன
க்கவேண்டும்.
ன்பையும் முழு
ந்தது கப்ரியல்.
முறைதான் கப்ரி
தவறுதலாக என்
நான்கு நாள்கள்
பதேன். கடந்த

ஓராண்டு காலம் சரணாலயத்தில் நான் பணி புரியவில்லை. மீண்டும் சரணாலயம் சென்றேன். கப்ரியல் என்னை நினைவு வைத்திருக்குமா என்று சந்தேகப்பட்டேன்.

ஆனால் என்னை அப்படியே நினைவு வைத்திருந்தது. சற்றுப் பெரிய உருவமாக மாறியது தவிர, கப்ரியலிடம் வேறு மாற்றங்கள் இல்லை. என்னைப் பார்த்ததும் பாய்ந்து ஓடி வந்தது. என் மீது தாவி ஏறி, முகம் முழுவதும் நாக்கால் ஈரம் செய்தது. என்னை விளையாட்டாகக் கீழே தள்ளி, படுத்துக்கொண்டது. மற்றச் சிறுத்தைகளை அருகில் வர அனுமதிக்கவில்லை. என் வாழ்க்கையில் கப்ரியலைப்போல அன்பான எந்த வன விலங்கையும் நான் பார்த்ததில்லை. எங்கள் அன்பின் ஆழத்தை நிரூபிக்க இரவு முழுவதும் நானும் கப்ரியலும் ஒரே படுக்கையில் தூங்கினோம் என்கிறார் வாக்கர். (தி)

# கறுப்பினத்தவர் மீது பொலிஸார் சூடு

## லூசியானாவில் மக்கள் ஆர்ப்பாட்டம்

நியூயோர்க், ஜூலை 7

கறுப்பினத்தவர் ஒருவரை, வெள்ளையினப் பொலிஸ் அதிகாரிகள் இருவர் சுட்டுக் கொல்வது போன்ற காணொலியொன்று வெளியானதை அடுத்து, அமெரிக்காவின் லூசியானா மாகாணத்தில் ஆர்ப்பாட்டங்கள் வெடித்துள்ளன.

லூசியானா தலைநகர் பேடன் ரோகில் ஒரு கடைக்கு வெளியே துப்பாக்கியுடன் ஒருவர் பொதுமக்களை மிரட்டுகின்றார் என வெளியான தகவலைத் தொடர்ந்து, அங்கு சென்ற பொலிஸார் அவர் மீது துப்பாக்கிச் சூடு நடத்தினர்.

அதில் மார்பு மற்றும் பின்புறத்தில் காயமடைந்த 37 வயதுடைய ஐந்து பிள்ளைகளின் தந்தையான ஆல்டன் ஸ்டெர்லிங் என்பவர் உயிரிழந்தார்.

இந்தச் சம்பவத்தை அடுத்து இதற்கு எதிர்ப்பு தெரிவித்து, சுமார் 200 பேர் வீதிகளை மறித்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். ஆர்ப்பாட்டக்காரர்களைப் பொலிஸார் அப்புறப்படுத்தியபோதிலும், தாம் மீண்டும் சிட்டி ஹோல் பகுதியில் கூடிப் போராட்டம்நடத்துவோம் என அவர்கள் எச்சரித்தனர்.

ஆபிரிக்க அமெரிக்கர்கள் நபர்கள் பொலிஸ் நடவடிக்கையால் உயிரிழந்ததை அடுத்து, அமெரிக்காவில் பதற்றமான சூழல் ஏற்பட்டுள்ள நிலையில் இந்தச் சம்பவம் நடைபெற்றுள்ளது.




இந்த நிலையில், குறித்த சம்பவத்தில் ஈடுபட்டார்கள் குற்றஞ்சாட்டப்பட்ட இரண்டு பொலிஸ் அதிகாரிகளையும் நிர்வாக விடுமுறையில் செல்லுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (தி)

# நாயை மாடியிலிருந்து வீசிய 2 மாணவர்களுக்குப் பிணை

சென்னை, ஜூலை 7

சென்னை அருகே நாய் ஒன்றை மாடியிலிருந்து தூக்கி வீசிய விவகாரத்தில் தனியார் கல்லூரி மருத்துவ மாணவர்கள் இரண்டு பேர் கைது செய்யப்பட்டனர். பின்னர் பிணையில் விடுதலை செய்யப்பட்டனர்.

கவுதம் சுதர்சனன் மற்றும் ஆஷிஷ் பால் ஆகிய அந்த இரு மாணவர்களையும் குன்றத்தூர் பொலிஸார் நேற்றுக் காலை கைது செய்தனர்.



கைது செய்யப்பட்ட இருவரையும் ஸ்ரீபெரும்புதூர் நீதிவானிடம் முற்படுத்தி, பின்னர் அவர்கள் பிணையில் விடுதலை செய்யப்பட்டனர்.

இளைஞர் ஒருவர் நாய் ஒன்றை மூன்றாவது மாடியிலிருந்து தூக்கிப் போடும் காட்சிகள் சமூக வலைதளங்களில் பரவியது. இதையடுத்து, அந்த வீடியோவில் இடம்பெற்றிருக்கும் இளைஞரைக் கண்டுபிடிக்க விலங்குகள் நல ஆர்வலர்கள் முயன்றனர்.

முடிவில், நாயைக் கீழே தூக்கி வீசியவரும் அதனை வீடியோ எடுத்தவரும் தனியார் மருத்துவக் கல்லூரியில் இறுதியாண்டு கற்பவர்கள் எனத் தெரியவந்ததாக விலங்குகள் நல ஆர்வலர்கள் தெரிவித்தனர். இதையடுத்து, கவுதம் சுதர்சனன், ஆஷிஷ் பால் ஆகிய இருவர் மீது குன்றத்தூர் காவல்நிலையத்தில் இந்தியக் குற்றவியல் சட்டம் 428, 429, மிருகவதைத் தடுப்புச் சட்டம் ஆகியவற்றின் கீழ் வழக்குப்பதிவுசெய்யப்பட்டுள்ளது. (தி)

| என்ற
ில்லை
உறுதி



ச்சுக்கே
ு ஆஸ்
மால்கம்
ார்.
ளுமன்
2 ஆம்
. இந்தத்
சுதந்திர
ன்வேட்
ருமான
லுக்கும்
ட்சியின்
ார்டனுக்
போட்டி
ரிக்கை
பெற்று
ஆளும்
னடைவு
தேர்தல்
பாறுப்
ால்கம்
விலக
தொழி
யுறுத்தி
ர் மால்
ன்பரா
களிடம்
தவிவில
ில்லை.
ான்மை
வோம்
. (தி)

BAJAJ
RE
GENUINE PARTS

எப்பவும் கூலாக இருப்போம்...




அசல் பஜாஜ் உதிரிப்பாகங்களை அறிந்துகொள்வது எப்படி?

1 பக்கெட்டில் உள்ள ஓலோகிராம் ஸ்டிக்கரில் யானைக்குட்டி அடையாளம் உள்ளதா என்பதனை கண்டறியவும்.

2 ஸ்டிக்கரின் கீழ் பகுதியை சுரண்டி இலக்கத்தைக் காணவும்.

3 அதில் காணப்படும் இலக்கத்தை 0777 66 55 77 இற்கு SMS செய்யவும்.

4 நீங்கள் கொள்வனவு செய்தது அசல் பஜாஜ் தயாரிப்பென உறுதிப்படுத்திய SMS உடனடியாக வந்துசேரும்.

பஜாஜ் அசல் உதிரிப்பாகங்களை உபயோகித்து
உங்கள் பஜாஜ் முச்சக்கர வண்டி மற்றும் மோட்டார் சைக்கிளினை பாதுகாத்துக்கொள்ளுங்கள்.

ரூபா. 5/- இலிருந்து | நிபந்தனைகளுக்கு உட்பட்டது.

DPMC டேவிட் பீரிஸ் மோட்டார் கம்பனி லிமிட்டட்
PB270
75, ஹைட்பார்க் கோனர், கொழும்பு 02. 011 4 700 600 011 4 700 677 info@dpmco.com www.dpmco.com/www.dpg.lk

DPMC app google play store அல்லது apple app store ஊடாக தரவிறக்கம் செய்துகொள்ளுங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜூலை மாத ராசி பலன்கள்



## இடபம்

(ரோகிணி, மிருகசீருடம்)

எந்த நிலையிலும் அடுத்தவர் பற்றிய ரகசியங்களை வெளியே சொல்லாமல் மனதில் வைத்துக்கொள்ளும் இயல்புடைய இடபராசியினரே இந்த மாதம் தனஸ்தானத்தில் சூரியன் - புதன் - ராசிநாதன் சுக்கிரன், சுக ஸ்தானத்தில் குரு - ராகு, சப்தம ஸ்தானத்தில் வக்ர நிவர்த்திபெற்ற செவ்வாய் - சனி, தொழில் ஸ்தானத்தில் கேது எனக் கிரக நகர்வுகள் இருக்கிறது. தனஸ்தானத்தில் சஞ்சரிக்கும் ராசிநாதன் சுக்கிரனால் எந்த ஒரு காரியமும் வெற்றியடைவதுடன் இலாபகரமாகவும் இருக்கும். பணவரத்து அதிகரிக்கும். செயற்றிறன் மேலோங்கும். இழுபறியாக இருந்த ஒரு சில விடயங்கள் நல்ல முடிவுக்கு வரும். வீடு, வாகனங்கள் வாங்கும் நிலை உருவாகும்.

தொழில் ஸ்தானத்துக்கு ராசிநாதன் சுக்கிரன் திரிகோணம் பெற்றிருக்கிறார். தொழில் ஸ்தானத்தில் கேது இருக்கிறார். தொழில், வியாபாரம் முன்னேற்றம் காணப்படும். விவசாயம், இலாபம் தரும். வியாபார வளர்ச்சிக்குப் புதிய திட்டங்களைத் தீட்டுவீர்கள். உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு நிலுவையில் உள்ள பணம் கைக்குக் கிடைக்கும். பயணங்களால் இலாபம் கிடைக்கும்.

குடும்பாதிபதி புதன் ஆட்சியாக இருக்கிறார். குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும். குடும்பத்துக்குத் தேவையான பொருள்கள் வாங்குவீர்கள். நீண்ட நாள்களாக வாங்க நினைத்த ஆடை, ஆபரணங்களை வாங்க நேரிடும். குடும்பத்தில் இருப்பவர்களுடன் விருந்து நிகழ்ச்சிகளுக்குச் சென்று வருவீர்கள். வழக்குகளில் சாதகமான போக்கு காணப்படும். பெண்களுக்கு பணவரத்து அதிகரிக்கும். எந்தவொரு காரியமும் இலாபகரமாய் நடந்து முடியும். செயற்றிறன் கூடும்.

மாணவர்களுக்கு : பாடங்களை மனநிறைவுடன் படிப்பீர்கள். கூடுதல் மதிப்பெண் பெற மேற்கொள்ளும் முயற்சிகள் வெற்றியடையும்.

**பரிகாரம்:** வெள்ளிக்கிழமைகளில் நவக்கிரகத்தில் சுக்கிரனுக்கு தீபம் ஏற்றி பூசை செய்ய பணவரத்து கூடும். குடும்பத்தில் மகிழ்ச்சி உண்டாகும்.

**கார்த்திகை 2, 3, 4 பாதங்கள்**
குடும்பத்தில் மகிழ்ச்சிகூடும். கணவன், மனைவிக்கிடையில் நெருக்கம் உண்டாகும். பிள்ளைகளுக்காகப் பாடுபடுவீர்கள். அவர்கள் உங்களை அனுசரித்துச் செல்வார்கள். எதிர்பாராத செலவுகள் உண்டாகும். உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. வாகனங்களை இயக்குவதில் நிதானம் தேவை.

**ரோகிணி:**
வீண் வாக்குவாதங்களைத் தவிர்ப்பது நல்லது. எதிலும் நிதானம் தேவை. பொருள் சேர்க்கை உண்டாகும். கனவுத் தொல்லைகள் உண்டாகும். பணவரத்து திருப்தியைத் தரும். நண்பர்கள் மூலம் உதவி கிடைக்கும். ஆடம்பரச்செலவுகள் ஏற்படும். கோபத்தை கட்டுப்படுத் துவது நன்மை தரும்.

**மிருகசீருடம் 1, 2, பாதங்கள்:**
தொழில் வியாபாரம் திருப்திகரமாக நடக்கும். எதிர்பார்த்த இலாபம் வரும். வியாபாரச் செலவுகள் அதிகரிக்கும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் கடுமையாக உழைக்க வேண்டி இருக்கும். அதனால் களைப்பு ஏற்படலாம்.

(தொடரும்)

# மாணிக்கவாசகர் அருளிய திருவாசகம் ஆனி மகநாள் அவரது குரு பூசைத்தினம்

மதுரகவி காரை.
எம்.பி. அருளானந்தன்

முத்தமிழ் வளர்த்த பாண்டிய நாட்டில் திருவாதவூர் என்னும் ஊர். அந்த ஊரிலே ஆதி சைவ மரபிலே தோன்றியவர், திருவாதவூரர் என அழைக்கப்படும் மாணிக்கவாசகர். சம்புபாதாசிரியார் – சிவஞானவதி அம்மையார் தம்பதியினருக்கு மகனாகத் தோன்றியவர்தான் மாணிக்கவாசகர் சுவாமிகள். பதினாறு வயதுக்குள் எல்லாக் கலைகளையும் கற்றுத் தெளிவு பெற்று விளங்கினார். இவரது புலமைச் சிறப்பை அறிந்த பாண்டியன் அவரைத் தன் அமைச்சராக்கிக் கொண்டான். அவருக்கு தென்னவன் பிரமராயன் என்ற சிறப்புப் பெயரும் கொடுத்தான்.

மாணிக்கவாசகர் அமைச்சராகப் பணிபுரிந்து வரும் நாளில் பதி, பசு, பாசம் என்ற முப் பொருள்களைப் பற்றி சைவசமய நூல்களைக் கொண்டு ஆய்ந்து தெளிவு பெற்றார். உலகப் பற்று அற்ற நிலையில் அமைச்சுத் தொழிலைப் புரிந்து வந்தார். இறைவனின் திருவருள் அவர் உள்ளத்தினுள் பதிந்தது. எனவே அவர் ஞானாசிரியரைத் தேடிக்கொண்டிருந்தார்.

ஒரு நாள் தூதுவர் சிலர் பாண்டியனிடம் வந்து, கீழைக் கடற்கரையில் விற்பனைக்காக வணிகர்கள் குதிரைகள் கொண்டு வந்திருப்பதாகக் கூறினர். பாண்டியன் குதிரைகளின் ரகம் அறிந்த மாணிக்கவாசகரை அழைத்து, பெரும் பொருள் கொடுத்துக் குதிரைகளை வாங்கி வருமாறு அனுப்பிவைத்தான். மாணிக்கவாசகர் சுவாமிகள் பணியாள்கள் புடைசூழத் திருப்பெருந்துறை வழியாகக் கீழைக் கடற்கரைக்குப் புறப்பட்டுச் சென்றார்.

திருப்பெருந்துறையில் ஒரு பொழிலின் மத்தியில் குருந்த மரநிழலில் மாணிக்கவாசகரை ஆட்கொள்ளும் பொருட்டு இறைவன் கைலாய மலையைவிட்டு அந்த குருந்த மரத்தடியில் ஞானகுருவாக வந்து வீற்றிருந்தார். சிவகணங்கள் அவரின் சீடர்களாக வந்திருந்தனர்.

இத்தகைய பொழிலின் அருகில் மாணிக்கவாசகர் வந்த பொழுது சிவாகம ஒலியைக் கேட்டார். உடனே மாணிக்கவாசகர் சிவிகையை விட்டு இறங்கினார். விரைந்து அவ்விடம் சென்றார். ஞானாசிரியராக வீற்றிருப்பவரைப் பார்த்து கையில் உள்ள நூல் யாது? என்று கேட்டார். ஞானாசிரியர் சிவஞான போதம் என்றார்.

மாணிக்கவாசகர் அன்புடன் சிவம் எது?
ஞானம் எது? போதம் எது? என்று கேட்டார். ஞானாசிரியராக வந்த இறைவன் மாணிக்க வாசகரைப் பார்த்து சிவம் என்பது ஒப்புமை இல்லாத தனிப் பரம்பொருள். ஞானம் என்பது அப்பரம்பொருளைத் தேர்ந்து அறியும் அறிவு. போதம் என்பது தேர்ந்து அறிந்த அப்பரம்பொருளைத் தெளிதல் என்று விளக்கிக் கூறினார்.

மாணிக்கவாசகர் சத்தினி பாதம் அடைந்தவராதலின் அப்பொருள் விளக்கம் கேட்டவுடனே, ஞானாசிரியர் மலரடியில் விழுந்து வணங்கினார். பிறகு எழுந்து தலைமீது கைகூப்பி நின்று அடியேனை ஆட்கொள்ள வேண்டும் என்று வேண்டினார்.

உடனே ஞானாசியராகிய இறைவர் நீ முன்பு செய்த தவத்தால் உன்னை ஆட்கொள்ளும் பொருட்டே இங்கு வந்துள்ளோம். இனிக் கவலை வேண்டாம் எனக் கூறினார். குருவாகி வந்த இறைவரும் தம் திருவடியை மாணிக்கவாசகரின் முடி மீது வைத்தார். மாணிக்கவாசகர் பேரின்ப நிலையடைந்தார். சிவானந்தப் பெருக்கால் அழுதார். போற்றி போற்றி எனப் புகழ்ந்து பாடினார். விடிந்தது. பூங்கோயில் முதலியன மறைந்தன. குருவாக வந்த இறைவன் முன்பு போல குருந்த மர நிழலை அடைந்தார்.

குருந்தமர நிழலில் அமர்ந்த குரு முப்பொருள் உண்மைகளையும், அருவம், உருவம், அருவுருவம் ஆகியவற்றையும் சரியை, கிரியை, யோகம், ஞானம் ஆகிய நாற்பாதங்கள் பற்றியும் மாணிக்கவாசகருக்குக் கூறி குருவடியை உள்ளத்தில் இருத்துக எனக்கூறினார்.

**சிவபுராணம் தோன்றுதல்**
மாணிக்கவாசகர் சுவாமிகள் அமைச்சர் கோலத்தைத் துறந்தார். அடியார் கோலத்துடன் விரைந்து திருப்பெருந்துறை சென்றார். அங்கு உள்ள இறைவனின் பாதங்களை வணங்கியவாறு சிவபுராணம் முதலான திருவாசகப் பாடல்களைப் பாடினார்.

பல தலங்களை வணங்கியபடி திருவண்ணாமலை வந்தார். அங்கு சில நாள்கள் தங்கியிருந்தார். அப்பொழுது மார்கழி மாதம் வைகறையில் துயில் எழுந்து கன்னிப் பெண்கள் நீராடச் செல்வதைக் கண்டார். திருவெம்பாவைப் பாடியருளினார்.

ஒருநாள் பொன்னம்பலநாதர் சைவ வேதியர் கோலத்துடன் புத்தகம் ஏந்திய கையினராய் மாணிக்கவாசகரிடம் வந்தார். வந்த வேதியரை எங்கிருந்து வருகிறீர்கள் என்று கேட்டார். வேதியார் இறைவன் ஆணைப்படி தங்களைத் காணவந்தேன். தாங்கள் இறைவன் மீது பாடிய பாடல்களை எழுதிக்கொள்ளவே வந்தேன் எனக் கூறினார்.



உடனே மாணிக்கவாசகர் மகிழ்ச்சியுடன் தாம் பாடிய திருவாசகப் பாடல்களைக் கூறினார். வேதியராக வந்த இறைவன் அனைத்தையும் ஏட்டில் எழுதிக்கொண்டார். இத்தகு திருவாசகப் பாடல்களை மாணிக்கவாசகர் பாட, இறைவன் தம் கையால் எழுதியமை போற்றத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாமஸ்ரீ தேசமான்ய
கலைஞர் பா.பாலச்சந்திரன்

# வாழவை அன்றேல் வாழ்கிலேன் கண்டாய்



துப்பாக்கிப் போர் முடிந்து இப்போ இராஜ தந்திரப் போர் நடக்கிறது. சிரங்கு மாற அல்சர் வந்தமாதிரி. சொந்த ஊருக்குப் போகமுடியாது, அதை தட்டிகேட்க கூடாது! என்ன அடக்கு முறை! உண்டு கழித்து உறங்கினால் மட்டும் போதுமா? மனித உரிமை வேண்டாமா? இப்பிறப்பில் இதுவுனக் கில்லை என்று மட்டும் தயவு செய்து அருள வேண்டாம். எமது இனத்தை வாழவிடு.

அம்மையே அப்பா, என்தாயும் எனக்கருளும் தந்தையும் நீ, அன்புள்ள மாமன் மாமியும் நீ, என் சுற்றமும் நீ என்று பலரும் உறவாக உன்னைக் கொண்டாடுவதால், நானும் உன்னிடம் தான் என் உள்ளக் குமுறலைக் கூற முடியும். ஏகனான பிரபஞ்ச நாயகா! உன் திவ்விய சமுகத்துக்கு எனது பணிவான விண்ணப்பம்.

ஐயா! தங்களின் திருப்பெயர்களில் ஒன்றான சிவபூமி என்னும் பெயரைக் கொண்ட எமது நாட்டில் அதுவும் நீர் சிவனாக தோன்றி ரசித்த மொழியைத் தாய் மொழியாகப் பெற்ற பேறுடைய நாம், வீதியில் திரியும் நாய்கள் அனுபவிக்கும் சுதந்திரத்தைவிடக் குறைந்த சுதந்திரத்தை உடையவர்களாக வாழ்வது எந்த விதத்தில் பொருத்தம். இரணைகளில் ஒன்றை ஒன்று வருத்துவதற்குத் தந்தை விடலாமா?

"உன்கையில் பிள்ளை உனக்கே அடைக்கலம்" என்பதை மறக்கலாமா? ஆதாமின் பிள்ளைகள் மூத்தவன் காயீனும் இளையவன் ஆபேலும் மாதிரித்தான் எமது கதையுமோ ஐயா! தம்பியைக் கொன்ற காயீனுக்கு சாபம் தான் கொடுத்ததாக உள்ளது. தம்பி ஆபேல் பரலோகம் போனது போனது தான். பாவம் மறுபிறப்புக்கூட இல்லை. ஆனால் சிவனடியாராகிய எமக்கு மறுபிறப்பு உண்டு. இருப்பினும் இப்பிறப்பு வீண்பிறப்பல்லவோ? இதைவிட என்னை ஆஸ்ரேலியாவில் பசுமாடாய் படைத்திருந்தால் எவ்வளவோ மேல். அங்கேயும் ஐந்தாறு ஈற்றோடு கொன்று உண்பார்கள்தான். அது பரவாயில்லை. சாகிறவரை இராச வாழ்க்கை. பெருமானே! என்னை மன்னிக்க வேண்டும். நன்றே செய்வாய் பிழை செய்வாய் என்றுகூறிச் செல்ல நான் ஞானி அல்ல. தாங்கள் மோட்சம் தந்தாலும் நான் மூன்று பிறப்புகள் அவகாசம் கேட்பேன். அவ்வளவுக்கு நான் ஆசாபாசம் உள்ளவன். நான் வாழப்பிறந்தவன் வாழ வேண்டும். இந்தத் தேசத்தில் வாழ்ந்தது ஒரு வாழ்க்கையா? இல்லை இல்லை அவலவாழ்வு தான். நேசித்த பூமியை உயிரைப்பாதுகாப்பதற்காக விட்டு ஓடுதல், சதா அச்சத்தில் வாழுதல், பயமுறுத்தல், இடத்தை, பொருளைப் பறித்தல், கதவடைத்தல், ஹர்த்தால், ஆர்ப்பாட்டம், கொலை, விமானத் தாக்குதல், ஷெல்லடி, காணாமற்போதல் போன்ற துக்கங்களுக் கிடையில் தான் வாழ்க்கை நடந்தது.

பிதாவே! நீர் எம்மைச் சோதித்தீரோ அல்லது பழிதீர்த்தீரோ நாமறியோம். எம்மைக் கண்டு கொண்டதாகத் தெரியவில்லை.

நாம் பல பாவங்களைச் செய்திருக்கலாம் அது தவறுதான். அதற்காகக் கொடிய சாத்தானிடமா எம்மைப் பாரம் கொடுப்பது? நீர் உமது அடியான் யோபுவை சாத்தானிடம் பாரம் கொடுத்த கதை எமது பதிவில் உள்ளது. பொருள்கள் பத்து மடங்கு விலையில் விற்கப்பட்டன. மக்கள் தொழில்களை இழந்தனர், வறுமையில் வாடினர், நோய்க்கு மருந்தும் சிகிச்சையுமின்றி இறந்தனர். கர்ப்பிணித் தாய்மார் பராமரிப்பின்றித் தவித்தனர். குடும்பங்கள் பிரிந்து சோகத்தில் மிதந்தன. எங்கு பார்த்தாலும் மயான அமைதி. தேசமே களையிழந்து ரோகிபோல் காணப்பட்டது. குட்டிச்சுவரான நகர்களும், ஊர்களும் தான் மிச்சமாய் இருந்தன. மக்கள் காட்டுக்குப் போக நாட்டுக்கு மிருகங்கள் வந்தன. இதையொரு கவிஞன் பதிவு செய்துள்ளதைப் பாருங்கள்,

"நாட்டிலுள்ளோர் நாலிட மேக
காட்டிலுள்ள கரிய பன்றியும்
வேட்டை நரியும் வீட்டில் புகுந்த
கேட்டை யாரிடம் கூறி ஆறுவேன்"

செல்லப் பிராணிகள் இறந்தன போக மிகுதியானவை காட்டு மிருகங்களைப்போல் மாறின. காட்டு நாய்களைப்போல் கூட்டமாகச் சேர்ந்து ஆனந்தமாக, சுதந்திரமாக பசுக்கன்றுகளையும், ஆடுகளையும், அவற்றின் குட்டிகளையும் வேட்டையாடின. நாம் சாவகச் சேரியால் திரும்பவும் வந்தபோது விலங்குகளின் எலும்புகளையும் காணக்கூடியதாக இருந்தது. சிவபூமி என்பதற்குச் சரியாக இருந்தது. ஏனென்றால் நீர் சிவனாகச் சுடுகாட்டில் ஆடுவதால் உமக்கு சுடலையாடியென ஒரு நாமம் உண்டல்லவோ?

பிதாவே! விண்ணப்பம் நீண்டதுதான். தயவு செய்து சலிக்காது வாசிக்க வேண்டும். நாம் இடம் பெயர்ந்தால் பாவம் புரிந்தவர்கள் எனப் பலரும் பலவாறாய் எமக்குத் தீர்ப்பளித்தனர். சுவாமி! பாவிகள் என்ற பட்டத்தையும் சுமந்து கொண்டு பொருள்களையும் சுமந்து கொண்டு பிள்ளை குட்டிகளுடன் நாளுக்கு ஓர் இடமாகப் பரதேசிகளைப்போல் திரிந்தோமே! ஏழு எழுபது தரம் மன்னிக்கப்படாமல், ஆரோ செய்த அல்லது எப்பவோ செய்த பாவத்துக்கு வதைக்கப்பட்டோம். ஏறாதபடியெல்லாம் ஏறினோம், மிதியாத முற்றமெல்லாம் மிதித்தோம், வேண்டாவிருந்தினராய் இரந்து, இருந்து வருந்தினோம். கேட்காத வார்த்தைகளைக் கேட்டு மனம் புழுங்கினோம். கொட்டில் பல கட்டக் காசைக் கொட்டினோம். உணவைத் தேடியலைந்தோம். மலசல கூடங்கள் இல்லை. பேசவும் வேண்டுமோ? துர்நாற்றத்தைப் பற்றி . கடவுளே போதும் ஏழைபங்காளா! இரங்குவீர்கள்

புனித குர் ஆனில் என்னைத் தவிர உங்களுக்கு வெளிச்சத்தைத் தருபவர் யார் என்கிறீர்கள் எனவே அருளாளனே! எமக்கு ஒரு வெளிச்சத்தை தாரும்.

எல்லாம் வல்லவா அனுபவித்த அனுபவிக்கிற துன்பங்கள் பல நான் அவற்றில் சிலவற்றை மட்டுமே குறிப்பிடுகின்றேன். போக்குவரத்துக்கு நாம் பட்டபாடு அளவேயில்லை. ஆடு மாடுகளின் பட்டிமாதிரி குடா நாட்டுக்குள் அடைபட்டிருந்தோம். இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திப் பலர் பலபாட்டுக்குத் தமது பைகளை நிரப்பிக் கொண்டனர். யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்புக்குச் செல்லும் செலவில் சிங்கப்பூருக்குச் செல்ல முடியுமென்று கொழும்புவாசிகள் கூறினார்கள். வவுனியாவுக்குச் செல்ல திருகோணமலைக்குப் பல நூறுமைல் கடல் பிரயாணம் செய்து போன வீர மக்கள் நாம் தான். மக்கள் தாய் தந்தை உறவினர்களின் நன்மை தீமைகளுக்குக் கூட நேரத்திற்கு செல்லமுடியாது கஷ்டப்பட்டனர். இதையும் அக்கவிஞன் பதிவுசெய்துள்ள பாங்கைப் பாருங்கள் இறைவா!

முதியோரெ லாமுதலி யற்றுயிர்
துறக்கபிள்ளைகள் வரவே வீதியை
கெதியாய் மூடிட மூன்றாம் நாள்பிற்
பகல்முடியும் வேளையில் வந்தனர்.

உங்களுக்கு எமது கப்பல் பிரயாணத்தைப் பற்றி சொல்லாவிட்டால் அதுபெரும் தவறு. ஆடு, மாடுகளுக்குக்கூட பாவம் பார்ப்பார்கள், எம்பாடு ஒரே நெரிசல் தான். கப்பல்களில் உள்ளே இருந்து போவது தான் வழமை. ஆனால் அந்தக் கப்பல்களில் மேலே ஏற்றியும் கொண்டு சென்றனர். வெயில், மழை, மேலே ..... சிறுநீரும் எல்லாம் எம்மீது தான். இந்தக் கப்பலுக்குக் கூட சீட்டுபெறுவது ஒரு தவம் தான். தவம் மட்டுமல்ல அதிர்ஷ்டமும் வேண்டும். பிரயாணம் குறித்த தினத்தில் நடப்பது மிக அபூர்வம். அதுவும் ஒரு யாத்திரைதான். தமிழன் நாட்டின் ஒருபகுதிக்குச் செல்ல ஆமியின் அனுமதி பெறவேண்டும். தங்கும் இடமும் கூறவேண்டும். அங்கும் வந்து பார்ப்பார்கள். எப்படி சுதந்திர வாழ்க்கை? போற இடத்திலும் பாஸ் எடுக்க வேண்டும். இலத்திரனியல் சமிக்ஞை மாட்டாத ஒரு குறைதான். பிரயாணத் தடையால் வெளிநாட்டுப் புலமைப்பரிசைக் கூட இழந்தவர்களும் இருக்கிறார்கள்.

எங்கள் தகப்பனே! பொது வாழ்வில் நாம் பட்ட, படுகின்ற துன்பங்களையும் கேட்டருள வேண்டும். தேடுதல், சுற்றிவளைத்தல், சோதனையிடல், குடும்பப்பதிவு என எம்மைப் படுத்தியபாட்டிற்கு அளவில்லை. தொடரணி யென்று சொல்லி போக்குவரத்தை கால், அரை மணிநேரம் நிறுத்துவார்கள். இதனால் நோயாளிகள்கூட வைத்தியசாலைக்குப் போகத் தாமதமானதால் இறந்துள்ளனர். போர் 2009இல் முடிந்தாலும் எங்கள் இடர் இன்னல்கள் ஓய்ந்தபாடில்லை! போக்குவரத்துச் சீர்கேடு, சமூகச்சீர்கேடு, போதைவஸ்து, பாலியல் வன்முறை, குடும்ப வன்முறை, கொலை, கொள்ளை, சண்டித்தனம், வாள் ஏந்திய வன்முறை என்பவை எம்மைத் தினம் தினம் செத்துப்பிழைக்க வைக்கின்றன. ஒவ்வொருவரும் ஒவ்வொரு விதத்தில் சமூகத்தை வதைக்கக் கங்கணம் கட்டி வாழ்கின்றனர். தகப்பனாரே! இவர்களை மெதுவாக வேலை செய்யும் உமது இயந்திரத்துக்கு வேகம் கூடிய மோட்டரை மாற்றி, எம்மை நிம்மதியாய் வாழ வையுமையா! உமக்குக் கோடி வந்தனங்கள்.

தீன இரட்சகா !எம்மை நரகத்தில் வதைப்பது போதாதா? இது பூமி, வாழப்பிறந்த இடம், வாழவிடு. படையினர் யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றுவதற்கு பின்பும் முன்பும் உள்ள வித்தியாசம். தாச்சிக்குள் இருப்பதற்கும் நெருப்பிற்குள் குதிப்பதற்கும் உள்ள வித்தியாசம் தான். துப்பாக்கிப் போர் முடிந்து இப்போ இராஜதந்திரப் போர் நடக்கிறது. சிரங்கு மாற அல்சர் வந்தமாதிரி. சொந்த ஊருக்கு போகமுடியாது, அதைத் தட்டிக்கேட்கக் கூடாது! என்ன அடக்குமுறை! உண்டு கழித்து உறங்கினால் மட்டும் போதுமா? மனித உரிமை வேண்டாமா? இப்பிறப்பில் இதுவுனக்கில்லை என்று மட்டும் தயவு செய்து அருள வேண்டாம். எமது இனத்தை வாழவிடு. சுதந்திரக் காற்றை சுவாசிக்கவிடு. நானும் உனது பிள்ளை என்ற வகையில்,

ஒன்று உரைப்பேன் கேள்!
வாழவை அன்றேல் வாழ்கிலேன் கண்டாய்!
இரந்தும் உயிர் வாழ்தல் வேண்டின் பரந்து
கெடுகஉலகு இயற்றியான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்பமும் துன்பமும் அவரவர் எண்ணம் போலவே!

ஒரு குடியானவனுக்கு இரண்டு பெண்கள் இருந்தார்கள்.

அவர்கள் இருவரையும் குடியானவன் வெவ்வேறு தொழில் பார்க்கும் இருவருக்கும் மண முடித்துக் கொடுத்தான். சில மாதங்கள் சென்ற பிறகு தனது புதல்வியர் எவ்வாறு வாழ்க்கை நடத்துகிறார்கள் என்பதைக் காண்பதற்குக் குடியானவன் புறப்பட்டான்.

மூத்த மருமகன் ஒரு விவசாயி. தன் சொந்த நிலத்தில் உழைத்துப் பிழைப்பு நடத்தி வந்தான்.


மூத்த மருமகன் வீட்டுக்குக் குடியானவன் முதலில் சென்றான். மூத்த மகள் தந்தையை மிக்க மகிழ்ச்சியுடன் வரவேற்றாள்.

தந்தைக்கு நல்லவிதமாக விருந்து வைத்தாள்.

தந்தை மகளிடம் அவர்களுடைய குடும்ப நலம் பற்றி விசாரித்தார்.

"அம்மா குழந்தாய்! உங்கள் வாழ்க்கை மகிழ்ச்சியுடன் இருக்கிறதா? உன் கணவருடைய பணிகள் நன்றாக நடைபெறுகின்றனவா! ஒன்றும் கஷ்டங்கள் இல்லையே?" என்று குடியானவன் வினவினான்.

"அப்பா! எங்களுக்கு ஒரு குறைவும் இல்லை. வயலில் பயிர் வைத்திருக்கின்றோம். பயிர்கள் நன்றாக முளைத்துச் செழித்து வளர்ந்துள்ளன. ஒரு நல்ல மழை பெய்தால் விளைச்சல் பிரமாதமாக இருக்கும். விரைவில் மழை பெய்யவேண்டும் எனக் கடவுளைப் பிரார்த்தனை செய்து கொண்டிருக்கிறோம்" என்றாள்



மகள். சில நாள்கள் மூத்த மகள் வீட்டில் தங்கி விட்டுக் குடியானவன் இளைய மகள் வீட்டுக்குப் புறப்பட்டான். தந்தையைக் கண்ட இளைய மகள் அடங்காத ஆனந்தம் கொண்டு தந்தையை முக மலர்ச்சியுடன் வரவேற்று உபசரித்தாள். சிறந்த முறையில் விருந்து வைத்துத் தந்தையை மகிழ் வித்தாள்.

தந்தை ஒரு நாள் இளைய மகளின் குடும்ப நிலவரம் பற்றி விசாரித்தார்.

இளைய மகளின் கணவன் பெரிய அளவில் செங்கல் சூளை ஒன்றை நடத்தி வந்தான்.

"அப்பா! பெரும் அளவுக்குச் செங்கற்களைத் தயார் செய்து காய வைத்திருக்கின்றோம். இரண்டொரு நாள்களில் சூளை போட்டாகவேண்டும். சூளை போட்டு எடுப்பதற்குள் மழை வராமல் இருக்கவேண்டுமே என்று கடவுளை வேண்டிக் கொண்டிருக்கிறோம். மழை வந்துவிட்டால் பெரிய நஷ்டத்தை அடைய வேண்டியிருக்கும்" என்று இளைய மகள் பதில் சொன்னாள்.

உலகத்தில் மக்களுக்கு ஒரே மாதிரியான எண்ணமும், விருப்பமும் இருக்காது. ஒருவர் நன்மை எனக் கருதும் ஒரு விடயம் மற்றவருக்குத் தீமையாக இருக்கும்.

ஒருவர் கசப்பு என்று முகம் சுளிக்கும் ஒன்று மற்றவருக்கு உவப்பாக இருக்கும்.

ஆகவே உலகத்தில் ஒவ்வொருவரும் எந்த விடயத்தையும் சுயநலத்தோடு நோக்கக்கூடாது. செயற்படக்கூடாது. எமது எண்ணமும் செயலும் பிறருக்குத் தீங்கு விளைவிக்காமல் இருக்குமா என்று கவனித்து அதற்கு ஏற்பத் தனது தேவைகளையும் விருப்பங்களையும் அமைத்துக் கொள்ளவேண்டும்.

## வரலாற்றில் இன்றைய தினம்

1543 - லக்ஸம்பேர்க்கை பிரான்ஸ் படைகள் ஆக்கிரமித்தன.

1834 - அடிமைத்தனத்தை இல்லாமற் செய்பவர்களுக்கு எதிரான நான்கு இரவுகள் வன்செயல் நியூயோர்க் நகரில் தொடங்கியது.

1865 - அமெரிக்க ஜனாதிபதி ஆபிரகாம் லிங்கன் படுகொலையின் சூத்திரதாரிகள் நான்கு பேர் தூக்கிலிடப்பட்டனர்.

1915 - சர்வதேச ரயில்வே ட்ராம் வண்டி அளவுக்கு அதிகமான 157 பயணிகளுடன் பயணித்துக் கொண்டு இருந்த வேளை ஒன்டோரியா கியூன்ஸ்டன் அருகே விபத்துக்குள்ளாகி 15பேர் உயிரிழந்தனர்.

1915 - கொழும்பில் இராணுவ அதிகாரி கென்றி பெட்ரிஸ் துப்பாக்கி அணியால் சுடப்பட்டு சாவுத் தண்டனைக்கு உள்ளாகினார்.

1916 - நியூசிலாந்து தொழிலாளர் கட்சி வெலிங்டனில் உருவாக்கப்பட்டது.

1928 - மிஸோரி சிலிகொத் பேக்கிங் கம்பனியினரால் முதன் முதலாகத் துண்டுகளாக்கப்பட்ட பாண் விற்பனைக்கு இடப்பட்டது.

1930 - தற்போது ஹீவர் அணை என அறியப்பட்ட, பவுல்டர் அணையின் அமைப்பு வேலைகள் கைத்தொழில் அதிபர் ஹென்றி ஜே கெய்சரால் தொடங்கப்பட்டது.

1941 - இரண்டாம் மகா யுத்தம் முன்னர் பிரித்தானியரின் ஆக்கிரமிப்பிலிருந்த ஐஸ்லாந்தில் அமெரிக்கப் படைகள் தரையிறங்கின.

1941 - இரண்டாம் உலக மகாயுத்தம்: பிரான்ஸ் மற்றும் பிரித்தானியப் படைகள் பெய்ரூட்டில் நிலை கொண்டன.

1978 - ஐக்கிய ராச்சியத்திடமிருந்து சொலமன் தீவுகள் சுதந்திரமடைந்தது.

1985 - மிக இளவயதில் (17 வயது) விம்பிள்டன் வெற்றியாளர் ஆனார் பொறிஸ் பெக்கர்

1991 - சோசலிஸ்ட் பெடரல் யூகோஸ்லேவியா குடியரசுடனான ஸ்லோவேனியாவின் 10நாள் சுதந்திரப் போராட்டம் பிரிலோனி ஒப்பந்தத்தையடுத்து முடிவுக்கு வந்தது.

1997 - குர்திஸ்தான் ஜனநாயகக் கட்சிக்கு ஈராக் போரில் துணை நின்ற துருக்கிய ஆயுதப் படைகள் வட ஈராக்கில் இருந்து விலகிக் கொண்டன.

2005 - லண்டன் போக்குவரத்து முறைமையில் இடம் பெற்ற நான்கு தொடர் குண்டு வெடிப்புக்களில் நான்கு தற்கொலைக் குண்டுதாரிகள் உட்பட 56 பேர் உயிரிழந்ததுடன் 700 பேர் காயமடைந்தனர்.

2005 - லண்டனில் தொடர் குண்டு வெடிப்புக்கள்; 40 பேர் சாவு. 700 பேருக்குக் காயம்.

## இரும்புக் குதிரை


இரண்டு சக்கரம் சுற்றுமே!
ஏறிக் கொண்டால் பறக்குமே
குரங்குப் பெடலும் போடலாம்!
குதித்து நாமும் போகலாம்!

பின்னால் நண்பர் அமரலாம்!
பேசிக் கொண்டே ஓட்டலாம்!
முன்னால் பார்த்து ஓட்டணும்!
முட்டிக் கொண்டால் நோகணும்

ஏழை மக்கள் சீதனம்!
எளிதாய்ப் போகும் வாகனம்!
தாழை போன்ற சாலையில்
தடைகள் இன்றிப் போகுமே!



இன்னும் என்ன சொல்லவோ!
இரும்புக் குதிரை அல்லவோ!
மின்னல் போலப் போகுமே!
மிதிக்கும் வண்டி ஆகுமே.



## வர்ணம் தீட்டுவோம் வாங்க...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிலையற்ற இந்த உலகில் நிலையில்லாத வாழ்வுதான் மனிதனுக்கு!

வீடுவரை உறவு வீதிவரை மனைவி காடுவரை பிள்ளை கடைசி வரை யாரோ? என்ற கவியரசரின் பாடல் வரிகள் எமது நிலையற்ற வாழ்வை நன்கு படம்பிடித்துக் காட்டுகின்றன.

மனிதனின் ஆயுள்காலத்தை 100 ஆண்டுகள் என வகுத்திருக்கிறார்கள். ஆனால் ஒரு சிறிய சதவீதத்தினர் மட்டுமே இதை எட்டிப் பிடிக்கின்றனர். பெரும்பாலானவர்கள் நோய், விபத்து, தவறான முடிவு, பிறரது சதிவேலை போன்றவற்றால் பாதியிலேயே தமது வாழ்க்கைப் பயணத்தை முடித்துக்கொள்கின்றனர்.

இந்த உலகில் பிறந்த எவரும் சாவை விரும்புவதில்லை. சிலர் தவறான முடிவுகளை எடுக்கும்போது மட்டுமே இதை எண்ணிப் பார்க்கின்றனர். ஆனால் இதுகூட அவசர கோலத்தில் தோன்றுகின்ற ஒன்றுதான்.

நாம் இந்த உலகை எட்டிப் பார்க்கும்போது அன்னையின் முகத்தை முதலில் காண்கின்றோம். அன்னைதான் தந்தையை எமக்கு அறிமுகம் செய்து வைக்கின்றார். இதன் பின்னர்தான் ஏனைய உறவுகளை நாம் அடையாளம் கண்டுகொள்கின்றோம். வளர்ந்து பெரியவர்கள் ஆனதும் மனைவி என்ற புதிய உறவு ஆணுடன் இணைந்துகொள்கின்றது.

தாய்க்குப் பின் தாரம் என்று கூறுவதற்கு ஒப்ப திருமணத்தின் பின்னர் ஓர் ஆணுக்கு எல்லாமே மனைவிதான் என்ற அளவுக்கு நிலமை மாறிவிடுகின்றது. சில ஆண்கள் மனைவி சொல்லே மந்திரமெனக் கட்டுண்டு கிடக்கின்றனர். பெற்று, வளர்த்து, ஆளாக்கிய பெற்றோர் எட்டி நிற்கின்றனர். மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள் எனப் புதிய, புதிய உறவுகள் சூழ்ந்து கொள்கின்றன. இந்த உறவுகளை இலகுவில் ஒதுக்கிவைக்க முடிவதில்லை.

காலச்சக்கரம் வேகமாகச் சுழன்று செல்லும்போது, அதன் தாக்கம் மனிதர்களிடத்திலும் பிரதிபலிக்கின்றது. உடல் தளர்ந்து, தலை நரைத்து, கண்களில் குழி விழுந்து, உணவை மென்றிட உதவிய பற்களை இழந்து ஏதேதோ மாற்றங்கள் ஏற்பட்டு விடுகின்றன. மனிதர்கள் தமது இறுதிப் பயணத்தை விரும்பியோ, விருப்பமின்றியோ நினைவுபடுத்திக் கொள்கின்றனர். இடையில் நோய்கள் பீடித்தால் அவற்றின் தாக்கங்கள் வேறு உருவில் ஏற்பட்டு விடுகின்றன.

உடலில் தெம்பும், உழைத்துச் சம்பாதிக்கின்ற வல்லமையும் இருக்கும் வரைதான் மனைவி தனது கணவனை மனப்பூர்வமாக மதித்து நடப்பாள். என்னதான் அன்பு, பாசம் இருந்தாலும் பணமில்லாதவன் பிணமாகவே மதிக்கப்படுகின்றான். மனைவி மட்டுமல்ல பிள்ளைகளும்கூட எமது தந்தை எமக்கு எதைச் சேமித்து வைத்திருக்கிறார் எனக் கணக்குப் பார்க்க ஆரம்பித்து விடுகின்றனர்.

தற்போதைய காலகட்டத்தில் உறவுகள் யாவுமே அர்த்தமற்றவையாக மாறியுள்ளன. தகப்பனார் தேடிவைத்ததைப் பங்கிட்டுப் பிரிப்பதில் சகோதரர்களுக்கிடையில் பெரும் போராட்டமே இடம்பெறுகின்றது. வசைச் சொற்கள் உறவுகளை மறந்து பரிமாறப்படுவதையும் காணமுடிகின்றது. இங்கு பணம் முதன்மைபெற்று விளங்க உறவுகள் பின் தள்ளி வைக்கப்படுகின்றன.

நாம் இந்த உலகுக்கு வரும்போது எதையும் கொண்டு வருவதில்லை. உடலில் ஆடைகூட இருப்பதில்லை. அதைப் போன்றுதான் உலகைவிட்டுச் செல்லும்போதும் எதையும் கொண்டு செல்வதில்லை. இதனால்தான் 'காதற்ற ஊசியும் வாராது காண்கடைவழிக்கே' எனப் பட்டினத்தார் பாடியுள்ளார். ஆனால் மனிதர்கள் இதை உணருவதாகத் தெரியவில்லை. ஆசையின் மறு உருவமாகவே அவர்கள் காணப்படுகின்றனர். எதிலும் ஆசை எங்கும் ஆசை என்பதுதான் அவர்களது நிலையாகிவிட்டது. ஆசைகளைக் கட்டுப்படுத்திவிட்டால் துன்பங்களும் கட்டுப்படுத்தப்பட்டுவிடும். எம்மால் இயன்றவரை மற்றவர்களுக்குத் தொல்லை கொடுப்பதை நாம் தவிர்த்துக்கொள்ளவேண்டும். இயலாதவர்களுக்கு எம்மால் இயன்றளவு உதவிகளைப் புரிவதற்கு முன்வரவேண்டும். ஏழைகளைப் பார்த்து இகழ்வதும் அவர்களுக்கு உதவுபவர்களைத் தடுப்பதும் மோசமான பாவகாரியங்களாகும்.

மறுமை என்ற ஒன்று இருக்கின்றதோ? இல்லையோ? இம்மையில் நாம் நல்லவர்களாகவே இருந்து விட்டுப் போவோம். இந்தப் பூமியில் வாழ்கின்ற மிகக் குறைந்த காலத்தைப் [illegible] தாகவே [illegible].






# மனிதனைப் பூரணமாக்கும் வாசிப்புப் பழக்கம்

யூலனூர் சுமித்ரா

அதிவேகமாகப் பரவி வரும் தகவல் தொழில்நுட்ப சாதனங்கள் குழந்தைகளைச் சீரழிக்கும் வகையில் செயற்படுத்தப்படுகின்றன. இதனைத் தவிர்ப்பதற்குச் சிறுபராயத்திலிருந்தே பிள்ளைகள் மத்தியில் வாசிப்புப் பழக்கத்தை உருவாக்குவதில் ஒவ்வொரு பெற்றோரும் அதிக கவனம் செலுத்த வேண்டும். தொலைக்காட்சி, ஐபோன் பாவனைகளால் தற்போதைய உலகில் வாசிப்புப் பழக்கம் அருகிவருகிறது. வாசிப்பதனால் மனிதன் பூரணமடைகிறான் என்பதன் அர்த்தத்தை குழந்தைகள் மத்தியில் உணரச் செய்யவேண்டும். சிறுகதைகள், கவிதைகள், சிறு நாவல்கள் போன்றவற்றை வாசித்து அறிவதில் குழந்தைகள் இயல்பாகவே ஆர்வமுடையவர்களாக இருப்பார்கள். அவர்களது ஆர்வத்தை மழுங்கடிக்கக்கூடாது. வெறுமனே பாடநூல்களைக் கற்று பரீட்சையில் சித்தியடைந்தால்போதும், அதற்கேற்ற நல்ல வேலைகிடைத்தால்போதும் என்ற மனநிலை பெரும்பாலான பெற்றோர்கள் மத்தியில் காணப்படுகிறது. பெற்றோர்களின் இத்தகைய மனநிலையால், குழந்தைகளுக்குக் கல்வி என்பது பெரும் சுமையாகத் தோற்றமளிக்கிறது.

இவற்றை விடுத்து நல்ல புத்தகங்களை வாசிக்க வழிகாட்ட வேண்டும். சிறுகதைகள், நகைச்சுவையான விடயங்கள், ஒழுக்க விழுமியங்கள் அடங்கிய புத்தகங்களைப் பிள்ளைகள் வாசிப்பதற்கு உந்துசக்தியாக இருந்தால் அவர்கள் இயல்பாகவே நற்பழக்கங்களைப் பழகிவிடுவார்கள். அவர்களை வாசிக்க வைத்துப் பெற்றோர்கள் அதனைக் கூர்ந்து கவனிப்புடன் கேட்டுக்கொண்டிருந்தால் வாசிப்பின் மீதான ஆர்வம் அவர்களிடத்தில் வளரும். தினமும் பத்திரிகைகள் வாங்கிப் பெற்றோரும் வாசித்து பிள்ளைகளையும் வாசிக்கப் பழக்கவேண்டும். இதனால் உலக நடப்புக்களையும், செய்திகளையும் அவர்கள் அறிந்து கொள்ளச் சந்தர்ப்பம் கிடைக்கிறது. பத்திரிகைகள், சஞ்சிகைகள், கதைப்புத்தகங்கள், கட்டுரை, கவிதைகள் ஆகியவற்றைப் பிள்ளைகள் வாசிப்பதற்கு வீடுகளில் தினமும் ஒரு மணி நேரத்தை ஒதுக்கிக் கொடுத்து பெற்றோர்களும் அவர்களுடன் அந்த நேரத்தைச் செலவழிக்கவேண்டும். ஒருமணி நேரமாவது தொலைக்காட்சிக்கு ஓய்வு கொடுத்து எமது பிள்ளைகளின் வளர்ச்சிப் பாதையில் பங்கெடுப்போமே! இதற்காக நிறைய அறிவுசார், ஒழுக்கம் சார்ந்த பயனுள்ள நூல்களைப் பிள்ளைகளுக்கு வாங்கிக் கொடுத்து அவைகளை வீட்டில் அதற்கென ஓரிடத்தில் அவர்களே பாதுகாத்து வைக்கும் சூழலை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டிய பொறுப்பு பெற்றோர்களுக்குரியது.

நல்ல புத்தகங்களை வாசிக்க வழிகாட்டவேண்டும். சிறுகதைகள், நகைச்சுவையான விடயங்கள், ஒழுக்க விழுமியங்கள் அடங்கிய புத்தகங்களை பிள்ளைகள் வாசிப்பதற்கு உந்துசக்தியாக இருந்தால் அவர்கள் இயல்பாகவே நற்பழக்கங்களைப் பழகிவிடுவார்கள். அவர்களை வாசிக்க வைத்து பெற்றோர்கள் அதனைக் கூர்ந்து கவனிப்புடன் கேட்டுக்கொண்டிருந்தால் வாசிப்பின் மீதான ஆர்வம் அவர்களிடத்தில் வளரும்.

இதனால் ஒவ்வொரு வீடுகளிலும் சிறு நூல் நிலையம் உருவாகின்றது. நல்ல புத்தகங்கள் அரிய பொக்கிசங்கள் என்பதைப் பிள்ளைகள் புரிந்து கொள்ளக் களம் அமைத்துக் கொடுக்க வேண்டும். அத்துடன் அளவுக்கு அதிகமான தின்பண்டங்கள் மற்றும் விளையாட்டு உபகரணங்கள் வாங்கிக் கொடுக்க அதிகமாகப் பணம் செலவழிப்பதை விடுத்து அதற்குப் பதிலாக, நல்ல நூல்களை வாங்கிக் கொடுக்கலாம்.

இவ்வாறாகச் சிறுபராயத்திலிருந்தே வாசிப்புப் பழக்கத்தைப் பிள்ளைகளிடத்தில் ஏற்படுத்துவதால், அவர்களுடைய மொழியாற்றல், சிந்தனைத்திறன், சீரான மொழி நடைகளைக் கற்றல், கிரகிக்கும் திறன் ஆகியவை வளர்ச்சியடைகின்றன. சமூகத்தின் மத்தியிலும், குடும்ப உறவுகள் மத்தியிலும் நற்பிரஜைகளை உருவாக்குவதற்கு வேண்டிய சிறந்த ஒழுக்கங்களை நூல்களை வாசிப்பதனூடாகவே பிள்ளைகள் கற்றுக்கொள்கிறார்கள். ஆன்மிகம் சார்ந்த நூல்களை வாசிப்பதனால் சமயம் சார்ந்த நெறிகளைக் கடைப்பிடிப்பதுடன், இறைபக்தியில் தம்மை வளர்த்துக் கொள்கிறார்கள்.

வாசிப்பு சிறந்த பொழுதுபோக்கு அம்சமாகக் காணப்படுவதுடன், நூல்களை வாசித்து வளரும் பிள்ளைகள் தமது கல்விக்குத் தேவையான கட்டுரைகள், கவிதைகள் போன்றவற்றைத் தாமாகவே தயாரிக்கும் ஆற்றலைப் பெற்றுக்கொள்கிறார்கள்.

மகாகவி சுப்பிரமணிய பாரதியார் அவ[illegible]களால் குழந்தைகளுக்காக இயற்றப்பட்[illegible] ஓடி விளையாடு பாப்பா... என்னும் பாடல்[illegible] தற்போது மாற்றியமைத்து சொல்லப்பட்[illegible]ருப்பதைக் காண முடிந்தது. அதாவது.

ஓடி விளையாடு பாப்பா நீ
offlineஇல் இருத்தலாகாது பாப்பா.
கூடி விளையாடு பாப்பா நீ
onlineஇல் விளையாடு பாப்பா.

காலை எழுந்தவுடன் face book
பின்பு கனவு கொடுக்கும் நல்ல status
மாலை முழுதும் chatting என்று
வழக்கப்படுத்திக் கொள்ளு பாப்பா

இப்பாடல் நகைச்சுவைக் கருத்தாக இ[illegible]றப்பட்டிருந்தாலும், இத்தகைய வழியிலே[illegible] தற்போதைய சமூகம் குழந்தைக[illegible] வளர்த்துக்கொண்டிருக்கிறது.

எனவே, இன்றைய குழந்தைகள், நாளை[illegible] சமூகத்தின் தூண்கள், தலைவர்கள் [illegible]பதை உணர்ந்து எமது குழந்தைகளு[illegible] சிறுபராயத்திலிருந்தே வாசிப்புப் பழக்கத்[illegible] வளரச் செய்வோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





**மாமியார்:** நேற்று, நான் போன சினிமாவைப் பார்த்து, சிரிச்சு சிரிச்சு பாதி உயிர் போயிடுச்சு!

**மருமகள்:** அப்படியா அத்தை! அந்தப் படத்தை, இன்றைக்கும் ஒரு தடவைபோய் கண்டிப்பாகப் பார்த்துவிட்டுவாங்க..!

மௌனவல் @mullai10 · Jun 26
**ஆக்கிரமிக்காத ஒரு நிறைவான அன்பு வாழ்க்கையில் சம்பவிக்கும்போது யாருமே அதனை ஏற்றுக்கொள்வதில்லை. அது ஒரு குறையாகவேதான் கொள்ளப்படும்.**

# உடல் எடையை குறைக்கும் கார்த்தி

நடிகர் கார்த்தி அடுத்ததாக மணிரத்னம் இயக்கும் புதிய படத்தில் நடிக்கவுள்ளார். இந்தப் படத்தில் அவருக்கு இணையாக ஹிந்தி நாயகி அதிதி ராவ் நடிக்கவுள்ளார். இவர் ஹிந்தியில் வெளிவந்த 'வாசிர்' படத்தின் நாயகி ஆவார். இந்தப் படத்தில் கார்த்தி விமானியாக நடிக்க விருப்பது அனைவருக்கும் தெரிந்ததே. இந்த நிலையில், விமானி கதாபாத்திரத்தில் நடிப்பதற்காக கார்த்தி தனது உடல் எடையைக் குறைத்து வருகிறார் எனச் செய்திகள் வெளிவந்துள்ளன. இதற்காகத் தினமும் ஜிம்முக்கு சென்று தனது உடல் எடையை குறைத்து வருகிறாராம் கார்த்தி. இந்தப் படத்தின் படப்பிடிப்பு அடுத்த மாதம் தொடங்கவுள்ளதாகக் கூறப்படுகிறது. இன்னும் பெயரிடப்படாத இந்தப் படத்துக்கு அனைத்து பாடல்களையும் வைரமுத்து எழுதுகிறார். ஏ.ஆர்.ரகுமான் இசையமைக்கிறார். இசையோடு, காதல் கலந்த கலவையாக உருவாகும் இந்தப் படத்துக்கான பாடல் பதிவு வேலை ஏற்கனவே தொடங்கி விட்டது என்பது குறிப்பிடத்தக்கது.







# சுடோக்கு

## எண் விளையாட்டு


| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | 4 | | 2 | | 9 | |
| | 4 | | | | | | 6 | |
| 1 | | | | 5 | | 3 | | |
| 6 | | 8 | 9 | 4 | | | | |
| 7 | | | | | | | | 1 |
| | | | | 2 | 3 | 4 | | 6 |
| | | 1 | | 8 | | | | 2 |
| | 7 | | | | | | 1 | |
| | 6 | | 1 | | 7 | | | |

நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 3 | 7 | 9 | 4 | 8 | 5 | 6 | 1 | 2 |
| 2 | 1 | 5 | 7 | 6 | 9 | 8 | 3 | 4 |
| 8 | 6 | 4 | 2 | 1 | 3 | 9 | 5 | 7 |
| 6 | 5 | 2 | 9 | 3 | 4 | 7 | 8 | 1 |
| 7 | 3 | 8 | 6 | 2 | 1 | 5 | 4 | 9 |
| 4 | 9 | 1 | 5 | 7 | 8 | 2 | 6 | 3 |
| 5 | 2 | 3 | 8 | 4 | 7 | 1 | 9 | 6 |
| 1 | 8 | 6 | 3 | 9 | 2 | 4 | 7 | 5 |
| 9 | 4 | 7 | 1 | 5 | 6 | 3 | 2 | 8 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1–9. வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்).
இந்த ஒவ்வொரு நிரையிலும், நிரலிலும் 1–9 வரையான எண்கள், இரண்டு தட வைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1–9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும். தர்க்கரீதியில் ஏனையவற்றை நிரப்பவேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாக... 2005 இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?



**மேடம் :** மனதில் குழப்பமான சூழ்நிலை ஏற்படலாம். நண்பரின் ஆலோசனையை ஏற்பது நல்லது. தொழில், வியாபாரத்தில் குறைந்தளவு இலாபம் கிடைக்கும். உறவினர் வருகையால், செலவு அதிகரிக்கும்.

**இடபம் :** பிறருக்கு உதவும் எண்ணம் மேலோங்கும். தொழிலில், தாராள பணவரவு கிடைக்கும். ஆரோக்கியம் பலம் பெறும். நண்பருடன் விருந்து விழாவில் கலந்து கொள்வீர்கள்.

**மிதுனம் :** திட்டமிட்ட பணியில் மாற்றம் ஏற்படலாம். தொழில், வியாபாரத்தில் ஓரளவு வருமானம் கிடைக்கும். வீடு, வாகன பாதுகாப்பில் தகுந்த கவனம் வேண்டும். விஷஜந்துக்களிடம் விலகி இருப்பது நல்லது.

**கடகம் :** உங்களின் நற்செயல் கண்டு பிறர் பாராட்டுவர். தொழிலில், பண வரவு திருப்திகரமாக இருக்கும். பெண்களுக்கு, பொன் பொருள் சேர்க்கை உண்டாகும். பணியாளர்களுக்கு, பாராட்டு வெகுமதி கிடைக்கும்.

**சிங்கம் :** செயல்களில் நிதானத்தை கடைபிடிப்பது அவசியம். தொழிலில், விற்பனை இலக்கை நிறைவேற்ற, கூடுதல் கால அவகாசம் தேவைப்படும். பிறருக்காக பணம், நகையை பாதுகாக்கும் பொறுப்பை ஏற்க வேண்டாம்.

**கன்னி :** வாழ்வில் வளர்ச்சி கண்டு மகிழ்வீர்கள். தொழிலில், உற்பத்தி, விற்பனை வியத்தகு அளவில் முன்னேற்றம் பெறும். சேமிக்கும் விதத்தில் வருமானம் வரும். அரசியல்வாதிகளுக்கு எதிரிகள் தொந்தரவு மறையும்.

**துலாம் :** பேச்சில் அன்பும், பண்பும் கலந்திருக்கும். நல்லவர்களின் நட்பு கிடைக்கும். தொழில், வியாபாரத்தில், திட்டமிட்ட வளர்ச்சி ஏற்படும். ஆதாயம் உயரும். பெண்கள் ஆடை ஆபரணம் வாங்குவர்.

**விருச்சிகம் :** உங்களைப் பற்றிய மதிப்பீடு குறையலாம். தொழிலில் பணிச்சுமை அதிகரிக்கும். மிதமான வருமானம் கிடைக்கும். எதிர்பார்த்த சுபச் செய்தி வர தாமதமாகலாம். உணவு விடயத்தில் கவனம் தேவை.

**தனுசு :** செயலில் தடுமாற்றம் உருவாகலாம். தொழில், வியாபாரத்தில், அளவான மூலதனம் போதும். ஓரளவு லாபம். உறவினர் வகையில் செலவு செய்ய நேரிடலாம். வாகனத்தில் மிதவேகம் பயணத்தை எளிதாக்கும்.

**மகரம் :** உழைப்புக்கான நற்பலன் தேடி வரும். தொழில், வியாபாரத்தில், அபரிமிதமான வளர்ச்சி ஏற்படும். இலாபம் அதிகரிக்கும். எதிர்கால தேவைக்கு பணம் சேமிப்பீர்கள். இஷ்ட தெய்வ வழிபாடு நடத்துவீர்கள்.

**கும்பம் :** மனதில் மகிழ்ச்சி நிறைந்திருக்கும். நண்பரின் நற்செயலை மனமுவந்து பாராட்டுவீர்கள். தொழில், வியாபாரத்தில், நிலுவையில் உள்ள பணி நிறைவேறும். பணியாளர்கள் சிறப்பாகப் பணிபுரிந்து வெகுமதி, சலுகை பெறுவர்.

**மீனம் :** சிலர் ஆதாய நோக்குடன் அணுகுவர். தொழிலில், மாறுபட்ட சூழ்நிலை உருவாகி, தொந்தரவு தரலாம். லாபம் ஓரளவு இருக்கும். பாதுகாப்பு குறைவான இடங்களுக்குச் செல்ல வேண்டாம்.

## ஆரோக்கிய சமையலுக்கு...

* சுக்கு, ஏலக்காயைப் பொடி செய்து வைத்துக் கொண்டால் தேநீர் போடும் போது அவ் வப் போது சேர்த்துக் கொள்ளலாம்.
* இடியப்ப மா, கொழுக் கட்டை மா பிசையும் போது அரை ரம்ளர் கொதிக்கும் பாலையும் விட்டுக் கிளறி னால் நல்ல வெள்ளையாக இருக்கும்.
* மாங்காய் இனிப்பு பச்சடி செய்யும் பொழுது தோலைச் சீவி விடுவார்கள். ஆனால் தோல் சீவாமல் அப்படியே செய்தால் மிகவும் சுவையாக இருக்கும்.
* தினமும் இரவு பால் அருந் தும்போது சீனிக்குப் பதில் வெல்லம் ஏலக்காய் சேர்த்து கொதிக்கவிட்டு அருந்தினால் இரும்புச்சத்துச் சேரும். சுவை யும் நன்றாக இருக்கும்.
* வாரம் ஒரு முறை இஞ்சியை யும், உள்ளியையும் தனித் தனியாக அரைத்து விழுதாக குளிர்சாதனப் பெட்டியில் வைத்துக் கொண்டால் சைவ பிரியாணி மற்றும் அசைவ பிரியாணி செய்யும் போது எளிதாக இருக்கும்.
* நூடுல்ஸ் செய்யும் பொழுது வெங்காயம், தக்காளி வதக்கும் போது சிறிது மிளகுத்தூள், உப்பு, மிளகாய்த் தூளையும் அதில் உள்ள மசாலாவோடு சேர்த்துச் செய்தால் சுவை கூடுதலாக இருக்கும்.



## நேற்றைய கடலுணவு விலை நிலவரம்

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| இறால் | 600 | 600 | 600 | 700 | 1000 | 800 | 700 |
| நண்டு | 250 | 400 | 300 | 400 | 500 | 200 | 600 |
| கணவாய் | 600 | 600 | 500 | 500 | 700 | – | – |
| பாரை | 550 | 500 | 500 | 650 | 600 | 700 | 400 |
| சுறா | 500 | 600 | 600 | 800 | 1000 | – | 700 |
| சீலா | 300 | 500 | 400 | 800 | 500 | 500 | 400 |
| விளை | 650 | 500 | 400 | 800 | 450 | 600 | – |
| முரல் | 300 | 400 | 350 | 400 | 300 | 400 | – |
| கும்பிளா | 400 | 400 | 300 | 450 | 400 | 600 | – |
| கிளாக்கன் | 800 | 1000 | – | – | 600 | 400 | – |
| ஒரா | 400 | 400 | – | – | 450 | – | 400 |
| திரளி | 300 | 300 | 200 | 200 | 200 | 200 | 300 |
| நகரை | 250 | 300 | – | 300 | 300 | 200 | 350 |
| சூடை | 150 | 200 | 100 | 200 | 200 | 150 | – |
| ஒட்டி | 300 | 250 | 150 | 400 | 300 | – | – |
| திருக்கை | 150 | 300 | 200 | 350 | 400 | – | 200 |
| மதனம் | 150 | 250 | 180 | – | 300 | 50 | 300 |
| கொய் | 100 | 200 | 60 | 100 | 100 | – | – |
| பாலை | 400 | 250 | 250 | 400 | 400 | – | – |
| வாழை | 100 | 150 | 200 | – | 300 | – | 200 |

## நாளை

ஆனி-24

வெள்ளிக்கிழமை - 08.07.2016

திதி: சதுர்த்தி பி.ப.03.25 வரை

நட்சத்திரம்: மகம்

மு.இ.09.07 வரை

ராகுகாலம்: 10.28-11.58 வரை

சுபநேரம்: 05.58-07.28 வரை

சதுர்த்தி விரதம்

மாணிக்கவாசகர் குருபூசை



## யோக்கட்

### தேவையானவை

பால் - ஒரு லீற்றர்
சீனி - 130 கிராம்
ஜெலற்றீன் - ஒரு தேக்கரண்டி
யோக்கற் - ஒரு கப்
யோக்கற் கப் - 30 கப்
தேமோ மீற்றர் - ஒன்று
கொதிநீர் - 4 மேசைக்கரண்டி
தண்ணீர் - தேவையானளவு
கலரிங் - 4 துளிகள் (விரும்பினால்)
எசன்ஸ் - 3 துளிகள் (விரும்பினால்)

### செய்முறை

ஒரு பாத்திரத்தில் பால், சீனி இரண்டையும் போட்டு நன்றாக கரைத்துக் கொள்ளவும். இன்னொரு பாத்திரத்தில் ஜெலற்றீனை போட்டு அதன் மேல் 4 மேசைக்கரண்டி கொதி நீர் விட்டு கலந்து வைக்கவும். அடுப்பில் ஒரு பெரிய பாத்திரத்தை வைத்து அந்தப் பெரிய பாத்திரத்தில் முக்கால் பகுதிக்கு தண்ணீர் விட்டு பால் உள்ள பாத்திரத்தை அதனுள் வைத்து கொதிக்க வைக்கவும்.

அதன் பின்பு பாலின் வெப்பநிலையை தேமா மீற்றரால் அளக்கவும். பாலின் வெப்பநிலை 90 பாகைக்கு வந்தவுடன் அடுப்பை அணைத்து விடவும்.

அதன் பின்பு 30 நிமிடத்துக்கு அடுப்பில் வைத்த பின்பு அடுப்பிலிருந்து இறக்கி கொள்ளவும்.

பால் ஆற தொடங்கும் போது தேமோ மீற்றரால் அளக்கவும். பாலின் வெப்பநிலை 60 பாகைக்கு வந்த பின்பு ஜெலற்றீன் கலவையை விட்டு நன்றாக கரைத்து துணியை வைத்து வடிகட்டிக் கொள்ளவும். அதன் பின்பு பாலின் வெப்பநிலை 40 பாகையை அடையும் போது யோக்கற் ஒரு கப் இட்டு கரண்டியால் நன்றாகக் கலக்கவும். பின்பு கலறிங், எசன்ஸ் கலந்து யோக்கற் கப்பில் ஊற்றி 40 பாகை வெப்பநிலையில் 5 மணித்தியாலம் சூடேற்றவும்.

யோக்கற் இறுகியதும் வெளியே எடுத்து அறை வெப்பநிலையில் 10 நிமிடம் வைக்கவும். பின்பு எடுத்து 24 மணித்தியாலம் குளிரூட்டியில் வைக்கவும். பின்பு எடுத்து அறை வெப்பநிலையில் 2 மாத காலத்துக்கு வைத்து பயன்படுத்தலாம்.



## நேற்றைய மரக்கறி விலை நிலவரம்

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| முள்ளங்கி | 100 | – | 80 | 160 | 80 | 120 | – | 60 |
| கத்தரி | 80 | 80 | 80–120 | 100 | 90 | 120 | – | 60 |
| கரட் | 250 | 240 | 280 | 240 | 220 | 240 | – | 210 |
| மரவள்ளி | 100 | 200 | 80 | 100 | 80 | 100 | – | 50 |
| பயிற்றை | [illegible] | 80 | 100 | 100 | 100 | 100 | – | 80 |
| பாகல் | [illegible] | 180 | 320 | 240 | 200 | 240 | – | 200 |
| கருணைக்கிழங்கு | 150 | – | 120 | – | 120 | – | – | 80 |
| பெ.வெங்காயம் | 90 | 90 | 100 | 90 | 80 | 90 | – | 90 |
| சி.வெங்காயம் | 120 | 140 | 120 | 160 | 140 | 160 | – | 100 |
| பூசணி | 70 | 100 | 140 | 140 | 120 | 140 | – | 100 |
| தக்காளி | 200 | 240 | 240 | 260 | 200 | 250 | – | 150 |
| வாழைக்காய் | 100 | 100 | 80 | 140 | 120 | 140 | – | 40 |
| கீரை | 20 | 15 | 20 | 20 | 20 | 20 | – | 15 |
| பொன்னாங்காணி | 25 | 30 | 30 | 35 | 20 | 35 | – | 10 |
| பச்சை மிளகாய் | 500 | 600 | 600 | 700 | 600 | 600 | – | 650 |
| புடோல் | 70 | 80 | 80 | 80 | 60 | 100 | – | 60 |
| கோவா | 160 | 140 | 160 | 240 | 140 | 100 | – | 130 |
| வெண்டி | 120 | 100 | 120 | 240 | 100 | 120 | – | 60 |
| போஞ்சி | 200 | 200 | 200 | 240 | 200 | 240 | – | 180 |
| லீக்ஸ் | 150 | 160 | 120 | 240 | 160 | 240 | – | 130 |
| தேங்காய் | 40 | 25 | 40 | 28–30 | 30 | 28– 30 | – | 22 |
| உருளைக்கிழங்கு | 100 | 100 | 100 | 90 | 110–120 | 100 | – | 120 |
| தேசிக்காய் | 200 | 200 | 140 | 200 | 150 | 200 | – | 100 |
| வல்லாரை | 15 | 20 | 10 | 15 | 10– 15 | 15 | – | 10 |
| கறிமிளகாய் | 200 | 100 | 200 | 240 | 340 | 240 | – | 200 |
| இராசவள்ளி | 160 | – | – | 180 | – | 180 | – | 120 |
| முருங்கைக்காய் | 500 | 400 | 400 | 300 | 300 | 280 | – | 300 |



### மேசை அலங்கார நீர்த் தொட்டி

மேசை அலங்கார நீர்த் தொட்டி அறிமுக மாகியுள்ளது. கலைநயமான வடிவமைப்புடன் இவை உருவாக்கப்பட்டுள்ளன. இவை நீர் ஊற்றி பூக்கள் வைக்கக்கூடியவாறு வடிவமைக் கப்பட்டுள்ளன. இவற்றின் விலை 3 ஆயி ரத்தில் இருந்து, 4 ஆயிரத்து 500 ரூபா ஆகும்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நுட்பம்




### பொருள்களை அடுக்கும் ரோபோக்கள் தயாரிப்பு

களஞ்சியசாலையில் கொள்கலனிலுள்ள பொருள்களை பிரித்தெடுத்து அடுக்கி வைக்கும் வகையில் தயாரிக்கப்பட்ட ரோபோக்களுக்கிடையில் அமேசான் நிறுவனம் நடத்திய போட்டியில் நெதர்லாந்து வெற்றி பெற்றது.

குறித்த போட்டியில் பதினாறு குழுக்கள் பங்குபற்றியிருந்தன. ரோபோக்களுக்கு இரு பணிகள் வழங்கப்பட்டன. முதலாவது கொள்கலனிலுள்ள பொருள்களைத் தெரிவுசெய்து, அவற்றைக் காட்சிப் பரணில் ஒழுங்காக அடுக்கி வைத்தலாகும். இரண்டாவது பணி குறித்த செயலை பின்னிருந்து தலைகீழாக செய்தலாகும்.

அமேசான் நிறுவனமானது பொருள்களை களஞ்சியசாலைக்கு எடுத்துச் செல்ல ரோபோக்களை பயன்படுத்துகின்றது. அவற்றை அடுக்கி வைப்பதற்கு மனித சக்தியையே பயன்படுத்துகின்றது. தற்போது பொருள்களை அடுக்கி வைக்கவும் ரோபோக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன. இரு ஜப்பான் தயாரிப்புக்கள் மற்றும் ஐந்து அமெரிக்க தயாரிப்புக்கள் என்பவற்றை பின்தள்ளி தற்போது நெதர்லாந்து இந்த வகையான ரோபோ தயாரிப்பில் வெற்றி கண்டுள்ளது. வெற்றி பெற்ற நெதர்லாந்து தயாரிப்பு குழுவிற்கு 50 ஆயிரம் அமெரிக்க டொலர் வழங்கப்பட்டது.



### மூளைக்காயங்களுக்கு மருந்து செலுத்தும் நுட்பம்

மூளைக் காயங்களுக்கு மருந்து மற்றும் நுண் துகள்களை செலுத்தும் நவீன தொழில்நுட்பமொன்றை ஆய்வாளர்கள் கண்டுபிடித்துள்ளனர். இந்தத் தொழில்நுட்பமானது மண்டையோட்டு அமுக்கம், குருதி ஓட்டத்தை சீராக்குதல் போன்ற கடுமையான மூளை நிலமைகளுக்கெதிராக செயற்படுத்தப்படக் கூடியது என ஆய்வாளர்கள் தெரிவித்தனர்.

நான்கு அமினோ அமிலங்களுக்கான பெப்ரைட் தொடரொழுங்கை ஆய்வாளர்கள் கண்டு பிடித்துள்ளனர். அவை மூளைக் காயங்களை இனங்கண்டு செயற்படக் கூடியவை. இந்த நான்கு அமினோ அமிலங்களும் மருந்து மற்றும் நுண் துகள்களை மூளையின் காயப்பட்ட பகுதிகளுக்கு எடுத்து செல்கின்றன. குறித்த மூலப்பொருள்களை பெப்ரைட்டுடன் இணைப்பதன் மூலம் அதனை மூளைக் காயங்களை அறிந்து செயற்படும் கருவியாக பயன்படுத்த முடியும் என ஆய்வாளர்கள் நம்புகின்றனர்.

மூலப்பொருள்களாக நொதியங்கள் அல்லது மரபணு அடக்க சிகிச்சைப் பொருள்களைப் பயன்படுத்தி வினைத்திறனான சிக்சையை மேற்கொள்ள முடியும் ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.

# சம்சுங் உடன் இணைந்து இல்லத்தை வெல்லுங்கள்




சம்சுங் எலக்ட்ரோனிக்ஸ் சம்சுங் உடன் உங்கள் இல்லத்தை வெல்லுங்கள் (Win Your Home with Samsung) ஊக்குவிப்பில் பங்கேற்கும் ஓர் அதிர்ஷ்டசாலி வெற்றியாளருக்கு கொஸ்வத்தை பெயார்வே அதிசொகுசு குடிமனை (Fairway Luxury Apartments) ஒன்றினை பரிசாகப் பெற்றுக் கொள்ளும் வாழ்நாள் அதிர்ஷ்டத்தை அளிக்கின் றது. மாபெரும் பரிசான அதிசொகுசு மனையைத் தவிர, ரூ. 21 மில்லியன் பெறுமதியான சம்சுங் தயாரிப்புகளான சலவை இயந்திரங்கள், குளிர்சாதனப் பெட்டிகள், தொலைக் காட்சிகள் உள்ளிட்ட மேலும் 52 வியத்தகு வெகுமதிகளும் அதிர்ஷ்டசாலி வாடிக்கையாளர்களுக்கு காத்திருக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

இந்த ஊக்குவிப்பில் கலந்து கொள்ளத் தகைமைபெறும் வகையில், வாடிக்கையாளர் ஒருவர் ஸ்மார்ட்போன்கள், சம்சுங் தொலைக் காட்சிகள், குளிர்சாதனப் பெட்டிகள், சலவை இயந்திரங்கள், குளிரூட்டிகள், ரப்கள், மைக்ரோவேவ் அவண்கள், ஹோம் தியேட்டர் சிஸ்டம், மொனிட்டர் மற்றும் பிரின்டர்கள் போன்ற சம்சுங் தயாரிப்புகளை 2016 ஓகஸ்ட் 30ஆம் திகதி வரையான சலுகைக் காலத்தில் கொள்வனவு செய்ய வேண்டும். எனினும் இந்த ஊக்குவிப்பானது புதுப்பிக்கப்பட்ட சாதனங்கள், டிவிடி பிளேயர்கள், தொலைபேசிகள் மற்றும் எஸ்.டி. கார்ட்டுகளுக்கு செல்லுபடியாகாது. பங்கேற்பாளர்கள் புதிய தயாரிப்பை கொள்வனவு செய்ததும், www.winyourhome.lk என்ற இணையத்தளத்திற்குள் நுழைந்து கோரப்படும் விவரங்களைப் பூர்த்தி செய்து பதிவு செய்ய வேண்டும். பல்வேறு வகைகளில் பல்வகை சம்சுங் தயாரிப்புகளை வாங்கும் வாடிக்கையாளர்கள், ஒன்றுக்கு மேற்பட்ட விண்ணப்பங்களை அனுப்புவதற்குத் தகுதி பெறுகின்றார்கள். சம்சுங் தயாரிப்புகளைக் கொள்வனவு செய்யும் மையத்தில் உள்ள கூப்பனைப் பெற்று, அதனைப் பூர்த்திசெய்து அதற்கான பெட்டியில் இடுவதன் ஊடாகவும் இந்த ஊக்குவிப்பில் கலந்துகொள்ள முடியும்.

**வணிகம்**

சம்சுங் உடன் உங்கள் இல்லத்தை வெல்லுங்கள் ஊக்குவிப்பின் வெற்றியாளர்கள், ஊக்குவிப்புக் காலப்பகுதியின் நிறைவில் உள்துறை அமைச்சுடன் இணைந்து மேற்கொள்ளப்படும் அதிர்ஷ்ட சீட்டிழுப்பு ஒன்றின் ஊடாக தேர்ந்தெடுக்கப்படுவார்கள். வெற்றியாளர்கள் குறித்த விவரங்கள் குறித்த ஊக்கு விப்பு நிறைவடையும் காலத்திலிருந்து 30 நாள்களுக் குள் www.winyourhome.lk தளத்தில் பதிவேற்றம் செய்யப்படும். மா பெரும் பரிசு வெற்றியாளரை அளிக்கும் குறிப்பிட்ட விற்பனை மையத்துக்கும் ரூ. ஒரு மில்லியன் பரிசுத் தொகை வழங்கப்படும். அங்கீகாரம் பெற்ற சம்சுங் முகவர்களான, சொப்ட் லொஜிக், சிங்கர், சிங்க கிரி, டயலொக், எரிசலாட் மற்றும் மொபிட்டெல் ஆகியவர்களிடமிருந்து வாடிக்கையாளர்கள் பட்டியலிடப்பட்டுள்ள பொருள்களைக் கொள்வனவு செய்ய வேண்டும்.

சம்சுங் சிறிலங்கா முகாமைத்துவப் பணிப்பாளர் யங்மின் ஷின் இது குறித்துத் தெரிவிக்கையில், எமது விசுவாசமிக்க மற்றும் சாத்தியமான வாடிக்கையாளர்களுக்கு உயர் பெறுமானம் மிகுந்த பெயார்வே இல்லம் ஒன்றினை இந்த ஊக்குவிப்பின் ஊடாக வழங்க முடிகின்றமை குறித்து நாங்கள் மிகுந்த மகிழ்ச்சியடைகின்றோம். சம்சுங் உடன் உங்கள் இல்லத்தை வெல்லுங்கள் ஊக்குவிப்பானது வாடிக்கையாளர்களுக்கு அதிசொகுசு குடிமனை ஒன்றினை அளிக்கும் தனித்துவ மிக்க சலுகையை அளிக்கின்றது. இந்த ஊக்குவிப்பானது எமது வாடிக்கையாளர்களுக்கு அனுகூலங்களை அளிக்கும் என நாம் நம்புவதுடன் நிபுணத்துவ வாடிக்கையாளர் சேவையை அளிப்ப தான எமது கடப்பாட்டினை மேலும் உறுதிசெய்யும் என நாம் நம்புகின்றோம் எனக் குறிப்பிட்டார். (கு)

## பாவித்த வாகனங்களை இறக்குமதி செய்வது இலங்கையில் வீழ்ச்சி

ஜப்பானில் பயன்படுத்தப்பட்ட வாகனங்களை இலங்கைக்கு இறக்குமதி செய்வதில் பெரும் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது.

ஜப்பானிய வர்த்தக ஊடகம் ஒன்று இதனைத் தெரிவித்துள்ளது.

கடந்த வருடத்தில் ஜப்பானில் பயன்படுத்தப்பட்ட வாகனங்களை இறக்குமதி செய்வதில் இலங்கை முன்னிலையில் இருந்தது.

இந்த நிலையில், இந்த வருடத்தின் மே மாதம் வரையான காலப்பகுதில் ஆயிரத்து 66 வாகனங்கள் மாத்திரமே இறக்குமதி செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

இது கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில் 70 சதவீத வீழ்ச்சியைக் காட்டுவதாகத் தெரிவிக்கப்பட்டது. (கு)

## இலங்கை- கசகஸ்தான் விசா விலக்கு ஒப்பந்தம்



இலங்கைக்கும் கசகஸ்தானுக்கும் இடையிலான விசா விலக்கு ஒப்பந்தம் ஒன்று கைச்சாத்திடப்பட்டுள்ளது.

இலங்கையின் வெளி விவகாரச் செயலாளருக்கும், கசகஸ்தானின் தூது வருக்கும் இடையில் இந்த உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டுள்ளது.

இதன் ஊடாக இலங்கை யின் ராஜதந்திர மற்றும் அதிகாரபூர்வக் கடவுச் சீட்டைக் கொண்டவர்கள், கசகஸ்தானுக்கு விசா இன் றிப் பயணிக்க முடியும். இந்த உடன்படிக்கையின் அடிப்படையில் இலங்கைக் கும் கசகஸ் தானுக்கும் இடையிலான பரஸ்பர ஒத்துழைப்புகள் அதிகரித்திருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (கு)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஜனாதிபதியை

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சர்வதேச நீதிபதிகள் வேண்டும் என்பதில் விடாப்பிடியாக இருக்கின்றது. இவை இரண்டுக்கும் இடைப்பட்ட பல்வேறு வழிகள் இருக்கின்றன" என்று தெரிவித்தார் வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர. போர்க்குற்ற விசாரணைகளில் பன்னாட்டு நீதிபதிகள், சட்டவாளர்களின் பங்களிப்பை ஜனாதிபதியும் பிரதமரும் நிராகரித்துள்ள நிலையில் மங்கள இவ்வாறு தெரிவித்தார். உள்ளூரிலேயே விசாரணையை நடத்தும் திறன் இலங்கைக்கு உள்ளது என்று ஜனாதிபதி கூறுகிறார்.

"ஜனாதிபதியை மீறி இங்கு பன்னாட்டு நீதிபதிகளை நியமிக்க முடியாது. பன்னாட்டு நீதிபதிகளை அனுமதிக்கப் போவதில்லை என்ற ஜனாதிபதியின் கருத்தில் மாற்றம் ஏற்படாமல், இதனை மேற்கொள்ள முடியாது" என்று நிரான் அங்கிரல் குறிப்பிட்டார்.

"பன்னாட்டு நீதிபதிகள் இல்லாமல் பன்னாட்டு நீதிபதிகளுக்கான சட்ட அறிவுரை வழங்கும் நிபுணர்களை மாத்திரம் இந்த விசாரணையில் பயன்படுத்தலாம் என்று அரசு திட்டமிடுகின்றது. அப்படிச் செய்வது ஐ.நா. தீர்மானத்தை நிறைவேற்றாமல் இருப்பதற்கு ஒப்பானதே. பன்னாட்டு நீதிபதிகள், சட்டவாளர்களை உள்ளடக்குவதாகத்தான் ஐ.நா. தீர்மானத்தை கொழும்பும் சேர்ந்து நிறைவேற்றியது.

எனவே எந்த மாற்றமாக இருந்தாலும் அது தீர்மானத்துக்கு மாறானது தான்" என்றார் நிரான்.

"தமிழர்கள் பன்னாட்டு விசாரணை அல்லது பன்னாட்டு நீதிபதிகள் சட்டவாளர்களை உள்ளடக்கிய விசாரணையைத் தொடர்ச்சியாக வலியுறுத்தி வருகிறார்கள். ஆனால் ஜனாதிபதி அதனை நிராகரிக்கிறார். இந்த இருதரப்பினரையும் சமாளித்துப் போவதற்காகவே மங்கள சமரவீர இப்படித் தெரிவித்திருக்கிறார். ஜனாதிபதியின் சம்மதம் இல்லாமல், இந்த விடயத்தில் எந்த முன்னேற்றமும் ஏற்படாது. எனவே மங்கள கூறுவது போன்று 2017ஆம் ஆண்டு போர்க்குற்ற விசாரணைஆரம்பிப்பது என்பது கேள்விக்குறியே" என்றார் மற்றொரு ஆய்வாளர். (வ-5)

## சிங்கள

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மக்கள் இடம்பெயர்ந்தனர். வடக்கிலிருந்த தமிழ் மக்களுக்கு மேலதிகமாகச் சிங்கள மற்றும் முஸ்லிம் மக்களும் இடம் பெயர்ந்தனர். மோதல் முடிவடைந்து, அமைதி திரும்பியுள்ளது. வெளியேறிய மக் கள் தமது சொந்த இடங்களுக்குத் திரும்புகின்றனர். அடிப்படை வசதிகள் இல்லாத காரணத்தால் அவர்களால் மீளக் குடியமர முடியவில்லை.

மீளக்குடியமர வருவோரில் வீடுகள் தேவைப்படும் 16 ஆயிரத்து 120 முஸ்லிம் குடும்பங்களும், 5 ஆயிரத்து 543 சிங்களக் குடும்பங்களும் இருப்பதாகக் கண்டறியப்பட்டது. இடம்பெயர்ந்தமையினால் இந்த மக்களின் வாக்குரிமை மற்றும் அரசியல் உரிமைகளுக்கும் பாதிப்பு ஏற்பட்டது.

பிறப்பு, இறப்பு பதிவுகள் தொடர்பான பிரச்சினைகளை மக்கள் எதிர்நோக்குகின்றனர். இடம்பெயர்ந்தவர்களின் பிரச்சினைகளைத் தீர்க்கும் நோக்கிலேயே மேற்படி செயலணி அமையப் பெறும். செயலணியின் பரிந்துரைகளின் அடிப்படையில் எதிர்கால நடவடிக்கைகளை மேற்கொள்ளத் தீர்மானிக்கப்பட்டது என்றார். (வ-5)

## பசிலின்

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முன்னாள் அமைச்சர் பசில் ராஜபக்ச குறிப்பிடுகிறாரே?" என்று ஊடகவியலாளர் கேள்வி எழுப்பினார்.

"இந்தக் கேள்விக்குப் பதிலளிக்க வேண்டுமா? பரவாயில்லை. முன்னாள் அமைச்சர் கூறியதை நான் பத்திரிகையில்தான் பார்த்தேன். பசில் ராஜபக்ச தனது வீட்டில் உயர் ரக நாய்களை வளர்த்தார். அவற்றைப் பராமரிப்பதற்குப் படையினரைச் சேவையில் ஈடுபடுத்தினார். நாய்களுக்கான வரியை அறிமுகப்படுத்தியது யார் என்பது இதன்மூலம் புலனாகின்றது" – என்றார்.

பிரதி அமைச்சரின் இந்தப் பதிலால் பெரும் சிரிப்பொலி ஏற்பட்டது.

"மத்திய வங்கியின் புதிய ஆளுநராக நியமிக்கப்பட்டவர், ராஜ் ராஜரட்னத்தின் நிறுவனத்தில் பணிப்பாளராக இருந்துள்ளார் என்று கெஹலிய ரம்புக்வெல குறிப்பிட்டாரே" என்று எழுப்பப்பட்ட மற்றுமொரு கேள்விக்கு, "அவ்வாறு இல்லை. ஆலோசனை வழங்கும் நபராகவே அவர் இருந்தார். ஆளுநர் நியமனத்தை இனவாதமாக்கி அரசியல் தேட சிலர் முயற்சிக்கின்றனர்" – என்று பிரதி அமைச்சர் கருணாரட்ன பரணவிதாரண பதிலளித்தார். (பசில் வளர்த்த நாய்கள் பற்றிய செய்தி 4ஆம் பக்கத்தில்)

(வ-5)


## நெஞ்சை விட்டகலாத நினைவுகளுடன் பன்னிரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி

### திருமதி வசந்தராணி சிவபாலசுப்பிரமணியம்

திதி: 07.07.2016

மண்ணில்
13.01.1964

விண்ணில்
20.06.2004



"ஆயிரம் உறவுகள் இருந்தாலும் அம்மாவிற்கு இணையாகுமா"

எங்கள் குடும்பத்தின் ஒளிவிளக்காய் திகழ்ந்து ஆலமரம் போல் எம்மை ஆதரித்த அன்னையே!
நேசத்துடன் வளர்த்தெடுத்த பாசமுள்ள எம் அம்மாவே
நீர் காற்றிலா கலந்து போனீர் உம் கண்ணியம் வாழும் என்றும்
ஆத்மா சாந்திபெற ஆண்டவனை இறைஞ்சுகின்றோம்.


மாதகல் வடக்கு,
மாதகல்.

(சி/ 21367)(12.18)

பிரிவால்துயருறும்
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### சுவாம்பிள்ளை ஆனந்தராசா (ஆனந்தா)



இல. 98, குடிமத்தி, உருத்திரபுரம் கிளிநொச்சியைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட சுவாம்பிள்ளை ஆனந்தராசா அவர்கள் மலேசியாவில் 02.07.2016 அன்று அகாலமரணமடைந்தார்.

அன்னார் சுவாம்பிள்ளை காலஞ்சென்ற மேரிலுவிசா தம்பதியரின் கனிஸ்ட புதல்வனும் சகாயராசா(சேவைக்கால ஆசிரிய ஆலோசகர், கல்வித்திணைக்களம், கிளிநொச்சி), பாக்கியராசா(உருத்திரபுரம்), தேவராசா (நீதி மன்ற வீதி, மல்லாகம்), யோகராசா(இரணைப்பாலை, புதுக்குடியிருப்பு), சிங்கராசா(ஆசிரியர் அல்வாய் வடக்கு றோ.க.த.க வித்தியாலயம்) , விமலராசா (தலைவர், தமிழ் அமையம், நியூஜெர்சி, ஐக்கிய அமெரிக்கா), கமலராசா (உருத்திபுரம்), ஆகியோரின் அன்புச் சகோதரரும் அன்ரன் பெல்சிற் (ஆசிரியை, பம்பலப்பிட்டி இந்துக்கல்லூரி), யசிந்தா, ஜெனிஸ்மலசோதி (ஆசிரியை, யாழ். தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி), றெஜிவிஜிலா, கலைச்செல்வி (ஆசிரியை, யாழ் மேலப்புலோலி சைவப்பிரகாசர் வித்தியாலயம்), மரியகேளி (ஐக்கிய அமரிக்கா), அமலநாயகி ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை இன்று (07.07.2016) வியாழக்கிழமை பி.ப 3.30 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று புனித பற்றிமா அன்னை ஆலயத்தில் (உருத்திரபுரம்) இரங்கல் திருப்பலி ஒப்படைக்கப்பட்டு உருத்திரபுரம் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

எஸ். தேவராசா (இலங்கை)
077 656 9554
எஸ். விமலராசா (அமெரிக்கா)
00 197 387 82224

தகவல்:
குடும்பத்தினர்

## மரண அறிவித்தல்கள்

### திரு. ஆறுமுகம் சுப்பிரமணியம்

(ஓய்வு பெற்ற மதுவரி உத்தியோகத்தர், சமாதான நீதவான் மத்தியஸ்தர்சபை உறுப்பினர்)

தோற்றம்
27 . 07 . 1937



மறைவு
05 . 07 . 2016

அராலி வடக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட ஆறு முகம் சுப்பிரம்மணியம் 05.07.2016 செவ்வாய்க் கிழமை சிவபதமடைந்தார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் தொடர்பான விவரம் பின்னர் அறிவிக் கப்படும். இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

அராலி வடக்கு,
வட்டுக்கோட்டை.

தகவல்:
குடும்பத்தினர்.

### திருமதி சிரோன்மணி சந்திரசேகரம்

(ஓய்வு பெற்ற சங்கீத ஆசிரியை, இசைமாணி-அண்ணாமலை பல்கலைக்கழகம்- இந்தியா)



நாமகள் ஒழுங்கை, கொக்குவில் கிழக்கைப் பிறப்பிட மாகவும் வசிப்பிட மாகவும் கொண்ட திருமதி சிரோன்மணி சந்திரசேகரம் 05.07.2016 செவ்வாய்க் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சந்திரசேகரத்தின் அன்பு மனைவியும் சந்திரிகா, மேனகா (டென்மார்க்), சகுந் தலை (ஜேர்மனி), பூங்கோதை (ஜேர்மனி), ரகுராமன் (சுவிற்ஸர்லாந்து) ஆகியோரின் அன்புத் தாயாரும் ஜெயலிங்கம் (டென்மார்க்), திருஞானசம்பந்தர் (ஜேர்மனி), குகன் (ஜேர்மனி), டிலுக்கா (சுவிற்ஸர்லாந்து) ஆகியோரின் அன்பு மாமியும் காலஞ் சென்றவர்களான ஜெயமணி, ருக்மணி மற்றும் வரதராஜன் (ஓய்வுபெற்ற ஆசிரிய ஆலோசகர்), வனிதாமணி ஆகியோரின் அன்புச் சகோதரியும் புருசோத்தமன் . சிந்து, பைரவி, அபிராமி, பார்த்திபன், சிவகாமி, ராகவேந்தர், பாலமஞ்சரி, ஆராதனா, கௌதம் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07.07.2016) வியாழக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பிற்பகல் 3.00 மணியளவில் கொக்குவில் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

நாமகள் ஒழுங்கை,
கொக்குவில் கிழக்கு.

தகவல்:
குடும்பத்தினர்

### திருமதி இக்கினேஸ் அம்மா பஞ்சலிங்கம்

பிறப்பு
28 . 07 . 1948



இறப்பு
06 . 07 . 2016

17/2 மத்தியூஸ் வீதி, யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் 8 ஆம் வட்டாரம், மந்துவில், புதுக்குடியிருப்பை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இக்னேஸ்அம்மா பஞ்சலிங்கம் நேற்று (06.07.2016) புதன்கிழமை காலமானார்.

அன்னார் பஞ்சலிங்கத்தின் அன்பு மனைவியும் ஜஸ்ரின் ராஜேந்திரா (பிரான்ஸ்), ஜஸ்ரின் கஜேந்திரா (பிரான்ஸ்), ஜெஸ்மின் (வவுனியா), ஜெமிளா, சர்மிளா (சிசோனி பிரான்ஸ்), தட்சாயினி ஆகியோரின் அன்புத் தாயாரும் கிருபாகரன், ஜெயரட்ணம், மேரிசர்மிளா (பிரான்ஸ்), உதயராணி (இந்தியா), அரவிந்தன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (07.07.2016) வியாழக்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு புதுக்குடியிருப்பு சூசையப்பர் சேமக்காலைக்கு நல்லடக்கத்திற்காக எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
கணவர் வீ. பஞ்சலிங்கம்
077 857 1330

(சி/ 24130)(12.18.17)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கண்ணீர் அஞ்சலி



எமது சக நண்பன் **அன்ரன் றஜோ**வின் (Territory Manager Abbott Lab) அன்புத் தந்தை

**தோமஸ் விமல் விக்ரமன்**

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கு குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கின்றோம்

அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**வடமாகாண மருத்துவப் பிரதிநிதி நண்பர்கள்.**

## மரண அறிவித்தல்கள்

## தாமு கனகரத்தினம்



சங்குவேலி வடக்கு, மானிப்பாயைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட தாமு கனகரத்தினம் நேற்று (06.07.2016) புதன்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற வர்களான தாமு ஞானம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான அற்புதசீலன், செல்வரத்தினம், இராசன் மற்றும் திரவியம் ஆகியோரின் சகோதரனும், சந்திரவதனியின் அன்புக் கணவரும், சுகந்தன், சுரேஸ், ராஜீவ், சந்திரபோஸ், கேமதர்சிகா, லக்சிகா ஆகியோரின் அன்புத் தந்தையும், சுதர்சன், கோபிநாத் ஆகியோரின் பேரனும், பரமு-புஸ்பம் தம்பதியரின் மருமகனும், தவப்பிரியா, சுகந்தி ஆகியோரின் அன்பு மாமனும் ஆவார்.

.அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று (07.07.2016) வியாழக்கிழமை பி.ப. 4.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் மல்லாகம் சேமக்காலையில் நல்லடக்கம் செய்வதற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தொடர்புகளுக்கு:**
**077 4161600, 077 9599070**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

## ஆலாலசுந்தரம் பாலச்சந்திரன் (Bala)



வட்டுக்கோட்டையைப் பிறப்பிடமாகவும் அளவெட்டியை வசிப்பிடமாகவும் கொண்ட ஆலால சுந்தரம் பாலச்சந்திரன் கடந்த (04.07.2016) திங்கட்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஆலாலசுந்தரம்-திரவியம் தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான ஐயாத்துரை-அன்னலட்சுமி தம்பதியரின் அன்பு மருமகனும், விக் னேஸ்வரி (ரஞ்சி)யின் அன்புக் கணவரும், கவிதாவின் (இலங்கை நீதிபதிகள் நிர்வாகம், கொழும்பு) அன்புத் தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07.07.2016) வியாழக்கிழமை பி.ப. 2.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மல்லாகம் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**வேளாவை,**
**அளவெட்டி மத்தி,**
**அளவெட்டி.**

**தகவல்:**
**குடும்பத்தினர். மகள்**

## தோமஸ் விமல் விக்ரமன்

**(யோகரட்ணம்- ஆட்டோ சாரதி)**



நாவாந்துறையைப் பிறப்பிடமாகவும், நவாலி தெற்கு, மானிப்பாயை வசிப்பிடமாக வும் கொண்ட தோமஸ் விமல் விக்ரமன் நேற்று (06.07. 2016) புதன்கிழமை காலமானார்.

அன்னார் மேரியோசேப்பின் அன்புக் கணவரும், அன்ரன் றஜோ (Territory Manager Abbott Lab) அன்புத் தந்தையும், காலஞ் சென்ற தோமஸ் (துரைராஜா) சின்னப்பிள்ளை தம்பதியரின் ஏக புத் திரனும், தங்கராணியின் (பிரான்ஸ்) அன்புச் சகோதரனும், காலஞ்சென்ற நீக்லஸ், செல்வகுமார், யேசுநாயகி, மேரிநாயகி, அருள்நேசன் (லண்டன்) ஆகியோரின் மைத்துனரும், காலஞ் சென்ற மரியதாஸ் மற்றும் ஆரோக்கிய நாதன் ஆகியோரின் சகலனும், லூர்த்துநாயகி, மரியதாஸ் (லண்டன்) ஆகி யோரின் சகோதரனும், பிரான்ஸைச் சேர்ந்த திலகம் அனிஷ், ஜெயம் கிரிஷ்ரி ராஜன், நிக்ஷன் மொரிஷ் ஆகியோரின் மாமனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (07.07.2016) வியாழக்கிழமை பி.ப.3மணிக்கு நல்லடக்க ஆராதனைக்காக நவாலி சென் பீற்றேஸ் தேவாலயத்துக்கு எடுத்துச்செல்லப்பட்டு நவாலி சென். பீற்றர் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**நவாலி தெற்கு, மானிப்பாய்.**

**தகவல்:**
**அன்ரன் றஜோ (மகன்)**
**077 2487827**

## இராணுவத்தைத்

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

காணப்பட்ட சட்டத்தின் அடிப்படையிலேயே தண்டனை வழங்க முடியும். சிறப்பு நீதிமன்றங்களை இப்போது உருவாக்கி அந்தச் சட்டங்களின் ஊடாகத் தண்டிக்க முடியாது.

## மரண அறிவித்தல்

**திருமதி பரமேஸ்வரி தம்பிஐயா**

**(ஓய்வுபெற்ற ஆசிரியை)**



**தோற்றம்**
**1935.06.24**

**மறைவு**
**2016 .07.06**

கோப்பாய் வடக்கைப் பிறப்பிடமாகவும் அரச வீதி உரும்பிராய் கிழக்கை வதிவிடமாகவும் கொண்ட திருமதி பரமேஸ்வரி தம்பிஐயா நேற்று (06.07.2016) புதன்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை சின்னத்தங்கம் தம்பதியரின் புதல்வியும், தம்பிஐயா (ஓய்வுபெற்ற ஆசிரியர்) அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான கந்தையா-செல்லமுத்து தம்பதியரின் மருமகளும், கணேசலிங்கம் (கமத்தொழில் காப்புறுதிச் சபை, யாழ்ப்பாணம்), திருநிலைநாயகி (ஆசிரியை, நீர்வேலி RCTMS ) ஆகியோரின் அன்புத் தாயாரும், ரகு நாதன் (ஆசிரியர், உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாலயம்), தெய் வேஸ்வரி (ஆசிரியை, சரவணபவானந்தா வித்தியாலயம்), ஆகி யோரின் அன்பு மாமியும், ர. சிந்துஜன், ர. விதுசன், க.ஆர்த்திகா, க. அருட்சாங்கர், ர.ஜதுசா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07.07.2016) வியா ழக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் பி.ப. 3.00 மணிக்கு தகனக்கிரியைக்காக உரும்பிராய் இளங்காடு இந்து இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளவும்.

**அரச வீதி, உரும்பிராய் கிழக்கு,**
**உரும்பிராய், 021 223 0495,**
**077 3839 960**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

## கண்ணீர் அஞ்சலி

**அமரர் சுப்பிரமணியம் மகேந்திரராசா**



02.07.2016 அன்று சிவபதமடைந்த எமது பாடசாலையின் ஓய்வுநிலை ஆசிரியரும், நலன்விரும்பியுமான

**சுப்பிரமணியம் மகேந்திரராசா**

அவர்களின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திப்பதோடு அவரது இழப்பால் துயருற் றிருக்கும் அவரது குடும்பத்துக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

**பாடசாலைச் சமூகம்,**
**யாழ் நாவற்குழி மகா வித்தியாலயம்.**

## அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு

கடந்த 26.05.2016 அன்று சிவபதம் எய்திய எமது செல்வப் புதல்வி



அமரர் செல்வி

**தர்மகுலசிங்கம் (வவா)**

**துஷியந்தி (துஷி)**

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (07.07.2016) வியாழக்கிழமை காலை 08.00 மணியளவில் கீரிமலை புனிதத்தீர்த்தக்கரையிலும் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் 09.07.2016 சனிக் கிழமை மு.ப. 10.00 மணியளவில் அவரது இல்லத்திலும் நடைபெறும் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறும் அன்புடன் அழைக்கின்றோம்.

**V.H லேன், இருபாலை.**

**குடும்பத்தினர்.**

இவ்வாறு தெரிவித்தார் முன்னாள் வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ்.

கொழும்பு என்.எம்.பெரேரா கேந்திர நிலையத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் மேற்கண்டவாறு கூறினார். அவர் மேலும் தெரிவித்ததாவது: பயங்கரவாதத்தை ஒழித்து எமக்குச் சுதந்திரமான வாழ்வை ஏற்படுத்திக் கொடுத்த இராணுவத்தினர், இன்று பெரும் பிரச்சினைக்கு முகம் கொடுக்கின்றனர். ஜெனிவாவில் இலங்கைக்கு எதிராகக் கொண்டு வரப்பட்ட தீர்மானம் ஓர் இணக்கப்பாட்டுடன்தான் ஏற்கப்பட்டது. இதில் இலங்கை அரசு, அமெரிக்கா, மனித உரிமைகள் சபை ஆகிய மூன்று தரப்புக்கள் உள்ளடங்குகின்றன. இது ஒரு முத்தரப்பு உடன்படிக்கையாகும்.

இலங்கை தொடர்பில் வாக்குறுதிகளைப் பன்னாட்டுக்குக் கொடுத்தது யார்? என்பது தெளிவுபடுத்தப் படவேண்டும். ஜனாதிபதி, பிரதமர் ஆகியோர் ஐ.நா. தீர்மானம் தொடர்பில் மாறுபட்ட கருத்துகளைத் தெரிவிக்கின்றனர். இந்தத் தீர்மானத்துக்கு இலங்கை அரசுதான் இணை அனுசரணை வழங்கியது. இணக்கப்பாடு இல்லாமல் எவ்வாறு இவ்வாறான வாக்குறுதிகளை வழங்க முடியும்? இவ்வாறான தீர்மானத்தைக் கொண்டுவர யார் அதிகாரத்தை வழங் கியது?

இது இலங்கையின் யோசனைதான். அமெரிக்காவின் யோசனை அல்ல. ஒவ்வொரு தனிநபர்களுக்கும் எதிராக வழக்குத் தொடர முடியுமென யோசனையில் கூறப்பட்டுள்ளது.

கொத்துக் குண்டுகள் பாவிக்கப்பட்டுள்ளதாக ஐ.நா. ஆணையாளர் கூறுகின்றார். இது முற்றிலும் பொய்யானது. கொத்துக் குண்டுகள் பாவிக்கப்பட்டமைக்குச் சாட்சி உள்ளது என்று அவர் கூறுகின்றார். இது அரசியல் நாடகமாகும் - என்றார். (வ-5)

## கைது வேட்டையை

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கைது செய்யப்பட்டார். அதற்கு முன்னதாக அவரது கணவன் ஒட்டுசுட்டான் நகரப் பகுதியில் வைத்துக் கைது செய்யப்பட்டார். இவர்கள் கைது செய்து கொண்டு செல்லப்படுவதைத் தாம் நேரில் கண்டனர் என அந்தப் பகுதி மக்கள் தெரிவித்தனர். சாவித்திரியைக் கைது செய்யும் போது பெண் பொலிஸார் சம்பவ இடத்தில் இருக்கவில்லை என்றும் சுட்டிக் காட்டப்பட்டது.

"கைது நடவடிக்கைக்கும் எமக்கும் எந்தத் தொடர்பும் இல்லை. வவுனியாவில் இருந்து வருகை தந்த பயங்கரவாத விசாரணைப் பிரிவினரால் கைது செய்யப்பட்டனர்" என்று ஒட்டுசுட்டான் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தெரிவித்தார்.

பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்கும்படி, இலங்கை தொடர்பான ஐ.நா. மனித உரிமைகள் சபைத் தீர்மானம் வலியுறுத்தியிருந்தது. இந்தத் தீர்மானம் தொடர்பில் கடந்த வாரம் வாய்மூல அறிக்கையை முன்வைத்த ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர், இலங்கை வாக்குறுதியளித்தபடி பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்கவில்லை என்று சுட்டிக்காட்டியிருந்தார். பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் இடம் பெற்ற கைதுகள் சில மீண்டும் வெள்ளை வான் கடத்தல்களை ஞாபகப்படுத்தின என்ற விமர்சனங்களுக்கு வழி வகுத்தது என்றும் அவர் சுட்டிக் காட்டியிருந்தார்.

ஐ.நா. மனித உரிமைகள் சபை அமர்வு முடிவடைந்துள்ள நிலையில் பயங்கரவாதத் தடுப்புப் பொலிஸார் மீண்டும் தமது கைது வேட்டையை ஆரம்பித்துள்ளனர். இந்த வருட ஏப்ரல் மாதத்தில் மட்டும் 33 பேரை இவர்கள் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்திருந்தனர்.(உ-5,21,ரி7,102)

## பஸ்

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கிடைக்கப்பெற்றுள்ள ஏனைய கருத்துக்கள் முன்மொழிவுகள் ஆகியவற்றை கவனத்தில் கொண்டு, அந்தக் குழுவினால் வழங்கப்படுகின்ற பரிந்துரைகள் அமைச்சரவையில் முன்வைக்கப்படும். பஸ் கட்டண மாற்றங்கள் தொடர்பில் அமைச்சரவையினால் எடுக்கப்படுகின்ற முடிவுகளை போக்குவரத்து அமைச்சர் வெளியிடுவார் - என்றார் ஜனாதிபதி.

தேசிய போக்குவரத்து ஆணைக் குழுவினாலோ அல்லது ஏனைய மாகாண, வீதி மற்றும் மக்கள் போக்குவரத்து அதிகார சபைகளினாலோ மறு அறிவித்தல்வரை தனியார் பஸ்களுக்கான புதிய போக்குவரத்து உரிமைப்பத்திரம் வழங்கப்படமாட்டாது என்றும் கலந்துரையாடலின்போது இணக்கம் காணப்பட்டது.

இந்த கலந்துரையாடலில் போக்குவரத்து அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா, மாகாணங்களின் போக்குவரத்து அமைச்சர்கள் உள்ளிட்ட அரச அதிகாரிகளும் கலந்து கொண்டனர். (வ-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சூழல் மாசடையும் வகையில் செயற்பட்ட இருவருக்கு தண்டம்

முல்லைத்தீவு, ஜூலை 7
சுற்றுச்சூழல் மாசடையும் வகையில் பஸ் போக்கு வரத்து சங்க அலுவல கத்தையும் பஸ் தரித்து நின்ற இடத்தையும் வைத்தி ருந்தசங்கத்தலைவரையும் தனியார் பஸ் சாரதியையும் முல்லைத்தீவு நீதிவான் மன்றம் கடுமையாக எச் சரிக்கை செய்தது.

இந்தக் குற்றச்சாட்டுக்கு அவர்கள் இருவருக்கும் தலா ஆயிரத்து 500 ரூபா தண்டம் விதித்து உத்தர விட்டார் நீதிவான்.

முல்லைத்தீவு-மணற்குடி யிருப்புப் பகுதியில் தனியார் பஸ் போக்குவரத்துச் சங்க அலுவலகமும் பஸ் நிறுத்தி வைத்த இடத்தையும் சுற் றுச்சூழல் மாசடையும் வகையில் வைத்திருந்த தாக பஸ் சங்கத் தலை வருக்கும் தனியார் பஸ் சாரதிக்கும் எதிராக முல் லைத்தீவு பொதுச்சுகாதார பரிசோதகர் ஆ.சுரேஸ் ஆனந்தனால் முல்லைத் தீவு நீதிவான் மன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப் பட்டது.

இந்த வழக்கிலேயே இவ் வாறு நீதிமன்று உத்தர விட்டது. (வ-115)

## கண்ணீர் அஞ்சலி



எமது நிறுவனத்தில் தொழில் நுட்ப உத்தியோகத்தராக (T.O) பணிபுரியும் **கனகரத்தினம் ராஜீவ்** அவர்களின் அன்புத் தந்தையார்

**தாமு கனகரத்தினம்**

அவர்களின் மறைவினால் துய ருற்றிருக்கும் குடும்பத்தின ருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத் தைத் தெரிவித்துக் கொள்கின் றோம்.

அன்னாரின் ஆத்மா சாந்திய டைய இறைவனைப் பிரார்த்திக் கின்றோம்.

STAR ENGINEERING
CONSTRUCTION, JAFFNA

## மரண அறிவித்தல்

### சங்கரப்பிள்ளை நடராஜா



சாவகச்சேரியைப் பிறப்பிடமாக வும், ஏழாலை மற்றும் கொக்குவிலை வசிப்பிடமாகவும் கொண்ட சங்கரப் பிள்ளை நடராஜா நேற்று (06.07. 2016) புதன்கிழமை காலமாகிவிட் டார்.

அன்னார்காலஞ்சென்றவர்களான சங்கரப்பிள்ளை சிவபாக்கியம் தம்பதி யரின் அன்பு மகனும், காலஞ் சென்ற வர்களான அம்பலவாணர் - முத்துப் பிள்ளை தம்பதியரின் அன்பு மருமக னும், தங்கரத்தினத்தின் அன்புக் கண வரும், சிவயோகம், சிவமலர், காலஞ் சென்ற நாகராசா ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்ற ஆறு முகம்பிள்ளை மற்றும் கந்தசாமி, செல்வம் ஆகியோரின் மைத்துனரும், ரவிசங்கர் (ஜேர்மனி), சிவரூபி (கனடா), சிவகலா (கொக்குவில்) ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்ற சிவபாதம் (கோகுலன்), சாந்தி (ஜேர்மனி), சத்தியமூர்த்தி (முகாமையாளர், மக்கள் வங்கி, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்) ஆகியோரின் மாமனாரும், ராக்கேஷ், சபிக்ரா, நிரோசா (கனடா), விதுரன் (ஜேர்மனி), கபிலன் (ஜேர்மனி), நிரோஷன், சாருஷன், மயூரி ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07.07.2016) வியாழக்கிழமை பி.ப. 3.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக கொக்குவில் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.


இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்: சத்தியமூர்த்தி (முகாமையாளர், மக்கள் வங்கி, ஸ்ரான்லி வீதி)**
**021 205 2676, 077 169 8073**

**விதானையார் வீதி,**
**கொக்குவில் கிழக்கு.**

## மரண அறிவித்தல்

### கார்த்திகேசு சின்னராசா



தோப்பு, அச்சுவேலியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கார்த்திகேசு சின்னராசா நேற்று (06.07.2016)புதன்கிழமை காலமானார்.

அன்னார் சி.தங்கவடிவேல் (பூநகரி மத்திய கல்லூரி ஆசிரியர்) அவர்களின் அன்புத் தந்தையாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07.07.2016) வியாழக்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மு.ப 10.00 மணியளவில் தோப்பு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்:**
**சி.தங்கவடிவேல்** (மகன்)
(பூநகரி மத்திய கல்லூரி ஆசிரியர்)

**தோப்பு, அச்சுவேலி.**

## மரண அறிவித்தல்

### திருமதி பரமேஸ்வரி காலிங்கராசா

தோற்றம்
23 . 02 . 1936



மறைவு
06 . 07 . 2016

இணுவில் கிழக்கு, அங்கிலிப்பாயைச் சேர்ந்த திருமதி பரமேஸ்வரி காலிங்கராசா நேற்று (06.07.2016) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஐயாத்துரை-இரத்தினம் தம்பதியரின் மூத்த புதல்வியும், காலஞ்சென்ற காசிப்பிள்ளை - நாகம்மா தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற காலிங்கராசாவின் அன்பு மனைவியும், புவனேஸ்வரி, உலகநாதன், கருணைநாதன், ஞானசவுந்தரி, ஸ்ரீரங்க நாதன், சகலகலாவாணி, அகிலாண்டநாயகி, காசிநாதன், அருள்நாதன், இராசமனோகரி ஆகியோரின் அன்புத் தாயாரும், கனகசபை, அருந்தவராணி, மலர்மாலை, சந்திரன், சந்திரகலா, ரஞ்சினகுமார், விஜயகுமார், சுமதி, சிவகலா, சின்னராசா ஆகியோரின் அன்பு மாமியும், சுதன், பிரியதர்சினி, கமலஹாசன், கமலஹாசினி, கமலினி, றஜீவ், கஜேந்திரன், கஜவிந்தன், கார்த்திகன், விஜிதா, கவிதா, சயந்தன், நிரோசன், சிந்துஜா, சுகன்ஜா, சரண்யா, சுபா, சாரங்கன், இன்பராஜ், நிஷாந்தன், வைஷ்ணவி, பிருந்தாபன், பிரியங்கன், அஜிந்தா, துர்க்கா, துவாரகா, கஜேந்திரன், கஜீபன், சுருதி, சங்கீதன், வித்தகன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், சுஜிதரன், சுஜீபன், சபிசன், அஸ்வினா, அஸ்மிதா, அஸ்வதி, ஆதி, தமீரா, ரயன், ஜெய்தா, அரோன், அஜீன், யஸ்மிதா, யஸ்வின், றெனோ, கபி ஆகியோரின் பூட்டியும், சரஸ்வதி, மகேஸ் வரன், காலஞ்சென்ற யோகேஸ்வரி மற்றும் விக்னேஸ்வரன், சிவகுமார் ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்ற கனகலிங்கம், சாரதாதேவி, வேலாயுதபிள்ளை, பஞ்சவர்ணம், சரோஜாதேவி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (08.07.2016) வெள்ளிக்கிழமை பி.ப. 2.00 மணிக்குஅவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக காரைக்கால் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
**குடும்பத்தினர்.**

**இணுவில் தெற்கு, இணுவில்.**
**சுன்னாகம்.**

## மரண அறிவித்தல்

### திருமதி பரமேஸ்வரி இராசதுரை



அத்தியடியைப் பிறப்பிடமாகவும் கோண்டாவில் மேற்கை வசிப்பிட மாகவும் கொண்ட திருமதி பரமேஸ்வரி இராசதுரை நேற்று (06.07. 2016) புதன்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற இராசதுரையின் அன்பு மனைவியும், காலஞ் சென்ற பத்மாவதி, பரமேஸ்வரன், இரவீந்திரன், சாந்தினி, குகேந்திரன் ஆகி யோரின் அன்பு தாயாரும், கமலா யசோமதி, செல்வகுமார், சண்சைலா ஆகி யோரின் அன்பு மாமியும், லக்சான், சாகித்தியா, தர்மினி, பவித்திரா, தர்சன், ஜானுஜா ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07.07.2016) வியாழக்கிழமை முற்பகல் 11.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக காரைக்கால் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப் படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற் றுக்கொள்ளவும்.

**முத்தட்டு மட வீதி,**
**கோண்டாவில் மேற்கு,**
**கோண்டாவில்.**

தகவல்:
**மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**
**077 8782922, 077 836 5655**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Facebook : UTHAYAN.PRINT
Twitter : UTHAYANPRINT

# எஞ்சலிக் கெர்பர் அபார ஆட்டம்

விம்பிள்டன் தொடரில் பெண்கள் ஒற்றையர் பிரிவு ஆட்டத்தில் காலிறுதிக்கு முன்னேறினார் கெர்பர்.
காலிறுதிக்குத் தகுதிபெறும் நான்காவது சுற்று ஆட்டத்தில் ஏஞ்சலிக் கெர்பரும், மிசாகியும் மோதினர்.
முதலிரு செற்களையும் முறையே 6:3, 6:1 என்ற புள்ளிகள் அடிப்படையில் கைப்பற்றிய கெர்பர், 2:0 என்ற நேர் செற் கணக்கில் வெற்றிபெற்று காலிறுதிக்குத் தகுதி பெற்றார்.
இந்த ஆட்டம் வெறும் 64 நிமிடங்கள் மட்டுமே நீடித்தது. (ம)





# அத்தனையும் தோல்வி இலங்கையின் நிலை இது

இங்கிலாந்து அணிக்கெதிரான ரி-20 தொடரையும் இழந்து நாடு திரும்புகிறது இலங்கை.
இங்கிலாந்து - இலங்கை அணிகளுக்கு இடையிலான ரி-20 ஆட்டம் நேற்று நடைபெற்றது. நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற இலங்கை, முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது.
13 ஓட்டங்களுடன் பவிலியன் திரும்பினார் குசல் பெரேரா. குணதிலக சிறிது அடித்தாடினாலும் அவரால் முடிந்தது 26 ஓட்டங்கள் மட்டுமே. மெண்டிஸ், சந்திமல் இருவரும் 20 ஓட்டங்களைக் கடந்து கௌரவ நிலையை அடைய வைத்தனர்.
ஆனால், சந்திமல், தான் குவித்த 23 ஓட்டங்களுக்காக 22 பந்துகளை எடுத்துக் கொண்டமை ரி-20 ஆட்டங்களைப் பொறுத்தமட்டில் பின்னடைவே. மத்தியவரிசையின் அதிரடி வீரரான சானக ஓர் ஓட்டத்துடன் ஆட்டமிழந்தார். பின்வரிசை வீரர்களாலும் மாற்றத்தை ஏற்படுத்த முடியாமல்போக, 140 ஓட்டங்களில் சகல இலக்குகளையும் இழந்தது இலங்கை.
பந்துவீச்சில் இங்கிலாந்து சார்பாக ஜோர்தான், டேவ்சன் இருவரும் தலா மூன்று இலக்குகளையும், பிளங்கெட் இரு இலக்குகளையும் கைப்பற்றினர்.
பதிலுக்கு களமிறங்கிய இங்கிலாந்துக்கு ஆரம்பம் படுமோசமாக அமைந்தது. ஓட்டமெதனையும் பெறாத நிலையில் றோயை போல்ட் செய்தார் மத்தியூஸ். வின்ஸும் மத்தியூஸால் ஆட்டமிழக்கச் செய்யப்பட்டார். பட்லருடன் இணைந்தார் மோர்கன். இலக்குச் சரிவு என்ற பேச்சுக்கு இடமிருக்கவில்லை. மற்றொரு இலக்கை இழக்காமல் நூறு ஓட்டங்களை எட்டியது இங்கிலாந்து. இணைப்பாட்டம் பிரிக்கப்பட்டபாடில்லை.
அவ்வப்போது பதிவான சிக்சர்களுடன் அரைச்சதம் கடந்தார் பட்லர். மேலதிக இலக்கை இழக்காமல் 15 பந்துகள் மீதமிருக்க இலங்கையை வென்றது இங்கிலாந்து. பட்லர் 73 ஓட்டங்களுடனும் மோர்கன் 47 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காதிருந்தனர்.
மூன்று ஆட்டங்களைக் கொண்ட டெஸ்ட் தொடர், ஐந்து ஆட்டங்களைக் கொண்ட ஒருநாள் தொடர், ஒரு ரி-20 ஆட்டம் இவற்றில் இலங்கை ஒரு ஆட்டத்திலேனும் இங்கிலாந்தை வீழ்த்தவில்லை.
ஒரு டெஸ்ட் ஆட்டத்தையும் ஒரு ஒருநாள் ஆட்டத்தையும் சமன்செய்தமையே இலங்கையின் ஆகச் சிறந்த பெறுபேறாகும். (ம)

# டோனியின் அட்வைஸ்



இந்திய அணி டெஸ்ட்டில் பலம்பெற வேண்டும் என்று வீரர்களுக்கு ஆலோசனை வழங்கினார் மட்டுப்படுத்த ஆட்டங்களின் தலைவரான டோனி.
இந்திய அணி டெஸ்ட்டில் தற்போது சிறப்பாகச் செயற்பட்டு வருகிறது. இலங்கை, தென்னாபிரிக்கா அணிகளுக்கு எதிராக கிடைத்த வெற்றிகள் பெருமைப்பட வேண்டியவை. மேற்கிந்தியத் தீவுகளிலும் இந்திய அணியின் ஆதிக்கம் தொடரவேண்டும். தொடரைக் கைப்பற்ற வேண்டும். இளம் வீரர்களைக் கொண்ட அணி டெஸ்ட்டில் பலவீனமாக இருக்கும் என்ற எதிர்பார்ப்புக்கள் வெளியில் இருக்கத்தான் செய்கின்றன. இவ்வாறான அபிப்பிராயங்களை தவிடு பொடியாக்கி டெஸ்ட்டில் ஆதிக்கம் செலுத்த வேண்டும் என டோனி ஆலோசனை வழங்கினார். (ம)



# ரட்வன்ஸ்கா 'அவுட்' மற்றுமொரு அதிர்ச்சி

விம்பிள்டன் தொடரிலிருந்து முன்னணி வீராங்கனையான ரட்வன்ஸ்கா வெளியேற்றப்பட்டார்.
மகளிர் ஒற்றையர் பிரிவு நான்காவது சுற்று ஆட்டத்தில், பன்னாட்டுத் தரப்படுத்தலில் மூன்றாம் நிலை வீராங்கனையான போலந்தின் ரட்வன்ஸ்காவை எதிர்த்து 19 ஆவது இடத்தில் உள்ள சுலோவேக்கியாவின் சிபுல்கோவா மோதினார். முதல் செற்றை 6:3 என்ற புள்ளிகள் அடிப்படையில் ரட்வன்ஸ்கா கைப்பற்றினார். ஆனால் அடுத்த இரு செற்களும் அவருக்கு பெரும் சோதனையாக அமைந்தன. இரண்டாவது செற்றை 7:5 என்ற புள்ளிகள் அடிப்படையில் கைப்பற்றிய சிபுல் கோவா மூன்றாவது செற்றையும் 7:5 என்ற புள்ளிகள் அடிப்படையில் கைப்பற்றி 2:1 என்ற செற் கணக்கில் வெற்றிபெற்றார். (ம)


# விம்பிள்டன் ரென்னிஸ் தொடர்; அரையிறுதிக்கு செரீனா தகுதி

நடைபெற்றுவரும் விம்பிள்டன் ரென்னிஸ் தொடரில் பெண்கள் ஒற்றையர் பிரிவு ஆட்டத்தில், அரையிறுதிக்குத் தகுதி பெற்றார் செரீனா வில்லியம்ஸ். கிராண்ட்ஸ்லாம் தொடர்களில் ஒன்றான விம்பிள்டனின் நடப்புச் சம்பியனும், பன்னாட்டுத் தரப்படுத்தலில் முதலிடத்தில் உள்ள வீராங்கனையுமான அமெரிக்காவின் செரீனா வில்லியம்ஸை எதிர்த்து மோதினார் ரஷ்ய வீராங்கனை எலீனா. முதல் செற்றை 6:4 என்ற புள்ளிகள் அடிப்படையில் கைப்பற்றினார் செரீனா வில்லியம்ஸ். இரண்டாவது செற்றையும் செரீனா கைப்பற்றிவிட்டால் நேர் செற் வெற்றி பெற்று அரையிறுதிக்குத் தகுதி பெற்றுவிடலாம். எனவே எலீனாவுக்கு வாழ்வா? சாவா? நிலை உருவானது. இரண்டாவது செற்றையும் 6:4 என்ற புள்ளிகள் அடிப்படையில் கைப்பற்றிய செரீனா, 2:0 என்ற நேர் செற் கணக்கில் வெற்றிபெற்று அரையிறுதிக்குத் தகுதி பெற்றார். (ம)



# லாசன் மீது வழக்கு தொடர்ந்தார் சாமுவேல்ஸ்

மேற்கிந்தியத் தீவுகளின் மர்லன் சாமுவேல்ஸ் ஜமைக்காவின் நிழலுலக கிரிமினல்களுடன் தொடர்புடையவர் என்று ஆஸ்திரேலிய முன்னாள் வீரர் ஜெப்லாசன் தெரிவித்ததையடுத்து, அவர் மீது சாமுவேல்ஸ் அவதூறு வழக்கு தொடர்ந்தார்.
"மேற்கிந்திய தீவுகளின் கிங்ஸ்டனைச் சேர்ந்தவர் மார்லன் சாமுவேல்ஸ். கிங்ஸ்டன் உலகின் கொலைகார நகரங்களில் முதன்மையானது. எனவே ஜமைக்காவின் நிழலுலக குற்றவாளிகள் கும்பலுடன் சாமுவேல்ஸுக்கு நேரடித் தொடர்பு உண்டு" என்று சில தினங்களுக்கு முன்னர் தெரிவித்தார் லாசன். இதனையடுத்து சாமு வேல்ஸ், லாசன் மீது அவதூறு வழக்கை தொடர்ந்தார்.
சாமுவேல்ஸுக்கும் ஆஸ்திரேலியாவின் முன்னாள் சுழல் ஜாம்பவானான சேன் வோர்னுக்கும் இடையே சில கருத்து முரண்பாடுகள் உள்ளன. இருவரும் அவ்வப்பொழுது நேரடியாகவும் வார்த்தை மோதலில் ஈடுபடுவார்கள். இதனால் தனது சக வீரரான வோர்னுக்கு ஆதரவு தெரிவிக்கும் விதத்திலும் ஜெப்லாசன் மேற்கண்டவாறு தெரிவித்திருக்கலாம் என்றும் சில கணிப்புக்கள் உள்ளன. (ம)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இன்றைய மோதல்கள்

யாழ்ப்பாணம், ஜூலை 7

**கழுகுகளின் தொடர்**

நெற்கொழு கழுகுகள் விளையாட்டுக் கழகம் நடத்தும் கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் குறித்த கழகத்தின் மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று வியாழக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் பனங்கட்டுக்கொட்டு சென்.ஜோசெப்அணியை எதிர்த்து மணற்காடு சென். அன்ரனிஸ் அணி மோதவுள்ளது.

**சரஸ்வதியின் கால்பந்தாட்டம்**

அரியாலை சரஸ்வதி சனசமூக நிலையத்தின் 97ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நடத்தப்படும் விலகல் முறையிலான கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் அரியாலை கால்பந்தாட்டப் பயிற்சி நிலைய மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று வியாழக்கிழமை மாலை 4 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் பாசையூர் சென். அன்ரனிஸ்அணியை எதிர்த்து மயிலங்காடு ஞானமுருகன் அணி மோதவுள்ளது. (ம-108-23)

## ஜோசவாஸ்நகர் ஐக்கிய அணி சொந்தத் தொடரில் சம்பியன்



யாழ்ப்பாணம், ஜூலை 7

ஜோசவாஸ்நகர் ஐக்கிய விளையாட்டுக் கழகம் நடத்திய கால்பந்தாட்டத் தொடரில் அந்த அணியே சம்பியனானது.

கழக மைதானத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற இந்த இறுதி ஆட்டத்தில் பனங்கட்டுக் கொட்டு சென். ஜோசெப் அணியை எதிர்த்து ஜோச வாஸ்நகர் ஐக்கிய அணி மோதியது. ஆட்டத்தின் முதல் நிமிடத்திலேயே ஐக்கியத்தின் ஜோன்சன் அணியின் ஆதிக்கத்தை ஆரம்பித்து வைத்தார். மாற்றங்கள் ஏதும் நிகழாத நிலையில் 1:0 என்று ஐக்கியத்தின் ஆதிக்கத்துடன் முடிந்தது முதல் பாதி.

ஆதிக்கத்தை தொடரும் முனைப்பில் ஐக்கியம். பதிலடி கொடுக்கவேண்டிய கட்டாயத்தில் ஜோசெப். ஆரம்பமானது இரண்டாம் பாதி. நிமிடங்கள் உருண்டோட ஓர் முனையில் ஐக்கியத்தின் வெற்றியும் ஜோசெப்பின் பதற்றமும் அதிகரித்துக் கொண்டிருந்தன.

இரண்டாம் பாதியிலும் மாற்றங்கள் நிகழவில்லை. முடிவில் 1:0 என்ற கோல் கணக்கில் சொந்தத் தொடரில் கிண்ணத்தை வென்றது ஜோசவாஸ்நகர் ஐக்கிய அணி. நிகழ்வுக்குப் பிரதம விருந்தினராகத்துறைமுகங்கள் மற்றும் கப்பல்துறை அலுவல்கள் அமைச்சர் ரணதுங்க கலந்துகொண்டார். (ம-23)



## மொகமட் சமிக்கு கோக்லி புகழாரம்

டெஸ்ட் ஆட்டங்களில் பந்துவீசும் அளவைத் துல்லியமாகத் தெரிந்து வைத்திருப்பவர் மொகமட் சமி என்று விராட் கோக்லி புகழாரம் சூட்டினார்.

இந்தியா-மேற்கிந்தியத் தீவுகளுக்கு இடையேயான நான்கு ஆட்டங்களைக் கொண்ட டெஸ்ட் தொடர் இந்த மாதம் 21ஆம் திகதி ஆரம்பமாகிறது. இந்தத் தொடருக்கான இந்திய அணி மேற்கிந்தியத் தீவுகளுக்கு நேற்றுப் புறப்பட்டுச் சென்றது. இந்த நிலையிலேயே கோக்லி இவ்வாறு தெரிவித்தார்.

சமி பலம் வாய்ந்த வீரராக அணிக்குத் திரும்பியுள்ளார். அவர் வேகப்பந்து வீச்சு வரிசையைப் பலப்படுத்துவார் என்பதில் எனக்குச் சந்தேகமில்லை. ஒருநாள் ஆட்டங்களுக்கும் டெஸ்ட் ஆட்டங்களுக்கும் நிறைய வேறுபாடுகள் உள்ளன.

டெஸ்ட் ஆட்டங்களில் பந்துவீசும் அளவை சமி துல்லியமாகத் தெரிந்து வைத்துள்ளார். மேற்கிந்தியத் தீவுகளில் ஏராளமான வேகப்பந்து வீச்சாளர்கள் உள்ளனர். இதனால் அமைக்கப்படும் ஆடுகளங்கள் வேகப்பந்து வீச்சுக்கு சாதகமாக இருக்கும். எனவே இந்திய அணியின் பலமாக சமி நிச்சயம் இருப்பார் என கோக்லி மேலும் தெரிவித்தார். (ம)

## மேசைப்பந்தாட்டம்

கரணவாய், ஜூலை 7

யாழ். மாவட்ட மேசைப் பந்தாட்டச் சங்கம் வட மாகாண ரீதியாக மேசைப் பந்தாட்டத் தொடர் ஒன்றை முன்னெடுக்கத் திட்டமிட்டுள்ளது.

8 வயது, 10 வயது, 14 வயது மற்றும் திறந்த வயதுப் பிரிவுகளுக்கிடையில் நடைபெறவுள்ள இந்தத் தொடரில் பங்குபற்ற விரும்புவோர் யாழ். மாவட்ட மேசைப் பந்தாட்டச் சங்கத்தின் செயலாளருடன் தொடர்புகொள்ளுமாறு ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (ம-108)



ராஜேந்திரம் பிளேவியன் காப்பகத்தினால் குருநகர் பாடும்மீன் அணிக்குக் கால்பந்தாட்ட உபகரணங்கள் அண்மையில் அன்பளிப்புச் செய்யப்பட்டன. (ம-23)

## கேத்லின் தகுதி

பிரேஸிலின் ரியோ டி ஜெனிரோ நகரில் நடைபெறவுள்ள ஒலிம்பிக் தொடருக்கு அமெரிக்காவின் குறுந்தூர ஓட்ட வீரரான கேத்லின் தகுதி பெற்றார்.

அமெரிக்க வீரர், வீராங்கனைகளுக்கான தகுதிகாண் போட்டிகள் கடந்த சில நாள்களாக நடைபெற்றுவருகிறது. நேற்று நடைபெற்ற குறுந்தூர ஓட்ட வீரர், வீராங்கனைகளுக்கான போட்டியில் மிகச் சிறந்த பெறுபேற்றை வெளிப்படுத்தி கேத்லின் தகுதி பெற்றார். 2012 ஆம் ஆண்டு லண்டனில் இடம்பெற்ற ஒலிம்பிக் தொடரில் வெண்கலம் வென்ற அவர் எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் நடைபெறவுள்ள ஒலிம்பிக் தொடரில் போல்ட்டுக்குச் சவால் தரக்கூடிய வீரராகக் கணிக்கப்படுகிறார். (ம)

## சென். மேரிஸ் அரையிறுதிக்குத் தகுதி




யாழ்ப்பாணம், ஜூலை 7

அரியாலை சரஸ்வதி சனசமூக நிலையம் நடத்திவரும் கால்பந்தாட்டத் தொடரில் சென். மேரிஸ் அணி அரையிறுதிக்குத் தகுதி பெற்றது.

அரியாலை கால்பந்தாட்ட பயிற்சி நிலைய மைதானத்தில் நேற்றுமுன்தினம் மாலை 4 மணிக்கு இடம்பெற்ற இந்தக் காலிறுதியாட்டத்தில் நாவாந்துறை சென். மேரிஸ் அணியை எதிர்த்து இளவாலை சென். லூட்ஸ் அணி மோதியது.

இதில் நாவாந்துறை சென். மேரிஸ் அணி 6:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று அரையிறுதிக்குத் தகுதி பெற்றது. (ம-23)




Foundation.
aham.org

## 3ஆம் ஆண்டு நினைவலைகள்

தோற்றம்
12 . 02 . 1941



மறைவு
11 . 07 . 2013

### அமரர் விஜயரட்ணம் மகாலிங்கம்

மூன்று ஆண்டுகள் ஓடி விட்டன
நீங்கள் இல்லை என்ற நினைவுகளே
எங்களிடம் இல்லை
எப்பவும் போல இப்பவும் எங்கள்
சின்னச் சின்னச் சந்தோசங்களிலும்
பெரிய பெரிய பெறுபேறுகளிலும்
உங்கள் பங்களிப்பும் பாசமும்
எம் நினைவுகளில் இருந்து நியமெனத் தெரிகின்றது.
உங்கள் நல்லாசிகளுடன் கடமைகளைத் தொடர்வோம்.

இல. 42, 2/1,
பொன்ஸ்வெல பிளேஸ்,
வெள்ளவத்தை.
011 2361084

அன்பு மறவாத
மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள் மற்றும்
உற்றார், உறவினர்கள்.

# வரி ஏய்ப்பு விவகாரம்; மெஸ்ஸிக்குச் சிறை

ஆர்ஜென்ரீனா அணியின் முன்னாள் தலைவரும் பார்சிலோனா கழகத்தின் நட்சத்திர வீரருமான மெஸ்ஸிக்கு வரி ஏய்ப்பு விவகாரத்தில் 21 மாதங்கள் சிறைத் தண்டனை விதித்துள்ளது பார்சிலோனா நீதிமன்றம்.

மெஸ்ஸியும், அவரது தந்தையும் 2007ஆம் ஆண்டு தொடக்கம் 2009ஆம் ஆண்டு வரையிலான காலப்பகுதியில் கிட்டத்தட்ட 4.1 மில்லியன் யூரோவை வரி ஏய்ப்புச் செய்ததாக குற்றம் சுமத்தப்பட்டது. இந்த வழக்கின் விசாரணை ஸ்பெய்னின் பார்சிலோனா நகர நீதிமன்றில் நடைபெற்று வந்தது.

அண்மையில் மெஸ்ஸி நீதிமன்றுக்கு நேரடியாகச் சென்று தனது தரப்பு நியாயங்களை முன்வைத்திருந்தார். இந்த நிலையில் அவருக்கும் அவரது தந்தைக்கும் 21 மாதங்கள் சிறைத்தண்டனை வழங்கித் தீர்ப்பிட்டுள்ளது நீதிமன்று.

மெஸ்ஸியும் அவரது தந்தையும் சிறைத் தண்டனைக் காலத்தை தவிர்ப்பர் என்றே எதிர்பார்க்கப்படுகிறது. ஏனெனில், ஸ்பெய்ன் சட்டத்தின்படி, இரண்டு வருடத்துக்கு குறைவான சிறைத்தண்டனையை பெறுவோர், அதை நன்னடத்தைக் காலத்தில் கழிக்க முடியும்.

(ம)

### அல்சேசன் நாய் விற்பனைக்கு

ஜேர்மன் செப்பேட் அல்சேசன் பெண் நாயும், நாய்க்குட்டிகளும் விற்பனைக்குண்டு.
தொடர்பு: 077 6139307

## கேட்டல் கருவி திருத்தல்
## Hearing Aids Repair

அனைத்து வகையான கேட்டல் கருவிகள் உதிரிப்பாகங்களுடன் திருத்தப்படும். சகல விதமான கேட்டல் கருவிகளும் விற்பனைக்குண்டு.

இடம்: யாழ் வைத்திய சாலை,
315, பலாலி வீதி, பரமேஸ்வரா சந்தி,
திருநெல்வேலி.
தொலைபேசி: 021 222 3533/1011, 07777 81005

### வேலை வாய்ப்பு

சங்கானை Softlogic காட்சி அறைக்கு காசு சேகரிப்பாளர் தேவை.

சுயவிவரக்கோவையுடன் (09.07.2016) சனிக்கிழமை மு.ப. 10.00 மணியளவில் நேரில் வரவும்.

தொடர்பு:- 0777 348188

காரைநகர் வீதி, சங்கானை. (கொமர்சியல் வங்கி முன்பாக)

## சிறுநீரகம் தேவை

35 வயது மதிக்கத்தக்க சிறுநீரக நோயாளி ஒருவருக்கு (O+) இரத்த வகை உடைய சிறு நீரகம் தேவை. நல் உள்ளம் கொண்டோரிடம் இருந்து எதிர்பார்க்கின்றோம். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

தொடர்புகளுக்கு
076 8871068 / 076 542 1781

LORD OF THE RELOAD

Dialog

சனிக்கிழமை இரவு 9.55 க்கு வசந்தம் TV ஊடாக

# Mega அதிஷ்டம் வெற்றியாளர்கள்



ரூ.10 இலட்சம் சுப்பர் பரிசு வெற்றியாளர்
சுப்பையா ராஜேந்திரன் - மாத்தளை



எஸ். ஆனந்த ஜயலத்
வெயாங்கொடை



பீ.பீ.டீ.ஆர். உதயங்க
மஹரகம



என்.ஜீ. நுவன் அசேல
வாரியபொல



கே.கே. நீலியா காயத்திரி
ராகமை

## எதிர்வரும் வாரத்தின் சுப்பர் பரிசு ரூ.10,000,000/-

இது வரை பரிசுகளை வென்ற வெற்றியாளர்கள்
- ஒரு கோடி வென்ற வெற்றியாளர் ஒருவர்
- 3 மில்லியன் வென்ற வெற்றியாளர் ஒருவர்
- 2 மில்லியன் வென்ற 5 வெற்றியாளர்கள்
- ஒரு மில்லியன் வென்ற 52 வெற்றியாளர்கள்
- ஒரு இலட்சம் வென்ற 319 வெற்றியாளர்கள்

மேலும் பல இலட்சம் வெற்றியாளர்கள்

இலங்கை முழுவதும் அதிக வெற்றியாளர்களை உருவாக்கும் அதி பிரம்மாண்டமான பரிசுத் தொகை
வெற்றி இலக்கங்களை அறிந்து கொள்ள #121#ஐ டயல் செய்யுங்கள்.

twitter.com/dialoglk facebook.com/dialog.lk

இலங்கையின் பிரபலமான தொலைத் தொடர்பு சேவை வழங்குனர் 2016

Dialog

an axiata company www.dialog.lk

## வெற்றிடம்

மருந்தாளர்: அரச பதிவுடையவரும் (SLMC) வேலை செய்யக்கூடியவரும்.
இடம்: நெல்லியடி, யாழ்ப்பாணம், திருநெல்வேலி.
சம்பளம்: 35000/- க்கு மேல்

தொடர்பு: 077 310 7685

## SPOKEN ENGLISH

இளைஞர் யுவதிகள், O/L, A/L எழுதியோர், தொழில் தேடுவோர் அரச தனியார் ஊழியர்கள், வெளிநாடு செல்வோர் இணையமுடியும்.

ஆங்கிலத்தில் ஓரெழுத்துக்கூடத்தெரியாதவர்கள்கூட 3 மாதங்களில் எம்முடன் இணைந்து தமிழ்போல சரளமாக ஆங்கிலத்தில் பேசமுடியும்!

சனி, ஞாயிறு பிரிவுகள் ஆரம்பம் - 09. 07. 2016
1. காலை 08.00-10.00 2. காலை 10.00-12.00

வாரநாள் வகுப்புகள் (செவ்வாய், வியாழன்)
காலை 10—12

09.07.2016 வரை பதிவுகளை மேற்கொள்ளமுடியும்! ஒரு பிரிவில் 20 பேர் மட்டும்!

SAAMSON Experts in English Training
யாழ்நகர்.
021 320 3313
077 1570 486

## வேலைவாய்ப்பு

எமது புதிய ANDRA PUBLICATIONS நிறுவனத்திற்கு கீழ்க்காணும் அனுபவமுள்ள பணியாளர்கள் உடன் தேவை!

1. Cashier (கணனி அறிவுள்ளவர்கள் மட்டும்)
2. Senior Graphic Designer
3. Book Layout Designer
4. Marketing Executive

கட்டாய தகைமைகள்:
- இரண்டு வருட அனுபவமுள்ளவர்களாக இருத்தல் வேண்டும்.
- கவர்ச்சிகரமான சம்பளத்துடன் மேலதிக கொடுப்பனவுகள் வழங்கப்படும்.

சனிக்கிழமை (09.07.2016) காலை 9.00மணிமுதல் மதியம் 12.30 மணிவரை நேர்முகத்தேர்வு நடைபெறும்.

ANDRA PUBLICATIONS 379, Kasthuriyar Road, Jaffna
0776622981 | 0777481696

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 07.07.2016 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.